# ஞானச்சுடர்




ஆடி

2020

27ஆவது மலர்

வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்லிடத்துக்**
**காக்கில்என் காவாக்கால் என்.**

**பொருள் :** கோபம் பலிக்கக்கூடிய இடத்தில் அதனை எழாமல் தடுப்பவனே கோபத்தைத் தடுத்தவனாவான். அது பலியாதவிடத்து அதனைத் தடுத்தாலென்ன? தடுக்காவிட்டாலென்ன? (301)

**செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்**
**இல்லதனின் தீய பிற.**

**பொருள் :** ஒருவனது கோபம் தன்னிலும் வலியவர்மீது எழுந்தால் அது தனக்கே தீமை ஆகும்; தன்னில் மெலியவர்மீது எழுந்தாலும் பாவமும் பழியும் விளைத்தலால் அதனிலும் கெடுதியானவை வேறு இல்லை. (302)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### இன்பம் எது




**கலிவிருத்தம்**

நல்லன புரிந்திடல் நவின்றிட லின்பம்
அல்லன வஞ்சி யகற்றிட லின்பம்
புல்லியோர் பிழையெல்லாம் பொறுத்திட லின்பம்
தொல்லைக எல்லல்கள் தாங்கிட லின்பமே 10

வாய்மையும் ஆற்றலும் வளர்த்திடல் இன்பம்
தூய்மையும் அழகும் ஆர்த்திடல் இன்பம்
மேயநன் னீதி மேவிடல் இன்பம்
நேயஅன் புலகினில் நிறைந்திடல் இன்பமே 11


பாமர மக்கட் பணிசெயல் இன்பம்
தோமற அவர்வாழ் வுயர்த்துதல் இன்பம்
சேமநச் சாலைகள் நிறுவுதல் இன்பம்
வாமநூற் கலைகள் வகுத்திடல் இன்பமே 12

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

# ஞானச்சுடர்

வெளியீடு - 3

சுடர் - 271



2020 ஆடி

## பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| பயன்படாத ஓதியனையேன் | முருகவே பரமநாதன் | 01 - 05 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 06 - 08 |
| மூச்சு | கு. சிவபாலராஜா | 09 - 14 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 15 - 19 |
| சிவ சின்னங்களில் முதன்மை... | எஸ்.ரி. குமரன் | 20 - 24 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 25 - 26 |
| படைப்பினில் படிப்பினைகள் | இராம ஜெயபாலன் | 27 - 28 |
| இல்லற தர்மம் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 29 - 30 |
| புரட்டாதிச் சனிக்கிழமை விரதம் | கு. சோமசுந்தரம் | 31 - 36 |
| சைவத்தமிழ் போற்றும்... | மூ. சிவலிங்கம் | 37 - 41 |
| ஆழிமிசைக் கல்மிதப்பில்... | அ. சுப்பிரமணியம் | 42 - 46 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 47 - 48 |
| இலங்கைச் சைவர் வாழ்வில்... | கௌ. சித்தாந்தன் | 49 - 54 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 55 - 58 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 59 - 62 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# சந்நிதி வேலவன் அருள் வேண்டும்

2020 அனைவருக்குமே பல்வேறு துன்பங்களையும் துயரங்களையும் தந்து- அவரவர் வாழ்வின் நிம்மதியைக் குலைத்து - அனைவருக்கும் பயத்தையும் பீதியையும் ஏற்படுத்தி மாதங்கள் ஒன்பது கடந்து பயணிக்கிறது.

கொரோனா உச்ச காலத்திலும் - தொடர் ஊரடங்கு வேளையிலும் இருந்த துன்ப துயரங்கள் படிப்படியாகக் குறைந்து, அனைவரும் இன்று ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விடும் நிலைக்கு வந்திருப்பது முருகன் திருவருளே.

துன்ப துயரங்கள் நிறைந்த காலகட்டத்தில், பொதுவாக அனைத்துப் பொது நிகழ்வுகளும் பாதிக்கப்பட்டதுபோல, சந்நிதியான் ஆச்சிரமத்து விடயங்களையும் கொரோனா கட்டுப்படுத்தியது.

நித்திய அன்னப்பணி ஒன்றைத் தவிர - ஆச்சிரமத்தின் "ஞானச்சுடர்" வெளியீடு- வாராந்த நிகழ்வுகள் - ஏனைய விழாக்கள் ஆகிய அனைத்துமே பாதிக்கப்பட்டன.

"ஞானச்சுடர்" மாதாந்த சஞ்சிகை, வெளியீட்டு நிகழ்வுகள் எதுவுமின்றி, காலம் பிந்திய பிரதிகளாக உங்கள் கைகளுக்குக் கிட்டியிருக்கும். இது தவிர சமூக ஒன்று கூடலைத் தவிர்க்குமுகமாக சகல நிகழ்வுகளும் ரத்துச்செய்யப்பட்டமை அனைவரும் அறிந்ததே.

தற்போதைய முன்னேற்றமான சூழலில் அநேகமான பொது நிகழ்வுகளையும்- கோவில் விழாக்களையும் செவ்வனே நடாத்தி முடிக்க முடிந்தமையைக் கருத்திற் கொண்டும், எதிர்வரும் மூன்றுமாத கால முன்னேற்றத்தினை அவதானித்தும் 2021 முதல் சந்நிதியான் ஆச்சிரமத்து அனைத்து செயற்பாடுகளையும் முந்திய ஆண்டுகளைப் போன்று நடைமுறைக்குக் கொண்டுவர, ஆச்சிரம சுவாமிகளும் - சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரும் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

இதன்படி, "ஞானச்சுடர்" மாத சஞ்சிகையை அந்தந்த மாதத்திலேயே திட்டமிட்டபடி வெளிக்கொணர்ந்தும் அதேபோல ஏனைய வாராந்த நிகழ்வுகள்-- சஞ்சிகை வெளியீட்டு விழா - திருவாசக விழா போன்ற ஏனைய விழாக்கள் அனைத்தையும் வழமைபோல நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

எமது சிந்தனைகள் அனைத்தும் செயல்வடிவம் பெறவும், அனைத்து மக்களுக்கும் அமைதியான பெருவாழ்வு கிட்டவும் சந்நிதி வேலவன் திருக்கருணை வேண்டும். அனைவரும் வேலவனை வேண்டிக் கைதொழுவோம்.

# சுடர் தரும் தகவல்

"கல்வியில் முதலிடம்" என்கிற நிலைமை மாறி, இன்று வகை தொகையின்றி போதைப் பொருளின் ஊடுருவல் தலைதூக்கி தமிழர் களின் எதிர்காலச் சந்ததியை சூனியமாக்கி வருகிறது.

போருக்குப் பின்னரான தமிழர்களின் வாழ்வியல் திட்டமிட்டுத் திசை திருப்பி தமிழ் இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் போதைப் பொருட்களைத் தாராளமாகப் புழக்கத்தில் விட்டு ஒட்டுமொத்த சமூகத் தின் எதிர்காலத்தையே சீரழித்துச் சின்னாபின்னமாக்கும் முயற்சியில் வெற்றி கண்டிருக்கிறார்கள்.

ஒரு இனத்தின் இருப்பை சிதைக்க வேண்டுமெனில் அதன் கட்டமைப்புக்கள், கலாசாரங்களை, பண்பாடுகளை இல்லாதொழித்தால் அந்த இனம் விரைவிலேயே தனக்கான தனித்துவத்தை இழந்துவிடும் எனும் உண்மை தமிழ் இனத்தின் தற்போதைய போக்கில் தென்படுவது வேதனைக்குரியது.

கல்விப்புலத்தில் கொடிகட்டிப் பறந்த யாழ் கல்விச் சமூகத்தைக் குறிவைத்து போதைப் பொருட்கள் பரப்பப்படுவதன் பின்னணிகள் குறித்து நாம் இன்னும் தாமதிப்போமாக இருந்தால் எதிர்காலத்தில் வன்முறைமிக்க இளைய தலைமுறையை ஈழத்தில் உருவாக்குவதற்கு நாம் காரணமாகி விடுவோம்.

வடக்கு மக்கள் காலம் காலமாக இடப்பெயர்வுகளையும் சொத்தழிவுகளையும் சந்தித்த போதெல்லாம் அதிலிருந்து மீண்டெழ தமிழர்களின் மனோபலமே காரணமாகி நின்றது. இந்த மனோபலத்தை உடைக்கும் தந்திரோபாயமாக போதைப் பொருளை ஒரு கருவியாகக் கொண்டு வடக்கில் ஆழ ஊடுருவி தமிழ் இளைஞர் சமூகத்தை சீரழிக்கும் முயற்சிகள் அரங்கேற்றப்படும் இன்றைய நிலையில் இதிலிருந்து இளைஞர் சமூகத்தை மீட்பதற்கு யாருளர். இந்நிலையைப் பேசு பொருளாகக் கருதாமல் இளைஞர் சமூகத்தின் உயர்வுக்கு நாம் அனைவரும் ஒன்றித்து பயணித்தால் வெற்றி கிடைக்கும்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 19. மயில் வகுப்பு

ஆதவனு மம்புலியு மாசுறவி முங்கியுமி
　　　ழாலமரு வும்பணியி ரண்டு மழுதே
ஆறுமு கனைந்துமுக னானைமுக னெங்கடவு
　　　ளாமெனமொ ழிந்தகல வென்று விடுமே
ஆர்கலிக டைந்தமுது வானவர ருந்தவரு
　　　ளாதிபக வன் றுயில நந்தன் மணிசேர்
ஆயிரமி ருந்தலைக ளாய்விரிப ணங்குருதி
　　　யாகமுழுதுங்குலைய வந்த றையுமே:,

வேதமுழு தும்புகலி ராமனொரு தம்பிமிசை
　　　வீடணன ருந்தமையன் மைந்த னிகலாய்
வீசுமர வஞ்சிதறி யோடவரு வெங்கலுழன்
　　　மேலிடி யெனும்படிமு ழங்கி விழுமே
மேதினிசு மந்தபெரு மாசுணம யங்கநக
　　　மேவுசர ணங்கொடுல கெங்கு முழுமே
வேலியென வெண்டிகையில் வாழுமுர கந்தளர
　　　வேயழலெ னுஞ்சினமு டன்ப டருமே:,

போதினிலி ருந்தகலை மாதினைம ணந்தவுயர்
　　　போதனை யிரந்துமலர் கொண்டு முறையே
பூசனைபு ரிந்துகொடி யாகிமகி ழொன்றுதுகிர்
　　　போன்முடிவி ளங்கவரு மஞ்ச மடுவே
பூதரொடு கந்தருவர் நாதரொடு கிம்புருடர்
　　　பூரணக ணங்களொடு வந்து தொழவே
போரிவ வென்றுவெகு வாரணக ணங்களுயிர்
　　　போயினமெ னும்படியெ தீர்ந்து விழுமே:,

கோதகலு மைந்துமலர் வாளிமத னன்பொருவில்
　　　கோவுட லங்கருதி வெந்து விழவே
கோபமொடு கண்டவிழி நாதரணி யும்பணிகள்
　　　கூடிமன மஞ்சிவளை சென்று புகவே
கூவியிர வந்தமுணர் வாழியென நின்றுபொரு
　　　கோழியொடு வென்றிமுறை யும்ப கருமே
கோலமுறு செந்திநகர் மேவுகும ரன்சரண
　　　கோகனத மன்பொடுவ ணங்கு மயிலே.

# ஆடிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**ந. ஜவகர்லால்நேரு**
(லண்டன்)

**K. கனகசபேசன்**
(கனடா)

**செல்வி தம்பு சரோஜா**
(சங்கீத முதன்மை இளை. ஆசிரியர், நெல்லியடி)

**இ. பேரின்பநாயகன்**
(நாவலர் பாலர் பாடசாலை ஸ்தாபகர், சுதுமலை)

**Dr. V. ஸ்ரீஸ்காந்தன்**
(ரஞ்சிதா மெடிக்கல் கிளினிக், சுதுமலை)

**சி. பஞ்சலிங்கம்**
(லிகிதர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)

**வே. பாராளன்**
(தொழில் நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)

**S. தர்மரெத்தினம்**
(அதிபர், சிறுப்பிட்டி)

**ச. நவரத்தினராசவேல்**
(அதிபர், வேல்பதி, புத்தூர்)

**நா. இராசலிங்கம்**
(இளை. அத்தியட்சகர்)

**திருமதி கலாநிதி முரளிதரன்**
(யாழ்ப்பாணம்)

**ந. சேகர்**
(கிராம சேவையாளர், வீரபத்திரர்கோயிலடி, உடுப்பிட்டி)

**கு. ஸ்ரீமுருகமூர்த்தி**
(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)

**சு.பொ. நடராசா**
(அண்ணா தொழிலகம், இணுவில்)

த. கந்தசாமி
(இருபாலை வீதி, கோண்டாவில்)
செல்வி இ. வல்லிபுரம் ஆசிரியை
(நவக்கிரி)
செ. ஈஸ்வரன்
(சித்தங்கேணி)
சுப்பிரமணியம் அருளானந்தசிவம்
(அல்லாரைவீதி, மீசாலை கிழக்கு)
பாலசுப்பிரமணியன் ராகுலன்
(யாழ்ப்பாணம்)
ச. இராசரத்தினம்
(நாவலர்வீதி, யாழ்ப்பாணம்)
திருமதி மாலதி இராஜேஸ்வரன்
(உடுப்பிட்டி)
த. திருஞானசம்பந்தர்
(ஏழாலை வடக்கு)
புஸ்பநாதன் பிரதீபன்
(உரும்பராய் வடக்கு)
க. குணசிங்கம்
(சாவகச்சேரி)
இ. சிவஞானம் J.P
(புத்தூர்)
N. குலசேகரம்
(வருணன், அச்சுவேலி)
க.ம. செல்வரெத்தினம்
(நவாலி கிழக்கு, மானிப்பாய்)
சி. தனபாலசிங்கம்
(புலோலி)
ஆ. குலசிங்கம்
(இணுவில்)
சிதம்பரப்பிள்ளை அனுஜா
(அல்வாய்)
செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை
(பொலிகண்டி)

திருமதி உ. பேரானந்தம்
(தெல்லிப்பழை)
வி. சிவபாலசிங்கம்
(கரன் பான்சி, சுன்னாகம்)
க. ஸ்ரீஸ்கந்தராசா
(கிராமசேவகர், சிறுப்பிட்டி கிழக்கு)
ந. இராமருபன்
(நீர்வேலி)
மு. இராஜேந்திரன்
(முருகையா கோவிலடி, புலோலி)
பொன். சற்குணநாதன்
(வேம்பன் வீதி, உரும்பராய்)
சொ. செல்லத்துரை
(பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை)
நா. தெய்வேந்திரம்
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
வி. தவத்துரைராசா
(மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்)
சு. அனுஷியாதேவி
(முருகவாசா, சித்தங்கேணி)
சி. கணேசமூர்த்தி
(அல்வாய்)
தயானந்தன் சுஜந்தன்
(அச்சக வீதி, கொக்குவில்)
உரிமையாளர்
(சுந்தர்சன்ஸ், மானிப்பாய்)
ச. சூரியப்பெருமான்
(ராகுலசூரியன், பருத்தித்துறை)
மா. அருட்செல்வம்
(எழுதுவினைஞர், புலோலி வடமேற்கு)
ச. சிவருபன்
(சிறுப்பிட்டி)
செல்லையா சர்வேஸ்வரன்
(செல்வறங்கம், இணுவில்)

**ஆ. மகேந்திரலிங்கம்**
(வேம்போலை, இணுவில்)
**உரிமையாளர்**
(நாதன் அன் பிறதேர்ஸ், இணுவில்)
**கணேசலிங்கம் ஞானாமிர்தம்**
(குப்பிளான்)
**செல்வன் சி. கௌதமன் C/O சி. சிவபாலன்**
(யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(ரேவதி நகைமாடம், யாழ்ப்பாணம்)
**செ. வாமதேவன்**
(இணுவில் மேற்கு, இணுவில்)
**V. சேனாதிராசா**
(கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)
**பிறேமதாஸ் சசிகலா**
(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)
**செல்வி தர்மினி ரவிச்சந்திரன்**
(கட்டுடை, மானிப்பாய்)
**க. சிவஞானசுந்தரம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திருமதி பொ. இரத்தினசோதி**
(கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை)
**ச. கிருஷ்ணமூர்த்தி**
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)
**செ. அட்செயலிங்கம்**
(ஆசிரியர், அல்வாய்)
**மூ.சிவலிங்கம்**
(காரைக்கால் வீதி, இணுவில்)
**க. விகர்ணன்**
(குமரகோட்டம், கோண்டாவில்)
**R. பொன்னுராசா**
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)
**S. தர்மலிங்கம்**
(கமலபதி மாதர்சங்க வீதி, சித்தங்கேணி)
**சி. குகநாதன்**
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)

# பயன்படாத ஓதியனையேன்

– முருகவே பரமநாதன் அவர்கள் –

பூப்பந்திலே நிறைய மரம், செடி, கொடி, புல் பூண்டுகள் இருக்கின்றன. இவை மனிதத்தோடு தொடர்புடையன. பௌத்தர்கள் புனித வெள்ளரசைப் போற்றுவர். கிறீஸ்தவர் கள் கிறிஸ்மஸ் மரத்தைப் பயன்படுத்துவர். சைவ மக்களின் ஆலயங்களிலே தல விருட்சம் மேன்மையோடு மதிக்கப்படும். மூலக் கருவறையை அண்டி இவைகளைக் காண லாம். ஆல், அரசு, வேம்பு, இத்தி, கொன்றை, நறுவிலி போன்ற பல புறவளர் விருட்சங்கள் தல மரங்களாய் அமைந்துள்ளன. ஆண்டாண்டு காலமாக அவை மதிக்கப்பட்டு, பாதுகாக்கப் படும். அம்மரங்கள் நால்வரின் பாடல்களிலே இடம்பெறுகின்றன. திண்டிவனம், தில்லை வனம், திருவாலங்காடு, ஆத்தியடி, நெல்லி யடி போன்ற திருநாமங்கள் மரங்களோடு தொடர்புடையன. குற்றாலநாதர் குறும்பல வீசர் என அழைக்கப்படுவர். வில்வை, கொன்றை, வன்னி, புன்னை, பன்னீர மரங் களின் பத்திரங்கள் பூசைக்குப் பயன்படும். வேம்பு, கருங்காலி, பாலை, முதிரை, தேக்கு போல்வன பெறுமதியுள்ளவை. சந்தனம் விலைமதிப்பற்றது. நமது மண்ணின் கற்பக மரம் பனை. இடை மருது, புடை மருது, கடை மருது. முப்பெரும் பாடல் பெற்ற தலங் கள். (உ+ம்: திருவிடைமருதூர்) மல்லிகார்ச் சுனமெனவும் அழைக்கப்படும். இதழ்- கொன்றை மலர் மாலையாகவே அமைந்துள்ளது. அதன் மகரந்தப்பகுதி தாதுடைய பகுதி ஓம் போலக் காட்சிதரும். இறைவனுக்கேற்ற பூ. இப்படிப் பார்க்கின் பேராதனையில் தாவர சங்கமத் தோட்டம் அமைந்துள்ளது. உருத்திராட்ச மரம் சமைய முக்கியத்துவமானது எனலாம். கல் லால மரநீழலிலே தென்முகக் கடவுள் நால் வருக்கு அறம் உரைத்தவர். ஆலிலையிற் பள்ளிகொண்டவன் கண்ணன். எனவே வட பத்ரசாயியெனப் பெயர் பெற்றார். செல்வச் சந்நிதியிலே பூவரசே மகிமைக்குரிய தல விருட்சம். நச்சுமரம் நடுவூர் பழுத்தாலும் மக்களுக்குப் பயனில்லை. அதுபோலத்தான் சிலரின் செல்வம் பிறருக்குப் பயன்படாது. மருந்தாகித் தம்பாமரம்போற் பலர் வாழ்கின் றனர் என வள்ளுவனார் குறள் செய்துள்ளார். தேவதாரு மரம், கற்பக விருட்சம் தெய்வ லோகத்தில் இருந்து நமக்கு என்ன பயன்.

மணிவாசகப் பெருமான் குருந்த மர நீழலிலேதான் இறைவனிடம் திருவுபதேசம் பெற்றார். அந்தத் திருப்பெருந்துறையைப் பேசும்போது, வாயினிக்க, வாய் நிறையப் போற்றுகின்றார்.

நீதியே செல்வத்திருப் பெருந் துறையில்
நிறை மலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே.....
திருத்தமாம் பொய்கைத் திருப் பெருந்துறையில்
செழுமலர்க் குருந்த மேவியசீர்
அருத்தனே.....

*அன்பின் வழியாகச் செய்யும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியே.*

செங்கண் நாயகனே திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்த மேவியசீர்
அங்கணா.....

திமில நான் மறைசேர் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்த மேவியசீர்
அமலனே.....

செடிகள் வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற்
செழு மலர்க்குருந்த மேவியசீர்
அடிகளே.....

செப்பமா மறைசேர் திருப்பெருந்துறையிற்
செழுமலர்க் குருந்த மேவியசீர்
அப்பனே.....

செய்யனே செல்வத் திருப் பெருந்துறையிற்
செழுமலர்க் குருந்த மேவியசீர்
ஐயனே.....

சித்தனே செல்வத் திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்கு ருந்த மேவியசீர்
அத்தனே.....

தெள்ளுநான் மறைசேர் திருப் பெருந்துறையிற்
செழுமலர்க் குருந்த மேவியசீர்
அருளனே.....

திருவாசகம் 29 - அருட்பத்து.

ஆற்றங்கரையின் மரமும் அரசறிந்த வாழ்வும் விழும் என்ற ஔவைமாது நீட்டோலை வாசியான் நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் மரம் என்கிறார். திருவள்ளுவனார் மரம் போன்றவர் மக்கட்பண்பில்லாதவர் என்று மனிதப் பண்பே மக்கள் மேம்பாட்டைத் தரும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண் பிலாதவர்.

குறளோவியம் 997.

இப்படிப் பன்முகமாகப் பயன்படும், பயன்படுத்தப்படும் மரங்கள் பல. சில மரங்கள் பெரிய தேவைக்கு உதவமாட்டா. முருங்கை பருத்துத் தூணுக்கு உதவுமோ என்பது பழமொழி. அது வைரமற்றது. பாரந்தாங்காது. தறித்தால் வற்றி கோதாய்விடும். அதைப் போலவே சில மனிதர்கள் பெரிய தோற்றம் உள்ளவர்களாக இருப்பர். அவர்கள் தமக்கும் பயன்படார் பிறர்க்கும் உபயோகமற்றவர்கள். இவர்கள் முருங்கையோடு பொருத்தி எழுந்ததே இப்பழமொழி.

*சிந்திக்காமல் புரியும் செயல் அர்த்தமற்றதாகப் போகும்.*

இதைப் போன்றதே ஒதியமரம். இதைத் தமிழ் நாட்டிலே உதிய மரம் என்றும் சொல்வர். இதுபற்றியோர் கருத்து குன்றக்குடிகளின் வாக்கில் எழுந்துள்ளது.

உதியமரம் பெருத்து வளர்ந்து என்ன? உள்ளீடும் உள்ளீட்டில் வைரமும் இல்லாத மரம். அதாவது வயிரம் பாயாத மரம். அதைப்போலத் தமிழ்ச்சாதி தமிழ்க்கூட்டமாகிப் பயனில்லை.

தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடிகளார்
குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி 6.

வடலூர் வள்ளலாரான இராமலிங்க சுவாமிகள் (வேறு எவரும் சொல்லாத பாணியிற்) தன்னை ஒதிய மரத்தோடு ஒப்பிட்டுப் பல அருட்பாக்கள் இயற்றியுள்ளார். அதைப் படிப்பவர்களைச் சிந்திக்க வைக்கிறது.

வண்மைபெறு நின்அன்பர் எல்லாம் நின்னை
வந்தனைசெய் தானந்த வயத்தே நின்றார்
பெண்மையுறும் மனத்தாலே திகைத்தேன் நின்சீர்
பேசுகிலேன் கூசுகிலேன் பேதை நானோர்
ஒண்மையிலேன் ஒழுக்கமிலேன் நன்மை என்ப
தொன்றுமிலேன் ஒதியேபோல் உற்றேன் மிக்க
அண்மையில்வந் தருள்புரிவோய் என்னேவீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ

அருட்பா, இரண்டாந்திருமுறை 59-8.

சிவநேயச் செல்வர்களெல்லாம் நின்னை வந்தித்து, வாழ்த்தி, வணங்கி, ஆனந்தமயமாய் நின்றார். பேதைமிக்க மனத்தினனேன். ஆகிய யானோ திகைப்புறுகின்றேன். நின் உடைய பெரும் புகழைப் பேசுகின்றிலேன், கூசுகிலேன் (வெட்கப்படவில்லை) நானோர் அறிவிலி, குணமிலி, திடமிலி. வெளிச்சம் இல்லாதவன் மட்டுமன்றி மனித விழுமியம் இல்லாதவன். ஆக நான் ஒதியமரம்போல் வெறுமனே திரிகின்றேன். நான் நின்னைத் தேடி, நாடிவராவிடினும், நீயென்னை அண்மித்து அருள்பாலிப்பாயாக என சுவாமிகள் இறைவனிடம் இரக்கின்றார்.

அத்தோஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்
அந்தணரெல் லாரும்மறை மந்தணமே புகன்று
ஒத்தோலமிடவும் அவர்க்கொரு சிறிதும் அருளான்
ஒதியனையேன் விதியறியேன் ஒருங்கேன் வன்குரங்கேன்
இத்தோட மிகவுடையேன் கடைநாய்க்குங் கடையேன்
எனைக் கருதி யானிருக்கும் இடந்தேடி நடந்து
சத்தோட முறஎனக்கும் சித்தியொன்று கொடுத்தான்
தனித்த சிவகாமவல்லிக் கினித்தநடத் தவனே

நான்காந்திருமுறை 7. அதிசயமாகிய 3.

இப்பாடலிலே சொற்கோப்புகள் கவிஞனுக்குள் அடங்கி ஒடுங்கி ஏவல் செய்கின்றன.

உ+ம்: தனித்த சிவகாமவல்லிக்கு, இனித்த நடத்தவனே, நடத்தவன் - நடராசன்.

மெய்யாவோ நற்றணிகை மலையைச் சார்ந்து
மேன்மையுறும் நின்புகழை விரும்பி ஏத்தேன்
உய்யாவோ வல்நெறியேன் பயன்படாத
ஒதியனையேன் எட்டிதனை ஒத்தேன் அன்பர்
பொய்யாழ டெனமடவார் போகம்
புலையனேன் சற்றேனும் புனிதம் இல்லேன்
ஐயாவோ நாணாமல் பாவியேன் யான்
யார்க் கெடுத் தென் குறைதன்னை அறைகுவேனே.

அருட்பா, ஐந்தாந்திருமுறை 27, குறைநேர்ந்தபத்து 2.

இப்பாடலிலே ஒதியமரம் எதற்கும் பயன்படாததென்ற தன்மையை வெளிப்படுத்தி, நஞ்சினையுடைய எட்டிதனை யொத்தேன் எனத் தன்நிலைமையை எடுத்தியம்பியுள்ளார். மணிவாசகர் யாரொடு நோகேன் ஆர்க் கெடுத்துரைப்பேன் என இறைவனிடம் முறையிடுவது போல, வள்ளலாரும், "யார்க்கெடுத்தென் குறைதன்னை அறைகுவேனே" எனத் தன் மனப்பான் மையை வாய்விண்டு பேசியுள்ளார்.

மதியில் நெஞ்சினேன் ஒதியினை அனையேன்
மாதர் கண்ஏனும் வலையிடைப் பட்டேன்
பதியில் ஏழையேன் படிற்றுவஞ் சகனேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
பொதியில் ஆடிய சிவபிரான் அளித்த
புண்ணி யாஅருட் போதக நாதா
துதிஇ ராமனுக் கருள்செயும் தணிகைத்
தூயனே பசுந் தோகைவா கனனே.

படிறு- வஞ்சனை. மேலது-29. நெஞ்சவலங்கூறல்.4

எந்தப் புத்திபூர்வமும் இல்லாதவன். ஒதியமரம் போன்ற உதவாக்கரை நான். பெண்வலைப்பட்டவன், வஞ்ச மனத்தினன், மன்றில் நடமாடும் சிவனின் மைந்தனே, இராம பிரானுக்கு அருள்பாலித்த தணிகைத் தெய்வமே. எப்படி நின் பதம் பணிந்து நற்கதி பெறுவேன் என அருளிய சுவாமிகள். பூக்கடைக் கந்தசாமியைப் பாடிய தெய்வ மணிமாலையில் தன் நிலைமையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். அப்பாடலிலும்

"ஒதிபோல் வளர்ந்து நாளும்
விழல் உற்ற வாழ்க்கையை விரும்பினேன்"

எனப் பாடியமை. அவரையல்ல, படிப்பவர்களின் மனதையுமே தொட்டுப் பேசுகின்றது.

உழல் உற்ற உழவுமுதல் உறுதொழில் இயற்றிமலம்
ஒத்தபல பொருள் ஈட்டிவீண்
உறுவயிறு நிறையவெண் சோறடைத் திவ்வுடலை
ஒதிபோல் வளர்த்து நாளும்
விழல் உற்ற வாழ்க்கையை விரும்பினேன் ஐயஇவ்
வெய்ய உடல் பொய் என்கிலேன்
வெளிமயக் கோமாய விடமயக் கோஎனது
விதிமயக் கோ அறிகிலேன்
கழல் உற்ற நின்துணைக் கால்மலர் வணங்கிநின்
கருணையை விழைந்து கொண்டெம்
களைகணே ஈராறு கண்கொண்ட என்றன்இரு
கண்ணே எனப் புகழ்கிலேன்
தழைவுற்ற சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே.
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

தாயுமானருக்குப் பின் தோன்றிய வள்ளலார் தந்த அர்த்தமுள்ள பாடல்களில் ஒதிய மரத்தை எடுத்தாண்ட பொருண்மை எமக்கும் சாலப் பொருந்தும். எம் நிலைமை கண்டு இறைவன் தன் நிலைமை கண்டு சந்தனம்போல் நாம் கமழ்வோமாக.

## வேல் எமக்கு வெற்றி தரும்!

பல்லவி

மலர்களில் பிறந்தவன் மால்மருகன்! - எங்கள்
மனங்களில் உறைந்தவன் வேல்முருகன்! (மனங்)

அநுபல்லவி

உலகினை வலம்வந்த உமை மைந்தன்! - என்றும்
உறுதுணையாய் இருக்கும் சந்நிதிக் கந்தன்! (மனங்)

சரணம்

கார்த்திகைப் பெண்களின் கரங்களில் தவழ்ந்தவன்!
காலமெல்லாம் நெஞ்சக் குறைகளைத் தீர்ப்பவன்!
ஆர்த்திடும் நதியோரம் ஆலயங் கொண்டவன்!
அடியார்க்கு எளியோனாய் என்றும் திகழ்பவன்!
(மனங்)

வேலன் கை வேல் எமக்கு வெற்றி தரும்!
வினைகளை அறுத்துவீடு பேறு தரும்!
காலமெல்லாம் எம்மைக் காத்து நிற்கும்!
கருதிடும் அடியார் குறை தீர்த்து நிற்கும்! (மனங்)

~த. தவசேகரன்~

(தொடர்ச்சி...

# திருச்சதகம்

## நீத்தல் விண்ணப்பம்

### பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
–சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்–
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

111. பொய்யவ னேனைப் பொருளென வாண்டொன்று பொத்திக்கொண்ட
மெய்யவ னேவிட் டிடுதிகண் டாய்விட முண்மிடற்று
மையவ னேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
செய்யவ னேசிவனே சிறியேன்பவந் தீர்ப்பவனே.

**ப-ரை:**

விடம் உண் மிடற்று மையவனே- நஞ்சுண்டமையால் கண்டத்தில் கருமை நிறத்தையுடையவனே., மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே- நிலைபெற்ற திருவுத்தர கோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, செய்யவனே- சிவந்த திருமேனியை யுடையவனே, சிவனே- சிவனே, சிறியேன் பவம் தீர்ப்பவனே- சிறுமையுடையேனது பிறப்பை நீக்குபவனே, பொய்யவனேனை பொருள் என ஆண்டு- நிலையற்ற பொய்யுலக வாழ்வினையுடையவனாகிய என்னை ஒரு பொருளாக மதித்து ஆட்கொண்டருளி, ஒன்று பொத்தி கொண்ட மெய்யவனே- ஒப்பற்ற வீடுபேற்றினை அருளாது மறைத்துக்கொண்ட மெய்ப்பொருளாயுள்ளவனே, விட்டிடுதி கண்டாய்- என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

விடமுண் மிடற்று மையவனே, உத்தர கோசமங்கைக்கு அரசே, செய்யவனே, சிவனே, சிறுமையுடையேனது பிறப்பை நீக்குபவனே, பொய்யவனேனை ஒரு பொருளாகக் கருதி ஆட்கொண்டருளி ஒப்பற்ற வீடுபேற்றினை மறைத்துக்கொண்ட மெய்யவனே, என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

பொய்யவனேனை- பொய்யுலக வாழ்வில் பற்று நீங்கப் பெறாதவனாகிய என்னை, "பொய்யனேன் நான் உண்டுடுத்திங் கிருப்பதானேன் (சத 52) பொய்யனேன் அகநெக" (செத்1) எனப் பிறாண்டும் கூறுதல் காண்க. பொருளென ஆண்டு- பொருளாக மதித்து ஆண்டு.

"பொருளா வெனைப் புகுந்தாண்ட பொன்னே"

கோயின் மூத் 8.

"புலையனேனையும் பொருளென நினைந்துன் அருள் புரிந்தனை"

செத் 3.

"பொருளாவெனைப் புகுந்தாண்டு"

திருக்கோவை 73.

"புலியூர் எனை நின்று ஆண்டான்"

புலியூரின்கண் ஒரு பொருளாக மதித்து என்னை நின்று ஆண்டவனது (திருக்கோவை 244 பேர்)

என வருவன காண்க.

ஒன்று பொத்தி கொண்ட என்றது ஒப்பற்ற வீடுபேற்றினை அருளாது மறைத்துக் கொண்ட என்றவாறு. உடனே வீடுபேற்றினை இறைவன் அருளாமை, தூலவுடம்பும் அது முகந்து நின்ற பிராரத்த வினையும் உடனே நீங்கத்தக்க பக்குவமடையாமையாலாகும். அதனை உணர்ந்து பொத்திக்கொண்டமையால் இறைவனை "மெய்யவனே" என்றார். பொத்துதல்- மறைத்தல்.

விடமுண் மிடற்று மையவன் - விடமுண்டமையால் கண்டத்தில் கருமை நிறமுடையவன்.

"நஞ்சுண் மழைதரு கண்டன்"

நீத் 46.

"செழுமிடற்றின் மைவந்த கோன்"

திருக்கோவை 212.

"அருந்தும் விட மணியா மணி கண்டன்"

திருக்கோவை 272.

"மை கொண்ட கண்டா"

திருக்கோவை 386.

என அடிகளும்,

"கடுவிடமுண்டு இருண்ட மணி கண்டத்தோன்"

தே. 129:3.

"கறுத்த நஞ்ச முண்டிருண்ட கண்டர்"

தே. 237:3.

"நஞ்சினை யுண்டிருள் கண்டனார்"

தே. 258:2.

என ஆளுடைய பிள்ளையாரும் அருளியமை காண்க. உண் என்னும் வினை ஏதுப் பொருளில் வந்தது. செய்யவன்- சிவந்த மேனியையுடையவன்.

"செய்ய மேனியனே" செத் 1.

"செந்நிற மேனி வெண் ணீறணிவோன்" திருக்கோவை 69.

"தேய்ந்து மலி வெண்பிறையான் செய்ய திருமேனியினான்"

தே. ஞான 181:5.

"செய்ய மாமேனியர்" தே. ஞான 351:2.

என வருவன காண்க.

சிவன்- எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற் சிவன் (திருக்கோவை 358 பேர்) பவம் தீர்ப்பவன்- பிறவியை நீக்குபவன். "அடியவர்கள் நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணை செய்து துஞ்சல் பிறப்பறுப்பான்" "தீதோடாவண்ணம் திகழப் பிறப்பறுப்பான்" (பொன்னூசல் 4,6) என அடிகள் அருளியமையுங் காண்க.

இதன்கண், பொய்யவனேனை எனவும் விடுதி கண்டாய் எனவும் கூறியவற்றால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டுமென்பதும் பெறப்படுதல் காண்க.

**112. தீர்க்கின்ற வாறென் பிழையைநின் சீரரு ளென்கொலென்று**
**வேர்க்கின்ற வென்னை விடுதிகண் டாய்விர வார்வெருவ**
**ஆர்க்கின்ற தார்விடை யுத்தர கோசமங் கைக்கரசே**
**ஈர்க்கின்ற வஞ்சொடச் சம்வினை யேனை யிருதலையே.**

**ப-ரை:**

விரவார் வெருவ ஆர்க்கின்ற தார் விடை உத்தர கோச மங்கைக்கு அரசே- நின்னை வந்து அடையாதவர் அஞ்சுமாறு ஒலிக்கின்ற கிண்கிணி மாலையை அணிந்த எருது வாகனத்தையுடைய உத்தரகோச மங்கைக்கு அரசே, வினையேனை அஞ்சொடு அச்சம் இருதலை ஈர்க்கின்ற- பிராரத்த வினையையுடைய என்னை ஐம்புல நுகர்வின் அவாவும் அதற்கு மாறாகிய அச்சமும் உலகின்பாலும் நின்பாலும் இழுக்கின்றன. ஆகையால் பிழையைத் தீர்க்கின்ற ஆறு என் ஐம்புல நுகர்வில் ஈர்க்கப்படும் எனது பிழையினைத் தீர்த்துக்கொள்ளும் வழி யாது? நின் சீர் அருள் என் கொல் என்று- நினது சிறந்த திருவருட் குறிப்பு யாதோ என்று எண்ணி, வேர்க்கின்ற என்னை விடுதி கண்டாய்- மனம் புழுங்குகின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

விரவார் வெருவ ஒலிக்கின்ற தார் விடையையுடைய உத்தர கோச மங்கைக்கு அரசே, வினையேனை ஐம்புல நுகர்வின் அவாவும் அதற்கு மாறாகிய அச்சமும் இருபாலும் ஈர்க்கின்றன. ஆகையால் எனது பிழையைத் தீர்க்கின்ற ஆறு யாது? நின் சீர் அருள் என் கொல் என்று எண்ணி வேர்க்கின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

பிழையைத் தீர்க்கின்றவாறு என்றார். ஐம்புல நுகர்வின்கண் பயிற்சி வயத்தால் உளதாகும் அவாவினை நீக்கியருள வேண்டும் என்பது தோன்ற நின் சீர் அருள் என்கொல் என்றது நினது சிறந்த திருவருட் குறிப்பு யாதோ என்றவாறு. சீர்- நன்மையுமாம். வேர்த்தல்- வியர்த்தல்; ஈண்டு அதற்குக் காரணமாகிய புழுக்கத்தை உணர்த்தியது.

விரவார்- பகைவர். ஈண்டு இறைவனை அடையாதவர்களை, தார்- கிண்கிணிமாலை. ஈர்க்கின்ற- ஈர்க்கின்றன; அன்பெறாத முற்று. அஞ்சொடு அச்சம்- அஞ்சும் அச்சமும். அஞ்சு- ஐந்து. கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புல நுகர்வின் அவாவினை, ஓடு, உம்மைப் பொருட்டு ஐம்புல அவா உலகின் கண்ணும், நின்னால் ஆட்கொள்ளப்பட்ட யான் ஐம்புல நுகர்வின் அவாவினால் இழுப்புண்டால் யான் நின்னை அடையுமாறு அரிதாகும் என்னும் அச்சம் நின்பாலும் ஈர்த்தலின், அஞ்சொடு அச்சம் வினையேனை இருதலையும் ஈர்க்கின்ற" என்றார். இரு தலையும் என உம்மை விரிக்க.

இதன் கண், அஞ்சொ டச்சம் வினையேனை ஈர்க்கின்ற; பிழையைத் தீர்க்கின்ற வாறென்? நின் சீரருள் என் கொலென்று வேர்க்கின்ற என்னை விடுதி கண்டாய் என்பவற்றால் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுமாறு காண்க.

(தொடரும்...

*பிறர் செய்த உபகாரம் உன் கையில் அதிகமாகத் தங்கிவிடாமல் பார்த்துக்கொள்.*

# மூச்சு

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

"மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும், அது முடியும் வரை என் பேச்சிருக்கும்" எனப் பாடியுள்ளார் கவிஞர். இதில் மூன்று எழுத்துக்களாகக் குறிக்கப்படுவது இடைகலை, பிங்கலை ஆகிய இடநாசித் துவாரம், வலநாசித் துவாரம் மற்றும் நடு நாடி எனப் படும் சுழுமுனையாகும். பிராணவாயு இம் மூன்று வழிகளிலும் பொருந்திச் செயல்படும் வரையே எமது உயிர் பாதுகாக்கப்படும். அதன்பின் எமது பேச்சும் முடிந்துவிடும். கதையும் முடிந்து விடும். எனவே, இம் மூன்று எழுத்துக்களால் ஆகிய "மூச்சு"- என்பது பற்றி விளக்கம் அளிக்கவேண்டுவது தேவையாகும். எமது மூச்சில் இறைவன் விளங்கி வருகின்றார். எனவே மூச்சு என்பது எமது தெய்வமாகும்.

பிராணாயாமம் என்பது மூச்சை அடக்கி சுழுமுனை (நடுநாடி) வழியே பிராணவாயுவைச் செலுத்துவதாகும். பிராணவாயுவை தனது வாகனமாகக்கொண்டு எமது உயிர் பிராணன் எனப் பெயர்பெற்று நாசி வழியே உட்புகுந்து பின் சுழுமுனை வழியே மேலேறிச் சென்று சகஸ்ரதளம் என்னும் ஆயிரம் இதழ்த் தாமரை மலரை அடைகின்றது. இந்த இடமே சிவபெருமான் விளங்கும் இடமாகும். எமது உடலையே (ஆக்கை) கோயிலாக அமைத்து திருமந்திரம் அருளிய திருமூலநாயனார், அறுபத்து மூன்று நாயனார்களுள் ஒருவராகத் திகழ்கிறார். இவர் ஒரு சித்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பதினெண் சித்தர்களுள் இவரும் ஒருவராவார். இந்த உடலைப் பிறவியற்ற தொரு கருவியாகக் கொண்டு இப்பிறப்பாகிய இவ்வுடலிலேயே சிவனைக் கண்டுவிடுதல் வேண்டும் என்பது திருமூலர் வாக்கு ஆகும். மெய்யுணர்வு பெற்றவர் சிவனைக் காணலாம்.

பிராணாயாமம் என்பதில் உள்ள "ஆயாமம்" என்பது மூச்சை அடக்குதல் என்னும் கருத்திலாகும். பிராணாயாமம் என்பது யோகமாகும். பிராணாயாமம் செய்வோர் சொல்லப்பட்ட ஆசன (ஆதனம்) வகைகள் ஒன்றில் சரிவர அமர்ந்துகொண்டு தமது யோகத்தைச் செய்தல் வேண்டும். ஆசன வகைகள் பல் வேறு விதமாக உள்ளன. பத்மாசனம். சுகாசனம், வஜ்ராசனம் முதலியன சில ஆசனங்களாகும். இவை பிராணாயாமம் செய்வதற்கு ஏற்றன. மூச்சு, வளி, காற்று முதலிய பதங்கள் பிராணனைக் குறிப்பதாகும். பறவையை விட வேகம் மிக்கது பிராணன். பிராணவாயு இன்றி உயிரினங்கள் யாவுமே உயிர்வாழ முடியாது. உணவின்றியும், நீரின்றியும் சில நாட்களாவது உயிர் வாழ முடியும். இவ்வளவில், பிராணவாயுவை நாம் நெறிப்படுத்திச் சுவாசிக்கும்போது அதுவே பிராணாயாமம் ஆகின்றது. எனவே நாம் நமது அன்றாட வாழ்வில் எம் உடலோடும் உயிரோடும் சேர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் பிராணவாயுவை முறைப்படி நெறிப்படுத்தி சுவாசிப்போமானால் அதனால் எண்ணிலா பலாபலன்களை எம் உடலும் உயிரும் அனுபவித்து ஆனந்திக்கவும் இடமேற்படும். இக் கருத்தினை வலியுறுத்தி அருளியுள்ளார் திருமூலர். நந்தியம்பெருமானாகிய சிவபெருமானே குருவாக வந்து திருமூலருக்கு இப் போதனையை நிகழ்த்தி உள்ளார். இறப்பின்போது மனிதனின் "இறுதி மூச்சு" பிராணவாயுவின் இயக்கமே என்பது நாம் உணர்ந்தறிதல் வேண்டுவதொன்றாகும்.

எனவே இவ்வாயுவானது மனிதனுக்காக இறைவன் வழங்கிய தெய்வீக சக்தி என்பதை உணரலாம். இவ் வாயுவைச் சுவாசிப்பதற்காக இறைவன் மனிதனுக்கு அளித்த உடல் உறுப்பு அவனது நாசித் துவாரங்கள் இரண்டு மாகும். இடது பக்க நாசி வழியை இடைகலை எனவும் வலப்பக்க நாசி வழியை பிங்கலை எனவும் வழங்குவர். இடைகலை நாடியானது, வலது கால் பெருவிரலிலிருந்து தொடங்கி மேலேறிப் படரும். பிங்கலை நாடி இடது கால் பெருவிரலிலிருந்து தொடங்கி மேலேறிப் படரும். இவை இரண்டும் தொப்பூழில் பிணைந்து, இடைகலை இடப்பக்கமாகவும், பிங்கலை நாடி வலப்பக்கமாகவும் மாறி அமைந்து, முதுகு, பிடரி, தலை வழியே சென்று, முறையே மூக்கின் இடத்துவாரம் மற்றும் மூக்கின் வலத்துவாரத்தில் முடிவடையும். அதனால், இரு நாடிகளும் இணையுமிடம் உந்தி (தொப்பூழ்) ஆகும். மூக்குத் துவாரம் வழியே உள்வந்த காற்று மீண்டும் அவ் வழியே சென்று, மூக்குத் துவாரம் வழியே வெளியேறுகின்றது. அதனால் பிராணவாயு என்பது ஒன்றே, இரண்டாக இங்கு சொல்லப் படுகின்றது. ஆகவே, உள் இழுக்கப்பட்ட இவ் வாயுவானது "கும்பகம்" செய்யும் இடமாக எமது வயிற்றின் அடிப்பகுதியாகிய உந்தித் தானத்திலேயே அமைகிறது. அதாவது, அவ் வாயுவை நாம் அடக்கி வைத்திருக்கும் இடம் வயிற்றின் அடிப்பகுதியே ஆகும். பிராணாயாமப் பயிற்சியால் பிராணன் கட்டுப்பட்டு மனம் அசைவற்று இருக்கும். இதனால் பிராணன் வசப்பட்டுப்போனதும், நமது மனமும் வசப்பட்டுவிடும். பிராணயாமம் என்பது அட்டாங்க யோக உறுப்புக்களில் பிரதானமான ஓர் உறுப்பாகும். நாம் இறைவனை அடையும் நெறி வகைகளில் பிராணாயாமம் பிரதான இடம் வகிக்கின்றது. பிராணாயாம முறைப்படி யோகம் செய்து இறைவனையடையும் முறையை நந்தியெம்பெருமானே திருமூல நாயனாருக்கு அருளிச் செய்துள்ளார்.

பிராணாயாமம் எப்படிச் செய்ய வேண்டுமென்பது பற்றிப் பார்ப்போம். பிராணாயாமம் பூரகம், கும்பகம், இரேசகம் என்னும் மூன்று வகையினையுடையது. நம் உடம்புக்கு வெளியேயுள்ள காற்று தூய காற்றாகும். நாம் இத் தூய காற்றினை- பிராணவாயுவை- உள் இழுத்து சுவாசம் செய்கிறோம். எனவே, உயிரானது மூக்குத் துவாரங்கள் வழியே பிராணவாயுவை உள் எடுக்கும் செயலாகும். இச் செயல் மாத்திரை அளவு (கை நொடிப் பொழுது) நடைபெறுதல் இயல்பு. ஒரு மாத்திரை அளவு என்பது ஒரு கண் இமைப் பொழுது என்பதும் கருத்தாகும். எனவே பூரகம் (பூரித்தல்) என்பது பதினாறு (16) மாத்திரையளவு உயர் அளவாகக் கொண்டு நாம் காற்றினை உள் எடுத்தல் வேண்டும். இது இட நாசியால் உள் இழுக்கப்படுதல் வேண்டும். இழுக்கப்பட்ட அக் காற்றினை உடனேயே வெளியே ஓடிச்செல்ல விடாது உள்ளே நிறுத்துதல் வேண்டும். இது "கும்பகம்" எனப்படும். கும்பகம் 64 மாத்திரை அளவு செய்யப்படுதல் வேண்டும். பூரகம் செய்யும் மாத்திரையளவினைப்போல நான்கு மடங்காகும். அதனால் கும்பகம் 64 மாத்திரை அளவு கொண்டது. இரேசகம் என்பதன் மாத்திரை அளவு 32 ஆகும். இந்த அளவு பூரித்தலைப்போல் இரண்டு பங்குகொண்ட மாத்திரை அளவினையுடையது. இந்த மூன்று செயல்களும் நடைபெற்று முடிவதை ஒரு சுற்றுப் பிராணாயாமச் செயல் எனக் கணக்கிட்டுள்ளனர். இது ஒரு "கலை" எனவும் வழங்கும். எனவே மீண்டும் மீண்டும் இப்படியே ஒழுங்காக இடநாடி வழி, பின்னர் கும்பகம்

*கல்வி இருந்து உழைப்பு இல்லாவிட்டால் கல்வியைப் பயன்படுத்த முடியாது.*

பின்னர் வல நாசி வழியே வாயுவை வெளியேற்றுதல் ஆகிய செயல் தொடர்ந்து நடைபெறுதல் வேண்டும். இது ஒரு தினத்தில் 12 முறைகள் குறைந்தளவு நடைபெறுதலும், இதன் உச்ச அளவு பன்னிரண்டு வருடங்கள் தொடர்ந்து நடைபெறுதலும் நியதியாகக் கூறப்பட்டுள்ளது. காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று வேளையும் ஓய்வு நேர இடைவேளைகளுடன் உண்ணுதல் உறங்குதல் ஆகிய அடிப்படைத் தேவை நிறைவேற்றத்துடன் நடைபெறுதல் வேண்டும் என்பதே இதன் நியதியாகும். இச் செயல்கள் யாவும் ஓர் குருவின் வழிகாட்டலின்கீழ் செய்யப்படுதலும், பிழையின்றிச் செய்யப்படுதலும் அவசியமாகும். முறையற்றுச் செய்யின் அதனை "வஞ்சனை" என நாயனார் கூறியுள்ளார். ஒருமுறை சரியாகச் செய்தால் அதை ஒரு முழுநிலைப் பிராணாயாமம் என வழங்குவர். பூரித்தல்- இடநாசி வழி. இரேசித்தல் வல நாசி வழி. இவ் வழிகள் மாறுபடக்கூடாது. கும்பித்தல்- வேறு இடம். மணிபூரகம், மாத்திரைகள் மந்திரங்கள் வழி அறியப்படுதலும் உண்டு. "ஓம்" என்னும் பிரணவ மந்திரமானது "சமட்டியாக" ஓதும்பொழுது அது இரண்டு மாத்திரையளவு ஒலிக்கும். அதன் மிக்க மாத்திரைக்கு அவ்வளவான அளபெடை கூட்டியும் ஓதுவர். "அம்" என்பதன் பின் "சம்" என்பதைக் கூட்டி "அம்ச மந்திரம்" என ஓதுதலை பெரு வழக்காகக் கொள்வர். மந்திரங்களில் ஒற்றெழுத்து மாத்திரை கணக்கிடப்படுவதில்லை. இம் மந்திரம் நாவால் கூறாது மனத்தால் நினைத்துக்கொள்ளல் ஓர் முறையாகும். இதை மானதம் என்பர். மானதம் முறை யோகியர்க்குரியது. மந்திரத்தில் பற்று இல்லாதவர் செய்யும் பிராணாயாமம் பெரும் பயன் தராது.

கும்பகப்படுத்தும் காற்றானது நம் உடலிற்குப் பயன்படும். பூரகம் செய்த காற்று முன் உள்ள காற்றோடு சேர்ந்து, நம் உடலிற்குப் பயன்பட்ட பின்னர், அதன் நிலை வேறுபடுதலால், மேற்சொல்லிய கால அளவில் (மாத்திரை அளவு) இரேசகம் தேவைப்படுகின்றது. இதனால் பிராணாயாமம் செய்யும் முறை கூறப்பட்டுள்ளது. இது பற்றிய திருமந்திரம் வருமாறு.

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பம் அறுபத்து நால் அதில்
ஊறுதல் முப்பத்தி ரண்ட திரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சகமாமே.

-திருமந்திரம் 568.

இனி, பிராணாயாமம் செய்வதால் மேலும் நம் உடலிற்கும், உயிருக்கும் கிடைக்கத்தக்க பல நன்மைகள் அல்லது பலாபலன்கள் எவை என்பது பற்றி நோக்குவோம். பிராணாயாமம் செய்வதால் பிராண ஜெயம் உண்டாகும். சோம்பல் நீங்கிச் சுறுசுறுப்பு உண்டாகும். எமது பிறவிகள் நீங்கும். நாம் என்றும் இளமைத் தோற்றத்துடன் வாழலாம். இடைகலை வழியாகப் பூரகம் செய்வதால் சிறப்பு உண்டாகும். அதாவது, மேன்மை உண்டாகும். கும்பகம் செய்வதால் மரணமின்றி நீண்ட ஆயுள் பெற்று வாழலாம். இயம தர்மராஜனுக்கும் நாம் அஞ்சவேண்டுவதில்லை, மேலும் கும்பகம் செய்வதால் சிவபெருமானின் திருவருளைப் பெறமுடியும்.

*பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதன்மூலம் சொர்க்கத்தை பூமியில் காணலாம்.*

இதனால் பிராணாயாமம் யோக சாதனையின் சிறப்பானதொரு உறுப்பாகக் கொள்ளப் பட்டுள்ளது. அதனால் அச்செயல் யோகிக்குப் பயன்கொடுப்பதாயுள்ளது. பின்வரும் திருமந்திரம் அதனை விளக்குகிறது.

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு அளியனு மாமே.

-திருமந்திரம் 569.

கும்பகம் செய்வது உடலின் உள் இடத்திலா அல்லது வெளி இடத்திலா என்பது இருவேறு நிலைகளைக் குறிக்கும். ஒரே பலாபலனுடைய செயல்களாகக் கூறப்பட்டுள்ளது. இவ்விரு முறைகளிலும் கும்பகம் செய்தல் என்பது உடலில் மணிபூரகத்திலேயே நடை பெறுகிறது என்பது நியதி முறையமைந்த உண்மையேயாகும். இவ்விரு முறைகளிலும் கும்பகம் என்பது 64 மாத்திரை அளவே உரிய முறையாகும். ஆனால் உட்பக்கம், வெளிப்பக்கம் கும்பகம் செய்தல் என்பதே சற்று வேறுபாட்டைத் தோற்றுவித்துள்ளது. உடலின் உட்பக்கம் கும்பகம் செய்யும்போது வயிற்றறையின் உள் பக்கம் காற்றினால் பொருமியவாறு பூரிப்படைந்து விம்மிக் காணுதல் முறைப்படி அமைந்ததேயாம். வெளிப்பக்கக் கும்பகம் செய்தலில் வயிறு, நெஞ்சு, விலா என்னும் உடல் பகுதிகள் வளியின்றி ஒட்டி ஒன்றிப் போதல், அதாவது, சுருங்கிப் போதல் என்பது அதன் முறையாகச் சொல்லப்பட்டுள்ளது. விரிவடைவதும் சுருங்குவதும் உடலில் சம பலன்களைக் கொடுக்கும் முறைகள் என்பதை நாம் புரிந்துகொள்ளுதல் வேண்டும். நாயனார் கூறியுள்ள முதலாவது தெரிவு, பிராணாயாமம் என்பது, இடைகலை வழியால் பூரகம் செய்து, பூரித்த வளியினை 64 மாத்திரையளவு உள்ளே கும்பகம் செய்து, பின்னர் 32 மாத்திரையளவு இரேசகம் செய்து பூரணப்படுத்துதல் ஓர் முறையாகும்.

பின்வரும் இரண்டு திருமந்திரங்களில் நாயனார் உடலின் உள்ளே 64 மாத்திரையளவு கும்பகம் செய்தல் பற்றி விளக்கியுள்ளார்.

எங்கே இருக்கினும் பூரி இடத்திலே
அங்கே அதுசெய்ய ஆக்கைக்கு அழிவு இல்லை
அங்கே பிடித்தது விட்டு அள வும்செல்ல
சங்கே குறிக்கத் தலைவனும் ஆமே.

-திருமந்திரம் 570.

ஏற்றி யிறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

-திருமந்திரம் 571.

கும்பகம் செய்தலின் இரண்டாவது முறையாகிய வெளிப்புறக் கும்பக முறையை நாயனார் அவர்கள் பின்வரும் இரண்டு திருமந்திரங்களில் விளக்கியுள்ளார்.

*தாராள மனப்பான்மைக்கு முன் நீதி மனப்பான்மை நமக்கு வேண்டும்.*

மேல் கீழ் நடுப் பக்கம் மிக்கு உறப் பூரித்துப்
பாலாம் இரேசகத் தால் உட் பதிவித்து
மாலாகி உந்தியுள் கும்பித்து வாங்கவே
ஆலாலம் உண்டான் அருள் பெறலாமே.

-திருமந்திரம் 572.

வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே
ஏம் உற்ற முப்பத்திரண்டும் இரேசித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ் விரண்டு
ஓமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே.

-திருமந்திரம் 573.

எனவே நாயனார் அவர்கள் இக் கும்பக முறையைப் பிராணாயாமத்தின் ஓர் மிக முக்கிய அம்சமாகக் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது. "மேல் கீழ் நடுப்பக்கம் மிக்கு உறப் பூரித்து" என்னும் திருமந்திரத்தில் ஆலாலமுண்ட நீலகண்டப் பெருமானின் அருள் யோகியானவருக்குக் கிடைக்கும் என் பதை இறுதியில் நயம்பட உரைத்துள்ள மையை நோக்குக. "வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே" என்னும் திருமந்திரத்தில்; உள்ளே கொண்ட காற்றை வெளியேற்றி விட்டு மீண்டும் காற்றினை உட்கொள்ளாமல் அறுபத்து நான்கு மாத்திரையளவு வெளியே இருக்கச் செய்தல் வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

இரேசகம் செய்தல் முக்கியமானது. ஏனெனில், வெளியிலிருந்து பூரகம் செய்யப் பட்ட தூய காற்றானது, உடல் உறுப்புக்கள் மற்றும் கலன்களால் உள் வாங்கப்பட்ட பின் னர் மிகுதியாகவுள்ள அசுத்தக் காற்று (கரிய மிலவாயு) உடலைவிட்டு வெளியேறப்படுதல் அவசியமாகின்றது. ஆனால் கும்பித்தல் என்பது சேருதல் என்னும் கருத்துடன் அமைந் துள்ளது. அதாவது உடல் முழுவதும் தூய காற்று போதுமான அளவு சேருதல் என்பது இதன் விளக்கமாகும். அக் காற்றின் நல்ல பகுதிகள் சேர, கழிவு வெளியேறுகின்றது. சிறிது நேரம் (64 மாத்திரை) கும்பகம் செய் யும்போது அங்கு நிலைத்த காற்று உடலில் பரவ வாய்ப்பு ஏற்படுகின்றது. வெளிக் கும்ப கத்தின்போது சுருங்கிய உள் உடல் பகுதி கள் இரேசகம் செய்த வழி உள்வரும் காற் றினை ஒன்றும் விடாமல் நன்கு இழுத்து எடுக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. ஆதலால், இரண்டுவித கும்பகம் செய்யும் முறைகளாலும் உடல் அடையும் நன்மை சம அளவிலே காணப்படுதல் இங்கு சிந்திக்கத்தக்கது.

பிராணாயாமம் செய்வதற்கு மன அமைதி தேவையாகும். இடது பக்க மூக்குத் துவாரத்தினால் பூரகம் செய்து, பின்னர் 64 மாத்திரையளவை வயிற்றில் கும்பகம் செய்து, மீண்டும் அதே வழியால் (இடது) இரேசகம் முறை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முறையில் மாற்றம் செய்தால் அதுவே "வஞ்சனை" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டாங்க யோகத்தில் பிராணாயாமம் மிக முக்கியமான உறுப்பாகும். அட்டாங்க யோகம் பயில விரும்பும் யோகியானவர், பின்வரும் ஒழுங்கு முறையின்படி தனது சாதனைச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் தகுந்த வழியும் ஓர் முறையுமாகும். பின்வரும் திருமந்திரத்தினை நோக்குக.

*சேமித்து வாழப் பழகிவிட்டால் நீ செல்வந்தனாகிவிடுவாய்.*

ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே.

-திருமந்திரம் 2615.

ஆசை அறுத்தல்
இயமம், நியமம்
ஆதனம் (ஆசனம்)
நாடி சுத்தி - இதயத் துடிப்பைச் சமநிலைக்குக் கொண்டு வருதல்.
பூரகம், இரேசகம், கும்பகம் - வெளியே கும்பித்தல்
பூரகம், கும்பகம், இரேசகம் - உள்ளே கும்பித்தல்
பிராத்தியாகாரம், தாரணை, தியானம்
சமாதி- அட்டாங்க யோகம் நிறைவு.

மேலே குறிப்பிட்ட வகைகளில் ஆசை அறுத்தல் அடிப்படைத் தேவையாக அமைகிறது. திருமூல நாயனார் அருளிச் செய்துள்ள "அவா அறுத்தல்" பகுதியில் உள்ள இரு திருமந்திரப் பாசுரங்கள் அவா அறுத்தலின் முக்கியத்துவத்தைக் கூறியுள்ளது. அத் திருமந்திரங்களுள் ஒன்று மேலே கூறப்பட்டுள்ளது. மற்றையது வருமாறு.

வாசியும் மூசியும் பேசி வகையினால்
பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையும் அன்பும் அறுமின் அறுத்த பின்
ஈசன் இருந்த இடம்எளி தாமே.

-திருமந்திரம் 2613.

பிராணனைப் பற்றியும், சுழுமுனையைப் பற்றியும் பிறரோடு பேசியும் அதனை எடுத்துரைத்தும் வருதலால் யாதொரு பயனையும் நாம் அடைய முடியாது. எனவே பொருளாசையையும், மக்கள் மேற் செல்லும் பாசத்தையும் நீக்குங்கள். அவ்வாறு நீக்கினால் மட்டுமே ஈசன் (இறைவன்) இருக்குமிடத்தை நாம் எளிதாக அறியமுடியும்.

## எல்லோர்க்கும் அருள் தரும் வேல்

சந்நிதி ஆற்றினில் குளிப்பேன்
சகல பாவமும் நீங்கிடத் துதிப்பேன்
எந்நிதியும் தரவல்லவன் தான் முருகன்
எங்கும் நிறைந்து இருப்பவன்தான்
என் நிலையாவும் அறிந்தவனே முருகன்
எல்லோர்க்கும் அருளும் வேலவனே
முன் வினைப் பாவம் அறுப்பவனே
முத்தி இன்பம் கொடுக்க வல்லவனே முருகன்.

*-சின்னப்பு தனபாலசிங்கம்-*

*பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்யவேண்டியது தட்டிக்கொடுப்பது மட்டும்தான்.*

# திருவிளையாடற் புராண வசனம்

## (பதினைந்தாவது)

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## மேருவைச் செண்டா லடித்த படலம்

உக்கிர பாண்டியர் தமக்கு அகத்திய முனிவர் சொன்ன சோமவார விரதத்தை அன்றுதொட்டு அனுட்டித்து வரலும் அவர் மனைவியாகிய காந்திமதியிடத்தே ஒரு சற் புத்திரன் அவதரித்தான். உக்கிர பாண்டியர் அப் புத்திரனுக்கு வீரபாண்டியனென்று நாம கரணஞ் செய்து, வேத முதலிய கலைகளை யும் படைத்தொழில்களையும் பயிற்றுவித்து, மகிழ்ச்சியடையு நாளிலே, கிரகநிலை திரிந்து, மழை வறந்து, பருவம் மாறி, உயிர்கள் எல்லாம் உணவின்றிப் பசியால் வருத்த முற்றன. உக்கிர பாண்டியர் சோதிடர்களை நோக்கி "மழை வறந்தது என்னை?" என்று வினாவ, அவர்கள் பாண்டியரை நோக்கி, "மகாராசாவே! கிரகங்கள் சூரியனை நோக்கி நிற்றலால் ஒரு வருடம் மழை பெய்யாது" என்றார்கள். உக்கிர பாண்டியர் குழந்தை களுடைய நோயை நோக்கி வருந்துந் தாய் போல வருந்தி, சிவபெருமான் திருமுன் சென்று, வணங்கி, மனம் இரங்கிக் கண்ணீர ததும்பி நின்று, பரம கருணாநிதியே! உயிர் களெல்லாம் பசியினாலே மிக வருந்துகின் றனவே" என்று விண்ணப்பஞ் செய்தார். சோம சுந்தரக் கடவுள் காலத்தின் செவ்வியை நோக்கி இரக்கமில்லாதவர் போல வாளாவிருத்தலும், உக்கிர பாண்டியர் கரையற்ற துன்பக் கடலில் வீழ்ந்து, தமது திருமாளிகைக்குத் திரும்பினார். சூரியன் அஸ்தமயமானான்.

உக்கிர பாண்டியர் தமது குடைக் கீழ்த் தங்கும் உயிர்களுடைய பசிவருத்தம் நிறைந்த நெஞ்சினாலே முகச்செவ்வி குன்றப் பெருங்கொடுந் துயரத்தின் மூழ்கி, தரையிலே நித்திரை செய்தார். சோமசுந்தரக் கடவுள் பாண்டியருக்குக் கனவிலே சித்தராய் எழுந் தருளி வந்து, "அரசனே! இப்போது மழை பெய்யாது; நீ மழையை வேண்டி வருந்தா தொழி; மகாமேரு மலையின் பக்கத்திலே ஒரு பெரிய முழையிலே எல்லையில்லாத திரவியம் இருக்கின்றது. நீ அங்கே சென்று, அம் மேரு மலையை அதன் செருக்கடங்கும் வண்ணம் செண்டினாலடித்து, உன்னாணை வயத்ததாக்கி, பொன்னறையைப் பொதிந்த பாறையை நீக்கி, நீ வேண்டும் வரையும் எடுத்துக்கொண்டு, அதனை மீள அடைத்து, உன் குறியிட்டு, வருவாயாக" என்று அருளிச் செய்தார்.

உடனே உக்கிர பாண்டியர் விழித் தெழுந்து, நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு, சோமசுந்தரக் கடவுளை வலஞ் செய்து, வணங்கி, நால்வகைச் சேனைகளும் சூழ வாத்தியங்கள் ஒலிக்க, பிராமணர்கள் ஆசிகூற, நாவலர்கள் துதிக்க, தேர் மீதேறிச் சென்று, பாண்டி நாட்டையும் சோழ நாட்டை யும் தண்டக நாட்டையும் தெலுங்கு தேசத்தை யும் கர்னாட தேசத்தையும் மாளவ தேசத்தை யும் விராட தேசத்தையும் மத்திய தேசத்தை யும் கடந்து, காசியை அடைந்தார். கங்கா நதியிலே ஸ்நானம் செய்து கொண்டு, அங்கு நின்று நீங்கி, அநேக காதங் கடந்தபின்னர், மனிதர் செல்லாத இடத்தைக் கடந்து சென்றார்.

இவ்வாறே ஆயிரம் யோசனை அகலமுடைய இக் குமரி கண்டத்தைக் கடந்து, இதுபோல இன்னும் எட்டுக் கண்டங் கொண்ட பாரத வருடத்தைத் தள்ளி, இமாசலத்தை அடைந்து, அதனைத் தாவி, அப்புறம் போய்க் கிம்புருட வருடத்தை அடைந்து, அதனைக் கடந்து ஏமகூடத்தை அடைந்து, அதனைக் கடந்து அரிவருடத்தை அடைந்து, அதனைக் கடந்து அப்பாற் போய் நிடதமலையை அடைந்து, அதனைக் கடந்து சம்புநதி பாயும் இளா விருத வருடத்திற் சென்று, மகாமேரு மலையைக் கண்டார். கண்டவுடனே, தம்முடைய சேனைகளைப் பிரிந்துபோய், மகாமேரு மலையை வலஞ் செய்து, தென்றிசையிலே வந்து நின்று கொண்டு, அம் மலையை நோக்கி, "பருவதராஜாவே! நம் பிதாவாகிய சிவபெருமானுடைய வில்லே! பூமிக்குக் களை கண்ணே! கிரகங்களும் நட்சத்திரங்களும் வலஞ் செய்யும் மகா பருவதமே! தேவர்களுக்கு ஆலயமே!" என்றழைத்தார். அழைத்தலும், மகாமேரு மலை வரவு தாழ்ப்ப, உக்கிர பாண்டியர் கோபங்கொண்டு, அம்மலையின் செருக்கடங்கும்படி அதன் சிகரத்திலே செண்டினால் அடித்தார். அடித்தலும் அசைவில்லாத மேரு மலை அசைந்து, பொற்பந்து போலத் துடித்தது; அதன் கொடுமுடிகளும் அவ்வக் கொடுமுடிகளிலே தேவர்கள் வசிக்கப்பெற்ற ஆலயங்களும் வெடித்தன.

உக்கிர பாண்டியர் அடித்தபின், மகாமேரு பருவதம் எட்டுப் புயங்களையும் நான்கு சிரசுகளையும் ஒரு வெள்ளைக் குடையையுங் கொண்ட உருவத்தோடு எழுந்து வந்து, நாணி நின்றது. அது கண்ட உக்கிர பாண்டியர் கோபந் தணிந்து, "மேரு பருவதமே! நீ இது காறும் வாராது தாழ்த்த தென்னை?" என்று வினாவ, மேரு மலை, "மகாராஜாவே! கேளும் அடியேன் நாடோறும் இவ்வுருவங்கொண்டு சென்று, மீனாட்சியம்மையையுஞ் சோம சுந்தரக் கடவுளையும் வழிபடும் நியமம் பூண்டேன். இன்றைக்கு ஒரு பெண்ணினிடத்துள தாகிய காமத்தினாலே சிவாலய சேவையை மறந்து, இதுகாறுந் தாழ்த்து நின்றேன். இப் பெருங் கொடும் பாவத்தினால் அடியும் பட்டேன். தமியேன் செய்த சிவபாவத்தை நீர் தீர்த்தருளினீர். இதற்கு தமியேன் செய்யுங் கைம்மாறு யாது? அது நிற்க. நீர் இங்கு வந்த காரணம் யாது? சொல்லும்" என்று சொல்லிற்று.

அதுகேட்ட உக்கிர பாண்டியர், "நான் பொன்னை விரும்பி வந்தேன்" என்றார். என்றலும், மகாமேரு பருவதம், "நீர் விரும்பிய செம்பொன் அம் மாமர நிழலின்கணுள்ள அறையிலே கிடக்கின்றது" என்று கையினாலே சுட்டிக் காட்டியது. உக்கிர பாண்டியர் அப் பொன்னறையின் பக்கத்திற் சென்று, அதனை மூடிய பாறையை நீக்கித், தமது அவாவளவினதாகிய பொன்னை வாரிக்கொண்டு, முன் போல மூடி, அதன் மேலே தமது பெயரையுங் குறியையும் எழுதிவிட்டு, மீண்டு தம்முடைய சேனையை அடைந்து, தேர் மீதேறித், தென் திசை நோக்கிச் சென்று, மலைகளையும் போக பூமிகளையும் பிறவற்றையுங் கடந்து, பரத கண்டத்தை அடைந்து, மத்தியம் விராடம் மாளவம் தெலுங்கம் என்னும் தேசங்களிலுள்ள அரசர்களெல்லாருந் தங்கள் தங்கள் நகரங்கடோறும் வரவு நோக்கி எண்ணில்லாத சேனைகளோடும் எதிர்கொண்டெதிர்கொண்டு உபசரிக்கச் சென்று, பாண்டி நாட்டை அடைந்து மதுராபுரிக்குச் சமீபித்தார்.

உக்கிர பாண்டியர் சோமசுந்தரக் கடவுளுடைய திருக் கோபுரத்தைக் கண்டவுடனே, விரைந்து தேரினின்றும் இறங்கி, நமஸ்கரித்து எழுந்து, நடந்து, பிராமணர்களுந் துறவிகளுஞ் சைவர்களுந் திருக்கோயில்

தொண்டர்களுந் திரண்டெதிர்கொள்ள, வைகை ஆற்றைக் கடந்து, திருநகரத்தினுள்ளே போய்த் திருக்கோயிலிற் புகுந்து, சோம சுந்தரக் கடவுளை வலஞ் செய்து, வணங்கித் துதித்துக்கொண்டு, தமது திருமாளிகையின் உள்ளே புகுந்தார். மகா மேரு பருவதத்தினாற் கிடைத்த திரவியத்தினாலே குடிகளெல்லா வற்றையும் பாதுகாத்து, தேவர் தென்புலத்தார் சுற்றத்தார் விருந்தினர் என்னும் நால்வகை யோரையும் ஓம்பிக், களிப்புற்றிருக்கும் நாளிலே, சிவபெருமானுடைய ஆணையினாலே நடக்கும் கிரகங்கள் தத்தந் தொழிலின் மாறுபா டொழிய, பாண்டி நாடெங்கும் மழை பெய் தது; அதனால் வளங்களெல்லாம் பெருகின; அதனால் உயிர்களெல்லாந் தழைத்தன.

இங்ஙனம் அரசாண்ட உக்கிர பாண் டியர், தம்முடைய குமாரனாகிய வீர பாண்டி யனுக்கு முடி சூட்டித், தம்மரசை அவனுக் குக் கொடுத்துவிட்டு, அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நின்ற சிவத்தோடும் இரண்டறக் கலந்தார்.

## (பதினாறாவது)
## வேதத்திற்குப் பொருளருளிச் செய்த படலம்

பிரமாண்ட சிருட்டி ஆரம்ப கால மாகிய கிருதயுகத்திலே, சிவபெருமானுடைய திருவாக்கினின்றும் பிரணவந் தோன்றிற்று. அதினின்றும் வேதங்களெல்லாந் தோன்றின. நைமிசாரணிய வாசிகளாகிய கண்ணுவர் கர்க்கர் முதலிய முனிவர்கள், அவ் வேதங் களை ஓதியும், அவற்றின் பொருளை அறி யாது மயங்கிக் கவலையுற்றிருந்தார்கள். அப்பொழுது அரபத்தர் என்னும் ஒரு பிரா மணர் வந்தார். அவரை முனிவர்கள் எதிர் கொண்டு வணங்கி, ஆசனத்திருத்தி, வழிபட் டார்கள். அரபத்தர் அவர்களை நோக்கி, "முனிவர்காள்! நீங்கள் மனம் வேறுபட்டு முகம் வாடியிருப்ப தென்னை?" என்று வினாவ, முனிவர்கள், "சுவாமி! வேதங்களுக் குப் பொருள் உணர்த்தவல்ல ஆசாரியர் இன்மையால் மனக்கவலையுற்றோம். இதற்கு யாது செய்வோம்?" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

அதுகேட்ட அரபத்தர், "முனிவர்காள்! வேதத்தின் பொருள், அவ்வேதத்தை அருளிச் செய்த சிவபெருமானே திருவுருக்கொண்டு வந்து உணர்த்தினாலன்றி, உணர்தல் கூடாது. யாதுந் தவத்தாலன்றிச் சித்தியாது. தவமும் புண்ணிய தலத்தினன்றிப் பயன்படாது. புண் ணிய தலங்களுள்ளும் சிவதலங்களே தவத் துக்குச் சிறந்தன. சிவதலங்களுள்ளும் உத்த மோத்தம சிவதலம் விராட் புருடனுடைய பிரமரந்திரத்தினின்றும் பன்னிரண்டங்குலம் மேற்பட்டு விளக்குஞ் சீவன்முத்தி புரமாகிய மதுரையேயாம். அம் மதுரையின்கண்ணே சோமசுந்தரக் கடவுளுடைய விமானத்துக்குத் தென்பக்கத்தில் எழுந்தருளியிருக்கும் பரமா சாரியராகிய தட்சிணாமூர்த்தியே உங்களுக்கு வேதப் பொருளை உணர்த்தியருள்வர். நீங் கள் சென்று அவர் சந்நிதியில் அருந்தவஞ் செய்யுங்கள்" என்று அருளிச் செய்தார்.

கண்ணுவர் முதலிய முனிவர்கள் அதுகேட்டு, மகிழ்ந்து அரபத்தரை வணங்கி, அவரோடு சென்று, மதுரையை அடைந்து, பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ் செய்து, சோமசுந்தரக் கடவுளையும் மீனாட்சியம்மை யாரையும், நெஞ்சு நெக்குருகக், கண்ணீர் வார, மெய்ம்மயிர் சிலிர்ப்ப, வணங்கித் துதித் துக்கொண்டு, வலஞ் செய்து விமானத்துக்குத் தென்பக்கத்தில் வந்து, கல்லாலமர நிழலின்கண்

எழுந்தருளி யிராநின்ற பளிங்கு நிறமுடைய திருமேனியும், பளிங்கு மலையிற் பதித்த பவளம்போலுந் திருவடிகளும், மூன்று திருக் கண்ணும் சிவந்த திருவாயும், செபமாலையை யும் அமுத கும்பத்தையுஞ் சின்முத்திரையை யும் வேத புத்தகத்தையுந் தரித்த நான்கு திருக்கரமும் உடைய தட்சிணாமூர்த்தியைத் தரிசித்து, வணங்கித் துதித்தார்கள். அம் மூர்த்தியுடைய இருபத்திரண்டு பீஜரூபமாகிய மேதா வித்தையை அரபத்தரால் உபதேசிக்கப் பெற்றுக், கார்த்திகை மாசத்துப் பௌர்ணிமை முதல் அடுத்த கார்த்திகை மாசத்துப் பௌர் ணிமை வரையும் நாடோறும் முப்பொழுதுஞ் செபித்துத், தருப்பணம் ஓமம் பிராமண போச னஞ் செய்துகொண்டு வந்தார்கள்.

அப்பொழுது தட்சிணாமூர்த்தி, விபூதி யும் உருத்திராட்சமுந் தரித்த திருமேனியும், திருப்புன்முறுவலையுடைய திருமுகமும், உத் தரீயந் தரித்த திருமார்பும், பதினாறு வயசு முடைய ஒரு பிராமண குரு வடிவந் தரித்து, வேதத்தைச் சுரத்தோடும் உச்சரித்துக்கொண்டு, முனிவர்கள் காண வெளிவந்து நின்றார். அது கண்ட முனிவர்கள், அவ் ஆசாரியரை வணங் கித் துதித்துக்கொண்டு, ஆனந்த மாக்கடலின் மூழ்கி நின்றார்கள். அம் முனிவர்கண் மீது ஆசாரியர் திருக்கண் சாத்தி, "நம் பத்தர் களாகிய முனிவர்களே! உங்களுக்கு வேண்டு வது யாது?" என்று வினவியருள, முனிவர்கள் அஞ்சலி செய்து, "எம்பெருமானே! அடியேங் களுஞ் சகலலோகத்தாரும் உய்யும்பொருட்டு, வேதங்களின் பொருளை இப்போது அடியேங் களுக்கு உபதேசித்தருளும்" என்று பிரார்த்தித் தார்கள். பரங் கருணைத் தடங்கடலாகிய ஆசாரியர், அம் முனிவர்களோடு திருவால வாயுடையராகிய சிவலிங்கப் பெருமான் சந்நிதானத்தை அடைந்து, வேதப் பொருளை அருளிச் செய்வாராயினார்:-

"முனிவர்காள்! அதிரகசியமாயும் போகமோட்சமிரண்டையும் பயப்பதாயும் உள்ள வேதத்தின் பொருளை அருளிச் செய்வோம், கேளுங்கள். சுயம்புவாய், உத்தமோத்தமமாய், அநாதிகாரணமாய் விளங்காநின்ற இச் சிவ லிங்கமே சகல வேதங்களுக்கும் பொருளாகும். ஒன்றேயாய், அத்துவிதமாய்ப், பரப்பிரமமாய்ப், பராற்பரமாய்ச், சத்தியஞானானந்த பரிபூரண மாய்ச், சுயம்பிரகாசமாய் உள்ளது அழிவில் லாத இச் சுந்தரலிங்கமே என்று வேதாந்தங் கள் சொல்லும். வேதமும் ஒன்றே; அதன் பொருளும் ஒன்றே. ஆயினும், சாகைகளின் பேதத்தினாலே வேதம் அனந்த பேதமாயிற்று. சோமசுந்தரக் கடவுளது மாயையினால் வேதப் பொருளும் அனந்தமாயிற்று. சிவபெருமான் ஆதியிலே பிரமாவைப் படைத்துத், தம்மிடத்தே தோன்றிய வேதங்களெல்லாவற்றையுங் கொடுத் தருளினார்; அதனாலே மூவுலகத்தும் வேத விஞ்ஞானம் பரந்தது. சோதிமயமாய்த், தோற் றம் நடு இறுதி இல்லாததாய் விளங்கும் மகாலிங்கம் எதுவோ, அதுவே பமாகாச சரீர மாகிய பிரமமெனப்படும். அதுவே, சிருட்டி முதலிய காரணத்தினாலே, முப்பிரிவுடைய தாயிற்று. கீழ்ப்பாகத்தில் ஆன்ம தத்துவமும், நடுப் பாகத்தில் வித்தியா தத்துவமும், நுனிப் பாகத்திற் சிவ தத்துவமுந் தோன்றின; எல் லாப் பாகங்களினும் எல்லாத் தத்துவமும் தோன்றின. பிரமா, விட்டுணு, உருத்திரர், சர்வகாரணேசுவரர் என்னும் இவர்கள் முறையே தத்துவாதிபர்கள் என்று சகல வேதங்களும் சொல்லும். ஆன்ம தத்துவத்தில் அகாரமும், வித்தியா தத்துவத்தில் உகாரமும், சிவ தத்து வத்தில் மகாரமும் எல்லாத் தத்துவங்களிலும் விந்துவும் நாதமுந் தோன்றின. இதனாலே பிரணவோற்பத்தி சொல்லப்பட்டது. வியட்டி யுஞ் சமட்டியுமாயுள்ள பிரணவத்தினின்றும் வியட்டி சமட்டியாகிய பூர் முதலிய ஏழு

வியாகிருதிகளும் சிவாஞ்ஞையினாலே தோன் றின. பின் அவற்றினின்றும் வியட்டி சமட்டி ரூபிணியும் வேதஜனனியும் சிந்தித்த பொரு ளைத் தருவதுமாகிய முப்பதமுடைய காயத் திரி தோன்றிற்று. அதனின்றும் நான்கு வேதங் களுந் தோன்றின. அவைகள் பின்னும் பல பேதங்களாக விரிந்தன. பிரணவ முதலிய மகாமந்திரங்களும், அகார முதலிய அக்கரங் களும், காமிக முதலிய சிவாகமங்களும், திருவாலவாயுடையாருடைய உச்சிமுகமாகிய ஈசானத்தினின்றுந் தோன்றின. இருபத்தொரு பேதமுடைய இருக்கு வேதங் கிழக்கு முக மாகிய தற்புருடத்தினின்றும், நூற்றொரு பேதமுடைய யசுர்வேதம் தெற்கு முகமாகிய அகோரத்தினின்றும், ஆயிரம் பேதமுடைய சாமவேதம் வடக்கு முகமாகிய வாமதேவத் தினின்றும், ஒன்பது பேதமுடைய அதர்வ வேதம் மேற்கு முகமாகிய சத்தியோ சாதத் தினின்றுந் தோன்றின. வேதம் நான்காதலால், வர்ணாச்சிரமங்களும் நந்நான்காயின. பல வகைப்பட்ட தருமங்களும் யாகங்களும் வேதத் தின் வைபவத்தினாலே தழைப்பனவாம். வேதப் பொருளை அறிந்தவர்கள் அவைகளைச் செய் வார்கள். வேதங் கருமகாண்டமும் ஞான காண்டமுமென இரண்டு பிரிவுடையது. அவை களுள்ளே, கரும காண்டம் இம் மகாலிங்க பூசாவிதியை உணர்த்தும். ஞான காண்டம் திருவாலவாயுடையாருடைய சச்சிதானந்த ரூபத்தை உணர்த்தும். விட்டுணு முதலிய தேவர்கள் சிவபெருமானுடைய அம்சபூதர்கள்; சர்வ வியாபகராகிய சிவபெருமானே அம்சி யென்று சொல்லப்படுகின்றார். எல்லாத் தேவர் களுக்குங் கொடுக்கப்படும் அவியனைத்தை யும், அம்சியாகிய தாமே ஏற்றுப் பலங் கொடுப்பர். வேதத்தில் விதிக்கப்படும் அக்கினிட் டோம் முதல் அசுவமேதம் இறுதியாகிய யாகங்களும், நித்திய நைமித்திய காமிய கர்மங்களும், எல்லாத் தத்துவங்களுக்கும் உறைவிடமாகிய திருவாலவாயுடையாருடைய பூசா பேதங்களாகும். இத் திருவாலவாயுடை யாரைப் பூசித்தால், வேதத்தில் விதிக்கப்பட்ட கருமங்களனைத்தையும் அநுட்டித்தால் எய் தும் பயன் கிடைக்கும். இத் திருவாலவாயுடை யாரைத் தியானித்தால், வேதாந்த ஞானத்தால் எய்தும் பயன் கிடைக்கும். கருமத்தினாலே சித்தசுத்தியும், சித்தசுத்தியினாலே ஞானாங் கமும் உண்டாகும். தருமமுஞ் சாந்தி தாந்தி முதலிய குணங்களும் இயம முதலிய அட்டாங்க யோகமுமே ஞானாங்கமெனப்படும். ஞானாங்கங்களெல்லாவற்றுள்ளும் விபூதி தாரணம் உருத்திராட்ச தாரணம், சிவலிங்க பூசை, சிவலிங்கப் பிரதிட்டை, சிவஸ்தல தரிசனம், குருவை வழிபடல், சிவனடியாரை வழிபடல் என்பவைகளே மிக உயர்ந்தன. அறிவுடையவர் இவ்வுண்மையை அறிந்து, ஞானாங்கங்களையே எப்பொழுதும் ஆசரிக் கக் கடவர். பிற நூல்களில் விதிக்கப்பட்ட தருமங்களினும் ஸ்மிருதியில் விதிக்கப்பட்ட தருமத்தினும், வேதத்தில் விதிக்கப்பட்ட தருமமே விசேடம். சிவபெருமானிடத்தே தோன் றினமையால், வேதமே பிரமாணம்; வேதத்தை முதனூலாகக் கொண்டமையால் ஸ்மிருதி பிரமாணம். சகமனைத்துஞ் சிவம் என்னும் ஞானமே போக மோட்சங்களைக் கொடுக்கும்; அந்த ஞானத்துக்கு ஒப்பு வேறொன்றுமில்லை. நாமுணர்த்திய வேதப்பொருளனைத்தும் உங் களுக்கு நன்றாக விளங்குக" என்று திருவாய் மலர்ந்து, ஆசாரியர் சிவலிங்கத்தில் மறைந் தருளினார். கண்ணுவர் முதலிய முனிவர்கள் எல்லாரும் வேதப்பொருளை நன்குணர்ந்தார் கள்.

*கற்பெனும் உறுதி நிலையே ஒரு பெண்ணுக்கு உண்மையான பெருமை.*

# சிவ சின்னங்களில் முதன்மை பெறும் விபூதி (திருநீறு)

– திரு எஸ்.ரீ. குமரன் அவர்கள் –

சைவ சமய பெருமக்களிற்கு திருநீறு, உருத்திராட்சம், ஐந்தெழுத்து ஆகிய மூன்றும் மிகவும் இன்றியமையாதவை. இதில் விபூதி அணிவது எத்தகையினராக இருந்தாலும் மரணத்திற்குப் பின் இறுதியில் தீயில் வெந்து அனைவரும் பிடி சாம்பலாக ஆவர் என்னும் தத்துவத்தை உணர்த்தி நாமும் இதுபோல்த் தான் ஆகையால் தூய்மையாக அறநெறியில் இறை சிந்தனையோடு வாழவேண்டுமென உணர்த்துவதற்காகத்தான். எனவேதான் பசும் சாணம் நீறிய நீற்றினை திருநீறாக சைவர்கள் அணிகிறார்கள்.

இந்தத் திருநீறானது சைவத்தின் முழு முதற் கடவுளான சிவனைக் குறிப்பதாக சைவர்கள் நம்புகின்றனர். ஞானம் என்னும் நெருப்பில் அனைத்தும் சுட்டெரிக்கப்பட்ட பின் எஞ்சுவது பரிசுத்தமான சிவதத்துவமே என் பதை விபூதி குறிக்கின்றது. பசுவின் சாணத்தை எடுத்து அதனைச் சுட்டு சாம்பலாக்கிய பஸ்மமே சுத்தமான விபூதி ஆகும் விபூதி தரிப்பதால் ஆன்மீக சம்பந்தமான நன்மைகள் விளைவதுடன் உடல் நலம் சார்ந்த நன்மை களும் உண்டாகும் என்பது சான்றோர்களின் கருத்தாகும்.

அதிகாலையில் எழுந்து கை கால் முகம் கழுவிய பின்னும் மாலைப் பொழு திலும் இவ்வாறு கை கால் முகம் கழுவிய பின்னும் வந்து நனைக்காமல் திருநீறு பூசுவதுண்டு. ஆனால் குளித்து முடிந்தபின் திருநீறு எடுத்து நீரில் குழைத்து அதாவது நனைத்து உடலில் பூசி வந்தனர். இரவு நேரம் ஒரு நபர் தூங்கும்போது அவர் படுக்கை யில் லட்சக்கணக்கான அணுக்கள் பரவியிருக் கும் என்று விஞ்ஞானம் கூறுகிறது. அதே போல் மாலை நேரத்தில் சுற்றுச் சூழலில் எண்ணற்ற நோயணுக்கள் உலாவுகின்றன என்பது அறிவியலின் உறுதியான கண்டு பிடிப்பு. ஈரமில்லாத விபூதி ஒரு கிருமிநாசினி ஆகும். அதனால் காலையும் மாலையும் நோயணுக்களின் பாதிப்பு ஏற்படாமலிருக்க ஈரமில்லாத திருநீற்றினை அணிந்து வந்தனர். குளிக்கும் நேரம் ஈரம் காரணமாக நீர் கட்டு உருவாகும். நீர் கட்டு உருவாவதை தவிர்ப் பதற்காகத்தான் அதாவது மேலதிக நீரினை உறிஞ்சுவதற்காகவே குளித்தபின் ஈரமான திருநீறு அணிவது வழக்கமாக்கப்பட்டது.

திருநீறு கிருமிநாசினியும் கூட. அதனை உடல் முழுவதும் பூசுவதனால் உடலில் உள்ள துர்நாற்றம் மறையும் என இயற்கை மருத்துவம் கூறுகிறது. நெற்றியில் தரிப்பத னால் தலைக்குள் கோர்க்கும் நீரினை திருநீறு வெளியேற்றுகிறது. சூரிய கதிர்களின் சக்தி களை இழுத்து நெற்றி வழியாக கடத்தும் வேலையை திருநீறு செவ்வனே செய்யும். அதனால்த்தான் நெற்றியில் திருநீறு பூசு கிறார்கள்.

*வலிமை, உண்மை, தன்னடக்கம் கொண்டவனே உண்மையான வீரன்.*

திருநீற்றிற்கு விபூதி, பசுமம், பசிதம், சாரம், இரட்சை எனப் பல பெயர்கள் உண்டு.

1) விபூதி - மேலான ஐசுவரியத்தைத் தருவது.

2) பசிதம் - அறியாமையை அழித்து சிவஞான சிவதத்துவத்தைத் தருவது.

3) சாரம் - ஆன்மாக்களின் மலமாசினை அகற்றுவது.

4) இரட்சை - ஆன்மாக்களை துன்பத்தினின்றும் நீக்கி பேரின்ப வாழ்வு தருவது.

5) திருநீறு - பாவங்களை எல்லாம் நீறு செய்வது.

6) பஸ்மம் - பழைய வினைகளை பஸ்மமாக்குவது.

திருநீற்றிற்கு வேறு காரணத்திற்காகவும் வேறு பெயர்கள் உண்டென்று வீராகம சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

"சத்யோ சாதாத் விபூதிச்ச வாமாத் பசிதமே வச
அகோராத் பஸ்ம சம்சாத் புருசாத் சார நாமச"

அதாவது சிவனின் ஐந்து முகங்களிலும் இருந்து ஐந்து வகை பசுக்கள் தோன்றிய தாகவும் அந்தந்த பசுவின் சாணத்தில் செய்யப்படும் திருநீற்றிற்கு ஒரு பெயர் கூறப் பட்டுள்ளது.

1) ஈசானிய முகத்தில் இருந்து தோன்றிய சிகப்பு நிற பசு சுமனையாகும். அதன் சாணத்தில் செய்யப்பட்ட திருநீறு ரட்சை எனப்படும்.

2) தற்புருச முகத்தில் இருந்து தோன்றிய புகை நிற பசு சுசீலையாகும். அதன் சாணத்தில் செய்யப்பட்ட திருநீறு சாரம் எனப்படும்.

3) அகோர முகத்தில் இருந்து தோன்றிய கருப்பு நிற பசு சுரபியாகும். அதன் சாணத்தில் செய்யப்பட்ட திருநீறு பஸ்மம் எனப்படும்.

4) வாமதேவ முகத்தில் இருந்து தோன்றிய வெள்ளை நிற பசு பத்திரையாகும். அதன் சாணத்தில் செய்யப்பட்ட திருநீறு பசிதம் எனப்படும்.

5) சத்தியோசாத முகத்தில் இருந்து தோன்றிய கபில நிற பசு நந்தையாகும். அதன் சாணத்தில் செய்யப்பட்ட திருநீறு விபூதி எனப்படும்.

பசுக்களின் நிறத்தின் அடிப்படையில் விபூதியின் வகைகளைப் பார்த்தோம். சாணம் சேகரிக்கும் முறையின் அடிப்படையிலும் சேகரித்த சாணத்தினை பஸ்மமாக்கும் முறையின் அடிப்படையிலும் விபூதியினை நான்கு வகைகளாகப் பிரிக்கின்றனர். அவை,

1) கல்பம் 2) அனுகல்பம் 3) உபகல்பம் 4) அகல்பம்

## கல்பம்

கன்றுடன் கூடிய நோயற்ற பசுவின் சாணத்தைப் பூமியில் விழாது தாமரை இலையில் பிடித்து உருண்டையாக்கி பஞ்ச பிரம்ம மந்திரங்களால் சிவாக்கினியில் எரித்து எடுப்பதே கல்பத் திருநீறு எனப்படும்.

## அனுகல்பம்

ஆரண்யங்களில் (காடுகளில்) கிடைக்கும் பசுஞ் சாணங்களைக் கொண்டு முறைப்படி தயாரிக்கப்படுவது அனுகல்பத் திருநீறு எனப்படும்.

*அமைதியாக வாழ நீங்கள் கண்டதையும் கேட்டதையும் பிறரிடம் கூறாதே.*

**உபகல்பம்**

மாட்டுத் தொழுவம் அல்லது மாடுகள் மேயும் இடங்களில் இருந்து எடுத்த சாணத்தைக் காட்டுத்தீயில் எரித்து பின்பு சிவாக்கினியில் எரித்து எடுக்கப்படுவது உபகல்பத் திருநீறு எனப்படும்.

**அகல்பம்**

அனைவராலும் சேகரித்துக் கொடுக்கப்படும் சாணத்தைச் சுள்ளிகளால் எரித்து எடுப்பது அகல்பத் திருநீறு எனப்படும்.

இவற்றில் கல்ப வகைத் திருநீறே உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இந்தக் கருத்துக்களை சீர்தூக்கிப் பார்த்து நம்முடைய தேவைக்கேற்ற திருநீற்றினை நாம் தயாரித்து அணியலாம்.

**முறைப்படி திருநீறு தயாரிக்கும் முறை:**

ஒரே பசுவின் சாணத்தை பசு சாணம் போடும்போது நிலத்தில் விழாமல் தாமரை இலையில் பிடித்து அதனை உருண்டைகளாக்கி வெயிலில் நன்றாக காய வைக்க வேண்டும். நன்றாக ஈரமில்லாமல் காய்ந்த பின்னர் சாண உருண்டைகளை உமியால் மூடி உமிக்கு தீயிட வேண்டும். 4 அல்லது 5 நாட்கள் கழித்து இதனை மெதுவாக கிளறி சாணத்தின் சாம்பலை மட்டும் சேகரிக்க வேண்டும். இதனை துணியில் சலித்து உரிய பாத்திரத்தில் சேகரித்து வைத்து உபயோகிக்க வேண்டும். அகத்திய மகரிஷி தனது நூலில் பஞ்சாட்சர மந்திரத்தினை விபூதி தயாரிப்பதற்கு அணிவதற்கு எவ்வாறு பிரயோகம் செய்யவேண்டும் எனக் கூறியுள்ளார்.

இச் சமயத்தில் திருநீறு செய்வதற்கு பசுவின் சாணத்தை நாம் ஏன் பயன்படுத்துகிறோம் எனப் பார்ப்பது சிறப்பாக இருக்கும். பசுவிலிருந்து நீங்கிய மலம் சாணம். அது அக்னியில் தகிக்கப்படும்போது தூய்மையடைந்து திருநீறாகிறது. மும் மலங்களினால் கூடப்பெற்ற பசுவாகிய ஆன்மா சிவாக்கினியில் தகிக்கப்படும்போது தூய்மையடைந்து பிறவிப் பயனையடைகிறது. பசுவின் மலம் நீறாக்கப்பட்டு தூய்மையடைதல் போல ஆன்மாக்கள் ஆகிய பசுக்களின் மலங்கள் சிவ ஞான அக்கினியால் தகிக்கப்பட்டு தூய்மையடைதல் வேண்டும் என்பதை உணர்ந்துகொள்வதற்காகவேயாம்.

திருநீற்றின் பெருமையை திருஞானசம்பந்தர் தனது மந்திரமாவது நீறு எனத் தொடங்கும் திருநீற்றுப் பதிகத்தில் தெளிவாகக் கூறியுள்ளார். சிவாயநம நமசிவாய பஞ்சாட்சர மந்திரத்தை செபித்தபடி உத்தூளனமாக (நெற்றி முழுவதும்) அல்லது திரிபுண்டரமாக (3 கோடுகள்) திருநீற்றினை அணிதல் வேண்டும். இதற்கு ஆட்காட்டி விரல் நடுவிரல் மோதிர விரல் ஆகிய விரல்களை உபயோகிக்க வேண்டும். கிழக்கு முகமாக அல்லது வடக்கு முகமாக நோக்கிய படியே அணிதல் வேண்டும். இதனால் நல்வாக்கு நல்லோர் நட்பு உயர்ந்த நற்குணங்கள் குறைவில்லா செல்வம் சகல விதமான ஐசுவரியங்கள் போன்ற எல்லா நலமும் பெற்று நம் வாழ்வில் சிறப்புடன் வாழலாம்.

*பொறுமை என்பது தன் நிலையில் தாழ்வு வராது பாதுகாத்துக் கொள்வதாகும்.*

திருநீறு பூசுபவர்களை அது புனிதப்படுத்துகிறது. "பூசுநீறு போல் உள்ளும் மனிதர்கள்" என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார். விபூதி பூசுபவர்களை அது தனது வெண்மையைப் போல் மாற்றுகிறது. திருநீற்றினை முறைப்படி அணிவதனால் சகல ஐசுவரியங்களும் நமக்குக் கிடைக்கும்.

திருநீற்றினைக்கொண்டு திருஞானசம்பந்தர் பாண்டிய மன்னனின் வெப்புநோயை தீர்த்ததையும் அப்பர் தன்னுடைய வயிற்று வலியினை சுகமாக்கிக் கொண்டதையும் நாம் கவனித்துப் பார்க்க வேண்டும்.

எந்தப் பொருளைச் சுட்டாலும் அது கரியாகி பின்னர் சாம்பல் ஆகும். சாம்பலை மேற்கொண்டு எரிக்க முடியாது. இதன்மூலம் இது வாழ்வின் நிலையற்ற தன்மையை உணர்த்துகிறது. முடிவில் முடிசார்ந்த மன்னரும் ஒரு பிடி சாம்பல் ஆகும் நியதியை இது சுட்டிக் காட்டுகிறது.

## அணியும் முறை:

திருநீற்றினை அனுஸ்டானங்கள் கடைப்பிடிப்பவர்களும் சிவபூசை செய்பவர்களும் முதலில் திருநீற்றினை சாதாரணமாகப் பூசிக்கொள்ள வேண்டும். பின்னர் வலதுகை பெருவிரல் மோதிரவிரல் நடுவிரலினால் திருநீற்றினை எடுத்து இடதுகை உள்ளங்கையில் வைத்து பஞ்சாட்சரத்தை எழுதி இடது கையினால் மூடிக் கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்ல வேண்டும்.

| | |
|---|---|
| ஓம் நிவர்த்தி கலாயை நம | ஓம் பிரதிஸ்டா கலாயை நம |
| ஓம் வித்தியா கலாயை நம | ஓம் சாந்தி கலாயை நம |
| ஓம் சாந்தியதீத கலாயை நம | ஓம் ஈசானாய நம |
| ஓம் தற்புருசாய நம | ஓம் அகோராய நம |
| ஓம் வாம தேவாய நம | ஓம் சத்யோசாதாய நம |
| ஓம் ஹிருதாய நம | ஓம் சிரசே நம |
| ஓம் சிகாயை நம | ஓம் கவசாய நம |
| ஓம் நேத்திரத்திராய நம | ஓம் அஸ்திராய பட் |

பின்னர் சிறிது நீர் விட்டு இரு கைகளையும் தேய்த்து குழைத்து ஓம் ஈசானாய நம ஓம் தற்புருசாய நம ஓம் அகோராய நம ஓம் வாமதேவாய நம ஓம் சத்யோசாதாய நம என்ற மந்திரங்களைச் சொல்லி முறைப்படி அந்தந்த இடங்களில் இட்டுக்கொள்ள வேண்டும்.

## திருநீறு அணியும் இடங்கள்

| | | |
|---|---|---|
| 01) தலை நடுவில் (உச்சி) | 02) நெற்றி | 03) மார்பு |
| 04) தொப்புளுக்கு சற்று மேல் | 05) இடது தோள் | 06) வலது தோள் |
| 07) இடது கையின் நடுவில் | 08) வலது கையின் நடுவில் | 09) இடது மணிக்கட்டு |
| 10) வலது மணிக்கட்டு | 11) இடது இடுப்பு | 12) வலது இடுப்பு |
| 13) இடது கால் நடுவில் | 14) வலது கால் நடுவில் | 15) முதுகுக்குக் கீழ் |
| 16) கழுத்து முழுவதும் | 17) வலது காதில் ஒரு பொட்டு | 18) இடது காதில் ஒரு பொட்டு |

*ஆசையற்றவனே அகில உலகிலும் மிகப் பெரும் பணக்காரன்.*

இவ்வாறு நாம் அணிந்து கொள் வதனால் அந்தந்த பகுதிகளினால் செய்யப் பட்ட பாவங்கள் நீங்கும்.

வடக்கு திசை அல்லது கிழக்கு திசைநோக்கி நின்றுகொண்டு வலது கையின் பெருவிரல் மோதிர விரல் ஆகிய இரண்டு விரல்களினாலும் விபூதியினை எடுத்து கீழே சிந்தாமல் ஆட்காட்டி விரல் நடுவிரல் மோதிர விரல் ஆகிய மூன்று விரல்களிலும் பெருவிர லினால் பரவி அண்ணார்ந்து நின்று பூசிக் கொள்ளல் வேண்டும். எடுக்கும்போது திருச் சிற்றம்பலம் என்றும் பூசும்போது சிவாயநம அல்லது சிவசிவ என்று உதடு பிரியாது மனம் ஒன்றிச் சொல்லிக் கொள்ளுதல் வேண் டும். இரண்டு விதமாக விபூதியினைப் பூசிக் கொள்ளலாம். ஒன்று திரிபுண்டரமாக அதா வது மூன்று கோடுகளாக தரிப்பது. இது குறிப்பாக சமய தீட்சை கேட்டவர்கள் தரிக் கும் முறையாகும். மற்றையது உத்தூளன மாக அதாவது நெற்றி முழுவதும் பரவலா கத் தரிப்பது. இப்படி யார் வேண்டுமானாலும் விபூதி தரிக்கலாம்.

வாத பித்த கப நாடிகளை சமநிலைப் படுத்தக் கூடியது. மனம் வாக்கு காயம் ஆகியவற்றைத் தூய்மையாக்கும். ஆணவம் கன்மம் மாயை என்ற மும் மலங்களை நீங்கச் செய்யும்.

விதிப்படியமைந்த திருநீற்றை உட் கொண்டால் உடம்பின் அசுத்தங்கள் அனைத் தையும் போக்கி நாடி நரம்புகள் அனைத்திற் கும் வலிமையைக் கொடுக்கும். உடலுக்கும் உயிருக்கும் இம்மைக்கும் மறுமைக்கும் உயர்வளிக்கும் விபூதியினை தினமும் நாம் அணிந்து உயர்வடைவோமாக.

## நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும் பொருந்தியவர்

காரைநகர் தவமிருந்து பெற்றெடுத்த ஞானி
கருதரிய வியாவிலுக்கு வாய்த்த மகாராணி
ஊரையே பேறாக்கிய ஐயனாரைப் பேணிய
உத்தமராய் விளங்கும் சோமசேகரம் ஒருதேனீ!

மந்திர மாவதும் வானவர் மேலதும்
சுந்தர மாவதும் துதிக்கப்படுவதும்
தந்திர மாவதும் சமயத்திலுள்ளதும்
சொந்தமாய்த் தருகிறார் சோமசேகரம் ஐயா.

இன்முகம் காட்டியே ஈகைதனைப் புரிந்தும்
அன்பெனும் ஊற்றெடுக்க அறமதை விரும்பியே
ஒன்பது கிரகங்களையும் ஒருமுகமாய் திரட்டியே
தொன்மை மறவாத திருநீற்றில் பேறளிப்பார்.

கோமாதாவைக் கோயிலாக்கி காரையில்
கோடி புண்ணியமாம் கோமயப் பேறுமாக்கி
சாமானிய அடியாராய்ச் சாதனைபுரிந்து
சௌபாக்கிய மாகின்றார் சோமசேகரம் ஐயா.

தேனில் குழைத்தும் சாப்பிடலாம் ஓதும்
திருவாசகத்தில் குழைத்தும் சாப்பிடலாம்
மேனியில் மருந்தாகிப் பூசிடலாம் - மகா
ராணியின் தூய்மையான திருநீறு வரமே.

ஆன்மீக வழியில் வெல்க அவர் தொண்டு
ஆசாரமாகும் தூய திருநீற்றினைக் கொண்டு
தேன்பாயும் ஓரிடமாம் வியாவிலில் உண்டு
தீர்க்க ஆயுள் பெறுவோம் காரையில் சென்று.

*-கே.எஸ். சிவஞானராஜா-*

*செல்வச் செழிப்பு பெருந்தன்மையை அழித்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.*

# வழித்துணை 37

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 பொழுதுபோவதற்காய் ஒருவரிடம் சென்று நாங்கள்
பொழுதே தெரியாமல் பேசிடுதல் நன்றன்று
பொழுது சிலருக்குப் பொன்போன்ற தாயிருக்கும்
பொழுதறிந்து ஒருவரிடம் பேசுதல் நன்றாம்.

02 நேற்றைய நிலையிலேதான் இன்றொருவர் இருப்பரென்று
ஆற்றுகின்ற கருமத்தை அறியாமல் ஆற்றிடாதீர்
மாற்றமுறு நிலமைகளால் மனங்கலங்கி அவரிருப்பின்
ஏற்றிடார் எதையுமவர் அறிந்துசெய்தால் போற்றிடுவார்.

03 கண்டிப்பு ஒன்றும்மேல் விழுகின்ற போதினிலே
துண்டித்துத் தூரநீர் விலகியே சென்றிடாதீர்
தெண்டித்து அதற்குநீர் பரிகாரம் தேடுதலே
தண்டிப்புத் தாக்காமல் தடுப்பதற்கு வழியாகும்.

04 உத்தியோகம் என்பது உமக்கடித்த யோகமன்று
பக்தியோடு பணியாற்றக் கிடைத்ததொரு பாத்திரமாம்
ஊதியமும் அதற்குண்டு உயர்வுகளும் அதற்குண்டு
நீதியோடு பணிசெய்வீர் இறைபணியும் அதுவொன்றே.

05 உடல்சிறிது என்றுசிலர் உம்மோடு தமைவிடுத்து
கடல்பெரிது மலைபெரிது என்றெண்ணிக் களிப்பதுண்டு
அடலேறு கடலைவிட அமைதியான மனத்தினொடு
திடலேறு மலையைவிட நிம்மதியும் பெரிதேயாம்.

06 நம்விரலே நம்கண்ணைக் குத்துகின்ற வேளையிலே
நாமெடுக்கும் நிலைப்பாட்டை பிறதினிலும் எடுத்திட்டால்
தம்பிட்டுப் போயிருக்கும் மனிதநேயம் தலைதூக்கி
கும்பிட்டுக் கூத்தாடிக் குதூகலிக்கும் மானிடமாம்.

*நீங்கள் செய்யும் தானம் உங்கள் வழிச்செலவுக்கான கட்டுச்சோறு.*

07 தாய்வயிற்றுள் பிள்ளையது தாக்குதல்கள் நடத்துகையில்
சேய்நலமாய் உள்ளதென்று தாய்மகிழல் போல
வாய்திறந்து யாருமமை வார்த்தைகளால் தாக்கினாலும்
பாய்ந்தவரைத் தாக்காமல் பரிந்திடுவீர் பலன்பெறுவீர்.

08 ஊனுடலின் மேலிருக்கும் உடையலங்காரங்கள்
மானுடத்துள் மறைந்திருக்கும் மனநிலையைக் காட்டாது
கூனுடலம் ஆனாலும் கோவணம்தான் தரித்தாலும்
வானுயர்ந்த நடத்தைகளே மனத்தழகைக் காட்டிடுமாம்.

09 அறிவெனப்படுவது படிப்பறிவு மட்டுமன்று
நெறியோடு கூடிய பகுத்தறிவுப் பாடமுமாம்
படிப்பறிவு பதவிகளை வ்கிப்பதற்கு உதவுமாப்போல்
பகுத்தறிவு வாழ்வியலை நடாத்துவதற்கு உதவிடுமாம்.

10 நல்லதோ கெட்டதோ அதைஏற்றிடப் பழகுதலும்
ஏற்றதற்கு ஏற்றபடி பரிகாரம் தேடுதலும்
மாற்றமிலா வாழ்வுவாழ உதவிடுமாம் மற்றெல்லாம்
காற்றுள்ள போதெதையும் தூற்றிடாத கவலையதாம்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும்**
**மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்**
**பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர்**
**கீழே உள்ள முகவரியுடன்**
**தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

# படைப்பினில் படிப்பினைகள்

– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –

கல்லினுள் தேரைக்கும் கருப்பையில் சிசுவுக்கும் உணவளிப்பவன் இறைவன். இது முன்னோர் வாக்கு. படைப்பின் படிப்பினை, இன்றைய விஞ்ஞான வளர்ச்சி, இறைவன் பற்றிய தேடல்களில் புதிய பாதைகளைத் திறந்துவிட்டிருந்தாலும் இறைவன் இருக்கின்றானா இல்லையா என்ற தடுமாற்றங்கள் புதிதல்ல. தொன்று தொட்டு இறைவன் பற்றிய தேடல்களும் இருந்திருக்கின்றது. இறைவனை யாரும் நேரடியாக அறியமுடியாது. அப்படி அறிந்ததாகக் கூறினால் அது கட்டுக்கதை. இறைவனை அவனது படைப்புக்களில் இருந்தே அறிந்துகொள்ள முடியும். இதனால்த்தான் இந்து மதம் இயற்கையின் படைப்புக்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து இந்த பிரபஞ்சமாகவே இறைவனைக் காண்கின்றது. எவ்வாறாயினும் இறைவனே அனைத்துப் படைப்புக்கும் காரணமானவன். மேலும் படைப்புக்களின் பெறுபேறாய் உருவாகும் ஒலி ஓசை மொழி மற்றும் அக்கினி (நெருப்பு) வெளிச்சம் ஒளி இவையும் இறைவனாகப் பார்க்கப்பட்டாலும் இவையும் கடந்தவன், இறைவன் கற்பனைகளுக்கு எட்டாதவன், ஆனாலும் அனைத்திலும் இறைவன் கலந்துள்ளான் என்ற முடிவுக்கும் காரணம் படைப்பினில் படிப்பினைகள் எவ்வளவாயினும் இறைவன் நிர்குணன் நிர்மலன் என்பதுகூட இறைவன் இல்லை என்று சொல்வதற்கு நிகரான கருத்துக்கள்தான். இது படைப்பின் படிப்பினைகளில் இருந்து பார்க்கப்பட்டாலும், இறைவனே படைத்து காத்து அழித்தும் மறைத்தும் அருள்புரிகின்றான். மேலும் மனிதர்கள் விஞ்ஞான மெய்ஞ்ஞானங்களாலும் மாயா லீலைகளாலும் அசுரத் தனங்களில் ஈடுபட்டு தம்மையே இறைவன் என்பதும் இறைவனை கையாலாதவன் என்ற நிலைப் பாட்டினால்த்தான், எவ்வாறாயினும் எல்லாம் இறைவன் வைத்த விதிதான் காரணம். பின்னர் அந்த அசுரர்கள்தான் இறை தன்மையை உணர்ந்து கடவுள் தன்மையை அடைந்ததாகவும் நாம் வழிபடும் தெய்வங்களாகவும் பார்க்கப்படுகின்றது.

இந்த வகையில் இறைவன் பற்றிய தேடலில் படைப்பினில் படிப்பினைகளை பின்வருமாறு ஆய்வு செய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

இறைவன் படைப்பில் இரண்டு முக்கிய பிரிவுகள் இருக்கின்றது. ஒன்று வளராது பெருகாது, ஆனால் சில மீளுருவாக்கம் அடையும் முக்கியமாக காற்றும் நீரும் அதாவது காற்று தாவரங்களால் சுத்திகரிக்கப்படுகின்றது. நீர் ஆவியாகி மீண்டும் மழை நீராகக் கிடைக்கின்றது. இரண்டாவது வளரக் கூடியதும் பெருகக் கூடியதும். பெரும்பாலும் உயிரினங்களானாலும் சில கடல் பாறைகளும் சிற்பிகளும் வளரக்கூடியவையே!

இந்தவகையில் எமது முன்னோர்கள் இயற்கையின் படைப்பினில் பல்வேறு அவதானங்களைச் செலுத்தி, தமது வாழ்வை இயற்கைக்கு இசைவாக அமைத்துக் கொண்டார்கள். இந்த வகையில் மண்ணினால் வீடு கட்டினார்கள். மரம் தடிகளால் கூரைகளை அமைத்துக்கொண்டார்கள். அதாவது மண் மீண்டும் மீளுருவாகக் கூடியது. மரம் தடிகள் ஓலைகள், மீண்டும் பயிரிட்டு அறுவடை செய்து பயன்படுத்தக் கூடியவை. சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாது என்றுகூட எமது முன்னோர் ஆராய்ந்தும் அறிந்திருக்கின்றார்கள்.

மேலும் இயற்கையின் படைப்பில் வளராத பெருகாத படைப்புக்களில் குறிப்பாக

*செல்வம் நல்ல பணிப்பெண். ஆனால் மிக மோசமான எசமானி.*

மீளுருவாக்கம் அடையாத பொருள்களை மனிதன் அதிகம் பயன்படுத்தும்போதும் வீணடிக்கும்போதும், வளங்கள் இல்லாமல் அழிந்து போகக்கூடிய சந்தர்ப்பங்களைத் தவிர்த்து உயிரினங்களின் உணவை இறைவன் உயிரினங்களில் இருந்தே பெறக்கூடிய தாகப் படைத்தமையால் மனிதன் விதைத்தும் அறுவடை செய்தும் விலங்கு வேளாண்மை செய்தும் மனித இன சனத்தொகைப் பெருக்கத்தை ஈடுசெய்யக்கூடியதாக வளரக்கூடியதும் பெருகக் கூடியதுமான படைப்பு இறைவனின் கொடையாகும். அல்லது மனிதன் உட்பட உயிரினங்கள் அனைத்திற்கும் மண்ணையும் கல்லையும் கண்ட பொருள்களையும் உணவாக உண்டு வாழக்கூடியதாகப் படைத்து இருந்தால் இந்த பூமியே எப்பொழுதேயோ உண்டு தீர்ந்திருக்கும். மாறாக மனிதன் உழைத்தும் உருவாக்கியும் வாழும் வண்ணம் படைத்தமை படைப்பினில் முக்கிய படிப்பினையாகும். ஆனாலும் காற்றும் நீரும் இந்தப் பூமியில் ஒரே சமயத்தில் வாழக்கூடிய உயிரினங்களின் அளவை தீர்மானிக்கக்கூடும். காரணம் உயிரினங்களுக்கு இவை இரண்டும் மிக அடிப்படையானவையாகும். தவிர மேலே சொல்லப்பட்ட படைப்பின் படிப்பினையில் முக்கியமானது வளப்பற்றாக்குறை. அதாவது ஞாயிற்றுத் தொகுதியில் பல கோள்கள் இருந்தபோதும், பூமியில் மட்டுமே உயிரினங்கள் வாழ்கின்றன. மற்றைய கோள்கள் பெரும்பாலும் மலட்டுக் கோள்களாகவே இருக்கின்றன. காரணம் அங்கு உயிரினங்கள் உருவாகி வாழக்கூடிய வளங்கள் இல்லை. இதுவும் படைப்பினில் முக்கிய படிப்பினை. அதாவது படைப்புக்கள் என்று ஒன்றும் இல்லை. பிரபஞ்சத்தில் அனைத்தும் நிலையாக உள்ளவை என்ற கருத்தை இது நிராகரிக்கின்றது. அதாவது வளங்கள் பயன்படுத்தக் கூடியதாக இல்லாவிட்டால் இந்தப் பிரபஞ்சமே அர்த்தம் அற்றது. இறைவனே வளங்களையும் தேவைகளையும் உருவாக்கினான். மேலும் வளங்கள் அழிவடைந்து போனால் இறைவனால் வளங்கள் படைக்கப்பட வேண்டும். அப்போதுதான் மீண்டும் மீண்டும் இந்தப் பிரபஞ்சத்தில் உயிரினங்கள் தோன்றி வாழவும் முடியும். இந்த வகையில் வளங்களின் முக்கியத்துவம் படைப்பின் படிப்பினையில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.

அதாவது கல்லினுள் தேரைக்கும் கருப்பைச் சிசுவுக்கும் உணவளிக்கும் இறைவன் உயிரினங்கள் வளங்களை நுகர்வதில் பல்வேறு மாற்று முறைமைகளை அந்தந்த உயிரினங்களின் தேவைக்கேற்ப அமைத்து இருப்பதும் படைப்பினில் படிப்பினைதான். வளங்களும் படைப்பினில் படிப்பினைதான். ஆக பூமியில் உயிரினங்கள் அழிந்து போனால் இந்த ஞாயிற்று தொகுதியையே முழுமையாக அழித்து புதிய வளங்களுடன் படைக்கப்பட்டால் அன்றி உயிரினங்கள் மீண்டும் தோன்ற வாய்ப்பே இல்லை.

ஆகவே பூமிக்குரிய நீர்வளமே, ஆவியாகி மீண்டும் மீண்டும் மழையாகி மீளுருவாக்கம் அடைகின்றது. மனிதன் உழைத்து உண்ணவும் இல்லாதவர்களுக்கு கொடுக்கவும் இயற்கைக்கு உறுதுணையாய் மற்றைய உயிரினங்களுக்கு உணவு கிடைக்கவும் இயற்கையை இறைவனாக மட்டுமல்ல தெய்வமாகவும் நினைந்து படையலிட்டு எமது மொழி உணர்வுகளை அர்ப்பணித்தும் முன்னோர்களின் பிதிர்களும் மகிழும் வண்ணம் வழிபாடுகள் இயற்றி படைப்பின் படிப்பினைகளை மதித்து வாழும் போதே இறைவனை மகிழ்வித்தவர் ஆகின்றோம்.

இயற்கையும் எங்கள் உள்ளத்தை மகிழ்விக்கும். வேண்டாத நோய்கள் எல்லாம் விரைவில் எம்மை விட்டும் மறையும்.

*சேமிப்பு இல்லாத குடும்பம் கூரை இல்லாத வீட்டிற்குச் சமம்.*

# இல்லற தர்மம்

— திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் —

இன்றைய சிந்தனைக்கு இந்து மதம் இல்லறத்தானுக்கு வகுத்துள்ள கடமைகள் பற்றி சிறிது சிந்திப்போம்.

நாம் இப்பூவுலகில் வளமாக வாழ் வாங்கு வாழ வேண்டுமாயின், எமக்குரிய கடமைகளை யாம் செவ்வனே ஆற்றியாக வேண்டும். வள்ளுவமும், தென்புலத்தார், தெய்வம் விருந்து, ஒக்கல், தான் எனப்படு வோருக்கு யாம் கடமைகள் செய்தாக வேண் டும் என்று நயமாகவும், பயமாகவும் வகுத்துத் தந்துள்ளது. இல்லறத்திலே வாழும்போது ஆற்றவேண்டிய கடமை முதலில் தென்புலத் தார்க்கு உரியன எனக் கூறப்பட்டுள்ளது. இந்த தென்புலத்தார் யார்? இவர்கள் தாம் இப்பூவுலகிலே வாழ்ந்து மறைந்து பிதிர்களாக இருக்கும் எமது முன்னோர்கள். இவர்களில் சிலர் மறுபிறவி எடுத்துமிருக்கலாம்.

இவர்களுக்கு புத்திரர் ஆற்றவேண் டிய கடமைகள் சிரார்த்தம் எனப்படும். சிரத்தையோடு செய்யப்படவேண்டியது சிரார்த் தம். இதனை மூன்று தலைமுறையினருக்கும் சேர்த்துச் செய்தலே முறையாம். எமது பெற் றோர், அவர்களின் பெற்றோர், அவர்களின் பெற்றோர் இவர்களின் பெயர்களைத் தெரிந்து வைத்து தர்ப்பணச் சடங்கின்போது சிரத்தை யோடு உச்சரித்தாக வேண்டும். இவர்கள் உலகை நீத்தபின், அவர்களிடம் நாம் கொண் டுள்ள நன்றி உணர்வை வெளிப்படுத்தலே சிரார்த்தம் எனும் செயல்முறை ஆகும். எமது முன்னோர்கள் தம் வம்சத்தில் வந்தவர்கள் தமக்குச் செய்யும் சிரார்த்தத்தை "கயை" எனும் இடத்திலே வந்து செய்யமாட்டார்களா என்று ஆவலோடு காத்திருப்பார்கள் என்றும் கூறப்படுகின்றது. "கயை" என்பது பாரதத்திலே உள்ள புனித தலமாகும்.

இதனோடு தொடர்புள்ள ஒரு வரலாற் றைக் கூறுகின்றேன். கேட்டுப் பாருங்கள்.

முன்னொரு காலத்தில், கயாசுரன் என்னும் ஓர் அரக்கன் கடும் தவம் ஆற்றி அதன் பயனால் உயரிய வரமொன்றை விஷ்ணு பகவானிடமிருந்து பெற்றான். அந்த வரமாவது தனது உடல், முனிவர், தேவர்கள், ரிஷிகள் யாராவது உடல்களிலும் பார்க்கப் புனிதம் அடைய வேண்டும். தன்னை வணங் கித் தன் உடலைத் தொட்டோர் சொர்க்கத்தை அடையும் பேற்றையும் பெற வேண்டும். விஷ்ணு பகவான் அவன் கேட்ட வரத்தைத் தந்தார்.

பூவுலக மக்கள் மிக சுலபமாக கயா சுரனை வணங்கி அவனது ஸ்பரிசம் மூலம் சொர்க்கத்தை அடையலாயினர். நரகத்தில் ஆள் நடமாட்டமே இல்லாமல் போக ஆரம்பித் தது. இதனை அவதானித்த யமதர்மராஜன் சிந்தித்தார். நரகலோக பயமே மக்களுக்கு இல்லாமற் போய்விட்டது. அவர்கள் தவறுகள் செய்ய அஞ்சமாட்டார்கள். இதனால், தர்மம் தவறலாம். இதற்கு ஆவன செய்தாக வேண் டும். தனது கருத்தை பகவானிடம் முறை யிட்டார். பகவானும் யமதர்மராஜனுடைய அச்சம் நியாயமானதுதான் எனப் புரிந்து கொண்டார்.

*நல்ல நண்பனைத் தேடிக்கொள்ளாதவன் தனக்குத் தானே பகைவன்.*

கயாசுரனை அழைத்து ஒரு யாகம் செய்வதற்கு உனது உடலைத் தானமாகத் தருவாயா? எனக் கேட்டார் பகவான். "நல்ல காரியத்துக்கு எனது உடல் பயன்படுமே ஆனால் அதைவிட மகிழ்ச்சி எனக்கு வேறு என்ன உண்டு?" என்று மகிழ்ச்சியோடு பதில் அளித்தான். கயாசுரன் "பட்"டென்று தரையில் வீழ்ந்து, வேள்விக்காக தன் உடலைத் தரையிலே கிடத்தினான். இந்த இடம்தான் கயை என இன்று அழைக்கப்படும் "சுதாதர" ஷேத்திர தலமாகும்.

விஷ்ணுவின் விருப்பப்படி பிரம்ம தேவன் வேள்வியை ஆரம்பித்தார். ஆனால், கயாசுரனின் தலை ஆட ஆரம்பித்து வேள்வியைக் குழப்பியது. யமதர்மராஜன் பெரிய தொரு பாறாங்கல்லை அவன் தலையில் வைத்து ஆட்டத்தை அடக்க முயல, அவனது உடல் தொடர்ந்து ஆட ஆரம்பித்தது. விஷ்ணு தன் கதாயுதத்தைப் பயன்படுத்தி அந்த உடலின் ஆட்டத்தை நிறுத்தி வைத்தார். அப்போது கயாசுரன் கூறினான். நானாக என் உடலைத் தந்தபோது நான் ஒரு வார்த்தை கூறியிருந்தால் ஆட்டம் உடனே நின்றிருக்கும். பகவானே! நீங்கள் கதாயுதத்தைப் பயன் படுத்தியிருக்கத் தேவையில்லை என்றான்.

அதற்கு பகவான் கூறியதாவது, "உயிர் ஒடுங்குவதற்கும் இறைவனது ஆக்ஞை வேண்டும் என்பதைக் காட்டவே இவ்வண்ணம் செய்தேன்" "உனக்கு மேலும் வரம் தர உள்ளேன் கேட்பாயாக" என்றார். கயாசுரன் பதில் தந்தான். "சூரிய, சந்திரர், நட்சத்திரங்கள், பூமி உள்ள காலம்வரை எல்லாத் தெய்வங்களும் இத்தலத்திலே என்னோடு உறைய வேண்டும். இச்சேத்திரம் "கயை" என்ற பெயருடன் விளங்க வேண்டும். இத்தலத்திலே பிண்டம் போட்டு, சிரார்த்தம் செய்பவர்களின் பிதிர்கள் யாவும் சொர்க்கத்தை அடைய வேண்டும்" பகவானும் அவ்வண்ணம் வரம் அருளினார்.

இன்றும் இத்தலத்தில் ஏராளமானோர் தம் முன்னோரின் மூன்று தலைமுறையினருக்கு சிரார்த்தம் செய்து வருகின்றனர். இங்கு உள்ள நதியின் பெயர் பல்குனி. அங்கு ஊற்று நீர் உண்டு. அதில் மூழ்கிப் பிண்டம் போடுவது வழமை.

என்ன! சிரார்த்தம் செய்வதே பெரிய சிரமங்களின் மத்தியிலே, இதற்கு வேறு "கயை"க்குப் போக முடியுமா? என்று நினைக்கின்றீர்களா?

பாரதத்துக்கு யாத்திரை செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது வாழ்வில் ஒரு முறை தன்னும் இந்த நல்ல காரியத்தைச் செய்து பாருங்களேன். எமது முன்னோர்களின் ஆசிகளும் எமக்குக் கிடைக்கும் அல்லவா? செய்வோமா?

நாம் யாரிடமும் பிரதிபலன் கருதி அன்பு செலுத்தக்கூடாது. பலனை எதிர்நோக்கி அன்பு காட்டுவது என்பது ஒரு வியாபாரத்தைப் போன்றது. அன்புக்கு வியாபாரத்துடன் எந்த சம்பந்தமும் கிடையாது. அன்பு என்பது கொடுப்பது வாங்குவது என்றெல்லாம் இணைத்துப் பார்ப்பதல்ல. எந்தப் பலனும் எதிர்பாராது சரணாகதியாவதுதான் அன்பு.

*உண்மையான பெரிய மனிதருக்கு முதல் அடையாளம் பணிவாக இருத்தல்.*

# புரட்டாதிச் சனிக்கிழமை விரதம்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

இந்துக்கள் மேற்கொள்ளுகின்ற விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள் ஆகியவை தெய்வங்கள், தேவர்கள், பிதுர்கள், கோள்கள், இயற்கைச் சக்திகள் ஆகியவற்றைக் குறித்து மேற்கொள்ளப்படுபவைகளாகவே உள்ளன. விரதங்கள், பொதுவாகப் பயன் கருதியே மேற்கொள்ளப்படுகின்றன.

ஆசாரசீலங்கள், விதிமுறைகள், விரத விழுமியங்கள் என்பவற்றை முறையாகப் பேணி; திரிகரண சுத்தியுடன் விரதங்களை அனுட்டித்து; தாம் எண்ணியவற்றை எண்ணிய வண்ணம் அடையப் பெற்றும் வாழ்க்கை வளங்களைப் பெற்றும் இன்பம் துய்க்கின்றனர்.

விரத மகிமைகள் பற்றிக் கூறுகின்ற புராணங்கள் தெய்வங்களுக்குரிய விரதங்கள், விரத காலங்கள், அநுட்டிக்கும் விதிமுறைகள், அனுட்டித்துப் பயன்பெற்றோரின் வரலாறுகள் மற்றும் குறித்த விரதத்தை அனுட்டிப்போர் பெறும் பயன்கள் ஆகியவைபற்றி விரிவாக விளக்கியுள்ளன. "நம்பினார் கெடுவதில்லை" இது நான்கு மறை தீர்ப்பு.

சமயமும் நம்பிக்கையின் பாற்பட்டது. ஆனால், நம்பிக்கை உறுதியானதாக அமைய வேண்டும். அதற்கு மனவலிமை, வைராக்கியம், மனத்திடம் என்பன முன் நிபந்தனையாகும். அவை நம்பிக்கையை நிதர்சனமாக்கும் திறன் வாய்ந்தவை. விரதங்கள், சைவசமய அநுட்டானங்கள் என்பன அறிவுபூர்வமானவை. வேண்டுதல்கள் அடையப்படும்வரை, நம்பிக்கைகள்தான். அவை அடையப்பட்ட பின்னர், உண்மைகள் ஆகிப் பயன் தருகின்றன. அது அநுபவபூர்வமாகப் பெறப்பட்ட உண்மை.

ஆடி மாதம் தொடக்கம், மார்கழி வரையிலான காலப்பகுதி, தட்சணாயனம் என்பர். சூரியன் தென் திசையில் சஞ்சரிக்கும் காலம். நோய்கள், வெள்ளப்பெருக்கு, புயற்காற்று மற்றும் இயற்கை அனர்த்தங்கள் நிறைந்திருக்கும் காலப்பகுதி. மக்களும் தொழில்களுக்குச் செல்லாமல் வீட்டில் முடங்கிக் கிடப்பர். உழைப்பில்லாமலால் வறுமை, பொருள் இழப்பு, நோய் என்பனவும் ஏற்படுகின்றன. அவற்றின் விளைவாக, அவர்களின் வாழ்க்கை துன்பம் துயர்கள் நிறைந்ததாகக் காணப்படும். ஆற்றாமையினால் தெய்வங்களை வழிபட்டும் விரதங்களை அனுட்டித்தும், பிரீதி செய்து வரும்போது பீடைகள், தோஷங்கள் நீங்கிவிடும் என மக்கள் நம்பினர். நம்பிக்கை வீண்போகவில்லை. நம்பிக்கைதான் வாழ்வு என்பதிலுள்ள உண்மையை அநுபவரீதியாகக் கண்டறிந்தனர். நம் முன்னோர் மரபு வழிவந்த நம்பிக்கை இன்றும் மக்களால் கைக்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆடிச் செவ்வாய், ஆடி வெள்ளி, ஆவணி ஞாயிறு, புரட்டாதிச் சனி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகைத் திங்கள் (சோமவாரம்), மார்கழி ஞாயிறு, பங்குனித் திங்கள் ஆகியன

*பெற்றோர்களின் வாழ்க்கை என்பது குழந்தைகளின் பாடப்புத்தகமாக அமைகிறது.*

விரத நாட்களாக விளங்கி வருகின்றன. இத்தினங்களில் விரதம் அனுட்டித்து, இறைவழிபாடு செய்து வர அவ்வப்போது ஏற்படும் நோய்கள், அனர்த்தங்கள் இயற்கை அழிவுகள், இழப்புக்கள், ஏழ்மை, துன்பந்துயர்கள் ஆகியவற்றின் தாக்கத்திலிருந்து மீட்சிபெற முடிகின்றது.

**சனிக்கிழமை விரதம்:**

இவ் விரதம், வாரந்தோறும் வருகின்ற சனிக்கிழமைகளில் மேற்கொள்ளப்படினும், கன்னி மாதம் எனப்படும் புரட்டாதி மாதத்தில் வருகின்ற சனிக்கிழமைகளில், விரதம் அனுட்டிப்பது சிறப்பு வாய்ந்ததாகும்.

நவக்கிரகங்களுள் ஒன்றான சனி பகவான், ஆயுள்காரகனாக விளங்குகிறார். மனிதர்களின் ஆயுளுக்குப் பொறுப்பானவர் என்ற வகையில், சனிபகவான் வணங்கப்படுகிறார். சனீஸ்வரனை, இவ்விரதத்தினாலும், வழிபாட்டினாலும், பிரீதி செய்து, சாந்தப்படுத்தி, நோய், அவமிருத்து, மூப்பு, பிணி, இறப்பு ஆகியவற்றால் மனிதர்களுக்கு ஏற்படும் துன்பங்கள், துயர்களையும் இழப்புகள், இடர்களையும் நீக்கிக்கொள்கின்றனர்.

"சனியைப் போன்று, கொடுப்பாருமில்லை; கெடுப்பாருமில்லை" என்ற கூற்று நம்மிடையே வழங்கி வருகிறது. சனிபகவான் தம்மை அணுகி, வழிபாடு செய்து வருபவர்களுக்கு நன்மைகளையும்; அவ்வாறு செய்யாதவர்களுக்குத் தீமைகளையும் தருபவன்.

திருவருட்பயன், ஒப்பற்ற இறைவனாக விளங்கும் சிவபெருமானின் இயல்புபற்றி,

*"நலமிலன் நண்ணார்க்கு, நண்ணினர்க்கு நல்லன்*
*சலமிலன் பேர் சங்கரன்"*

என்று கூறுகிறது. சிவபெருமான், தம்மை அடைந்தவர்க்கு நன்மையைக் கொடுப்பான்; அடையாதவருக்கு நன்மையைக் கொடுக்கமாட்டான். ஆயினும் யாவர்க்கும் நன்மை செய்வதற்காகவே உள்ளான் என்பதையும் நாம் மறத்தலாகாது. ஆதலால், சங்கரன் எனும் சிறப்புப் பெயரை உடையவன். இது இப் பாடல் தரும் பொருள்.

சனீஸ்வரனும் தம்மை அணுகி வழிபடுபவர்களுக்கு, நலங்களையும், நன்மைகளையும் அருள்பாலிக்கிறான். அணுகாதவர்க்குப் பிணியாய் உள்ளான். ஆனாலும், எல்லோருக்கும் நன்மை செய்வதற்காகவே உள்ளான், என்பதையும் கருத்தில் கொண்டு வழிபாடு செய்து வந்தால், இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற உயரிய நிலை எய்தப்பட்டுவிடும். நம்பு பவர்க்கு நன்மையே கிடைக்கும். நம்பிக்கை, நலம், பலம், வளம் ஆகிய மூன்றையும் அடைவதற்கு ஆதாரம் ஆகும்.

**சனீஸ்வர விரத வழிபாடு - முறைகள்:**

சனிக்கிழமை விரதம்; பொதுவாக நவக்கிரக தோஷங்களிலிருந்து நிவாரணம் பெறும் பொருட்டும்; சிறப்பாகச் சனீஸ்வரனுக்குப் பிரீதி செய்யும் முறையிலும் அநுட்டிக்கப்படுகிறது. இவ் விரதம் மிக நுணுக்கமாகவும், அகப்புறத்தூய்மை பேணியும், பயபக்தியுடனும் அனுட்டிக் கப்பட வேண்டும். வீடு, சமையல் அறை; என்பன நீரினால் கழுவப்பட்டு, மஞ்சள் நீர் அல் லது பசுவின் சாணம் கலந்த நீர் தெளிக்கப்பட்டோ அல்லது சாணத்தினால் சுத்தம் செய்யப் படவேண்டும். நீராடித் தம்மைத் தூய்மைப்படுத்தித், தோய்த்துலர்ந்த ஆடைகளையே அணிதல்

வேண்டும். எள் எண்ணெய் தலையில் வைத்து நீராடித் தம்மையும் தூய்மைப்படுத்திக் கொள் ளுதல் இன்றியமையாதது. விரத இயம நிய மங்கள் முறையாகப் பேணப்படுதல் இன்றி யமையாதது. வீட்டுக்கு விலக்காயிருக்கும் பெண்கள் மற்றும் ஆசௌசம் உள்ளவர்கள் சமையலில் பங்குபற்றக் கூடாது. சனிக்கிழமை விரதம் அனுட்டிப்பவர்கள் தூய்மைக்கு முக் கியத்துவம் அளித்தல் மிகவும் இன்றியமை யாததாகும்.

சனி காலையில் சிவன் கோயில் அல்லது விஷ்ணு கோயிலுக்குச் சென்று மூலவர், பரிவார மூர்த்திகள், நவக்கிரக நாய கர்கள் ஆகியோரை வழிபாடு செய்ய வேண் டும். நவக்கிரக நாயகர்கள் பிரதிட்டை செய்யப் பட்டுள்ள விநாயகர், அம்பாள், முருகன் ஆல யங்களுக்கும் சென்று வழிபாடு செய்யலாம்.

சூரிய மண்டலத்தின் மத்தியில் இருப் பவன் சூரியன். சர்வ உலகத்தையும் படைத்து, அங்கு வாழ்கின்ற உயிரினங்கள் மற்றும் அண்டசராசரங்கள் யாவற்றையும் ஆதித்த தேவன் எனப்படுகின்ற சூரியன் ஆட்சி செய் கின்றான் எனப் புராணங்கள் கூறுகின்றன. சூரியன் நவக்கிரகங்களின் அதிதேவதை ஆகும். சூரியனை முழுமுதற் கடவுள் ஆகக் கொள்ளும் சமயம், சௌரம் எனப்படுகிறது.

நவக்கிரகங்களுக்குக் கோயில்கள் அமைத்து பூசை வழிபாடுகள் செய்யப்படு கின்றன. நவக்கிரக ஸ்தோத்திரம், ஒன்பது கிரகங்களுக்குமான துதிப்பாடல்களைக் கொண்டது. திருஞானசம்பந்தர் அருளிச் செய்த கோளறுபதிகம், நவக்கிரகங்களைத் துதி செய்யும் தேவாரப் பாடல்கள் ஆகும். சனிக்கிழமை விரதம் அனுட்டிப்பவர்கள், இப் பாடல்களைப் பாராயணம் செய்வதால் நல்ல பலன்கள் கிடைக்கும். சனீஸ்வரனுக்குரிய மந்திரம் பின்வருமாறு:

*“நீலாஞ்ஜன ஸமா பாஸம்*
*ரவிபுத்ரம் யமாக்ரஜம்*
*சாயா மார்த் தாண்ட ஸம்பூதம்*
*நம் நமாமி சனைச் சரம்”*

சனீஸ்வர வழிபாடு; விரதம் என்பவற் றில், எள், எள்ளெண்ணை (நல்லெண்ணை), எள்ளுப் பொரி என்பன முக்கியத்துவம் பெறு கின்றன. காகம், சனிபகவானின் வாகனம் என்றவகையில், முக்கியத்துவம் பெறுகின் றது. விரதிகளும் தலையில் நல்லெண்ணை தேய்த்து சிரசு ஸ்நானம் செய்தல் முறை யாகும்.

திருக்கோயிலுக்குச் சென்று, சனீஸ் வரனுக்கு எள் சாதம் நிவேதித்தும், எள்ளுப் பொரி தூவியும், எள்ளுப் பொட்டலம் நல் லெண்ணை மண்சிட்டியில் விட்டு, எரித்துத் தீபம் ஏற்றியும் சனீஸ்வரனை வழிபாடு செய்ய வேண்டும். உடல்நலம், ஆயுள் விருத்தி என்ப வற்றைச் சனீஸ்வர வழிபாடு மூலம் அடையப் பெறலாம். நவக்கிரகங்களையும் பயபக்தியுடன் வழிபாடு செய்தல் வேண்டும். வழிபாட்டுக்குச் சிறந்த நாள் சனிக்கிழமை என்று சொல்லப் படுகிறது. புரட்டாதிச் சனிக்கிழமை அதிவிசேட நாள் ஆகும். அட்டமத்தில் சனி, சனி திசை உள்ளவர்கள், ஏழரைச் சனி பாதிப்பு உள்ள வர்கள் சனீஸ்வரனை வழிபட்டு, விரதம் அநுட்டித்து வந்தால் தாக்கம் தணிந்து, சுக வாழ்வு கிடைக்கப்பெறுவர்.

சனிக்கிழமை விரதம் அநுட்டிக்கும் விரதிகள்; காலையிலிருந்து உண்ணாமல் இருந்து, மதியம் வீட்டில் எள் எண்ணெய் விட்டு விளக்கு ஏற்றி; வாழை இலையில் அன்னம், பருப்பு, கறி வகைகள் படைத்து; அதன்மேல் நல்லெண்ணை விட்டு, சனீஸ் வரனை மனதில் தியானித்தபடி நைவேத்தியம் செய்ய வேண்டும். அதன்பின், படையலில் இருந்து எடுக்கப்பட்ட சாதத்தில் எள்ளெண்ணெய்

*நேரத்தைக் கண்ணினும் பொன்னினும் மேலாக மதி.*

இட்டு; காகத்தை அன்போடு அழைத்து உண்ணும்படி, மனத்தினால் வேண்டுதல் செய்ய வேண்டும். காகம் உண்ணும் வரை காத்திருந்து, உண்டபின்; தம் குடும்பம், சுற்றத்தினர், அதிதிகள் ஆகியோருடன் உணவுண்டு விரதத்தை நிறைவு செய்வர். இவ்வழக்கம் இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க விரத விழுமியம் ஆகும். அகப் புறத்தூய்மை பேணுதல் மற்றொரு விழுமியம் என்பது நோக்கற்பாலது.

புனிதம், சுத்தம் பேணிச் சமைக்கப்படாத உணவு ஆக இருப்பின், அதனைக் காகம் அன்றையதினம் உண்ணாது என்பது விரத ஐதீகம். அதனால் அகந்தூய்மை, புறந்தூய்மை பேணி, பயபக்தியுடன் சமையல் செய்து, நைவேத்தியம் செய்து, காகத்திற்கு அதனை வழங்கி, சனிக்கிழமை விரதம் அனுட்டிக்கும் பண்பு போற்றுதற்குரியது.

காகம், அதற்கு வைக்கப்படும் உணவை, உண்ண மறுத்தால், சனிபகவான் அதனை ஏற்கவில்லை என்பதை உணர்ந்தவராய், விரதிகள் வருந்துவர். அதனைத் தவிர்க்கும் பொருட்டு, சனிக்கிழமை விரதிகள் ஆசார சீலராய் தூய்மை நலம் பேணுவதில் கருத்துடையராய் இருப்பர். அதனால் பீடைகள் நீங்கும் நன்மைகள் பெருகும்.

## காக்கையின் நற்குணங்கள்:

*"காலை எழுந்திருத்தல் காணாமலே புணர்தல்*
*மாலை குளித்து மனைபுகுதல் - சாவ*
*உற்றாரோடுண்ணல் உறவாடல் இவ்வாறும்*
*கற்றாயோ காக்கைக் குணம்"*

## ஈஸ்வரன் விருது பெற்றவர்:

பரமேஸ்வரன், இலிங்கேஸ்வரன், சர்வேஸ்வரன் என்று போற்றப்படுபவர் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான். அப்பெருமானார் வேறு மூவருக்கு ஈஸ்வரன் என்னும் பெரும் விருதை வழங்கியுள்ளார். சண்டேஸ்வரர், சனீஸ்வரர், இராவணேஸ்வரர் ஆகிய மூவருமே, மகா ஈஸ்வரன் ஆக விளங்கும் இறைவனிடமிருந்து, அதியுயர் விருதைப் பெற்றவர்கள் என்ற பேற்றினைப் பெற்றவர்கள் ஆவர்.

## சனீஸ்வரன் பற்றிய அருள் தகவல்:

சனீஸ்வரன், நவகோள்களுள் ஒன்றாக விளங்குபவர்; அத்துடன் ஆயுள்காரகன் ஆகவும் உள்ளார். சூரியனுக்கும் சாயாவுக்கும் பிறந்த ஆண்மகன்; காலதேவனின் சகோதரன். மனிதர்கள் ஒவ்வொருவரும் செய்த, செய்கின்ற புண்ணிய பாவங்களுக்கேற்ப; செயலுக்கேற்ற விளைவுகளை, நடுவுநிலையில் நின்று வழங்குபவர். சனீஸ்வரனை மனம், வாக்கு, காயம் ஆகியவற்றினால் வழிபடுவதன்மூலம், கஷ்டங்கள், துன்பங்கள், துயர்களைத் தணித்துக்கொள்ள வாய்ப்புண்டு என்று சோதிட நூல்கள் கூறுகின்றன.

சூரியன் தனக்கொரு மகன் பிறந்துள்ளான் என்பதை அறிந்து, மகனைப் பார்ப்பதற்காகத் தேரேறி வந்தபோது; சனியின் பார்வை, தந்தையாகிய சூரியன்மீது பட்டது. உடனே சூரியனுக்குக் குஷ்டரோகம் பிடித்துக்கொண்டது. அடுத்துத் தேர்ப்பாகன்மீது, சனியின் பார்வைபட்டது. தேர்ப்பாகனின் கால் ஊனமுற்று முடமாகியது. இவற்றைக் கண்ணுற்ற சூரியன், தன்

மைந்தன் என்றும் பாராது, சனியைத் தூக்கி வெளியே வீசிவிட்டான். இவ்வாறு புராண வரலாற்றுக் குறிப்பு, இருக்கிறது.

ஆயுள்காரகன் ஆக விளங்கும் சனீஸ் வரன்; அவரால் நிர்ணயிக்கப்பட்ட மரண காலத்தை, எல்லாம் வல்ல இறைவனாகிய சிவபெருமானைத் தவிர வேறு எவராலும் மாற்றி யமைக்க முடியாது. இதற்கு மார்க்கண்டேயர் வரலாறு சான்றாகும்.

இந்தியாவில், தமிழ்நாட்டில் அமைந் துள்ள, திருநள்ளாறு என்னும் திருத்தலத்தில் சிவனையும் சனிபகவானையும் விரதம் இருந்து வழிபாடு செய்வதால் மிகுந்த பலன் உண் டாகும்; சனி தோஷம் நீங்கும் எனப் புராணங் கள் குறிப்பிடுகின்றன. இலங்கை நாட்டில் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், கீரி மலை நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், கொக் கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் மற்றும் தெற்கே அமைந்துள்ள தொண்டீஸ்வரம் ஆகிய பழமை வாய்ந்த சிவத்தலங்களில் சனீஸ் வரனை விரதமிருந்து வழிபட்டால் தோஷங்கள் நீங்கி, நலம் பெருகும்.

"சனி நீராடு" என்பது ஔவை வாக்கு. ஒவ்வொரு வாரமும் வருகின்ற சனிக்கிழமை களில், காலையில், தலையில் நல்லெண்ணை தேய்த்து அரப்பு அல்லது சீயாக்காய், எலு மிச்சம்பழம் என்பனவற்றை அவித்த நீரினால் தலையை அலசி, நன்றாக முழுக வேண்டும். இதனைச் சிரஸ்நானம் என்பர். வாரமொரு முறை, சிறப்பாக சனிக்கிழமைகளில் சிரஸ் நானம் ஒழுங்காகச் செய்து வந்தால், உடல் நலம் நன்கு அமையும். உடல் வெப்பம் தணிக்கப்படுகிறது. நோய் எதிர்ப்புச் சக்தி கிடைக்கப்பெறுகிறது. அதனால் சுக வாழ்வு உறுதியாகிறது. சுக வாழ்வுக்கு உடல்நலம், மன நலம், வாழும் சுற்றாடல் நலம் ஆகிய மூன்றும் இணைந்து இருத்தல் இன்றியமை யாததாகும். இவற்றுள் ஒன்று குறையினும் நோய் பீடிக்கும்.

சைவ சமய நெறிமுறைகள், விரத விழுமியங்கள், ஆசார சீலங்கள் என்பவற்றில் ஆன்மீகமும் அறிவியலும் இணைகின்றன. ஆன்மீகமும் அறிவியலும் இரு சமாந்தரக் கோடுகள் போன்று, ஒன்றை மற்றொன்று சந்திக்கவோ இணையவோ முடியாதனவல்ல. அவை உண்மையில் சந்திக்கவும் இணைய வும் கூடியன. அவ்வாறு அவை சந்தித்து இணையவும் வேண்டும். அப்பொழுதுதான், மனிதரின் உடல்நலம், மனநலம், உயிர்நலம் மூன்றும் நன்கு பேணப்பட்டு வாழ்வு நல மேம்பாடு எய்தப்படும்.

சைவ சமய நெறிமுறைகள் ஆத்மீக வாழ்வுக்கு மட்டுமன்றி, ஆரோக்கிய வாழ்வுக் கும் எம்மை இட்டுச் செல்வதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். புரட்டாதிச் சனிக்கிழமை விரதத்துடன், அகப் புறச் சுத்தம் பேணல், சுற்றாடல் துப்புரவு செய்தல் என்பவற்றிற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதி முக்கியத்துவத் தையும் நாம் கருத்தில் கொள்ளுதல் இன்றி யமையாததாகும்.

"சுத்தம் சோறிடும் எச்சில் இரக்க வைக்கும்" என்பது ஆன்றோரின் பொருள் பொதிந்த கூற்று. புரட்டாதிச் சனிக்கிழமை விரதத்துடன்; வாழ்விடச் சுத்தம் பேணல், சுற்றாடல் துப்புரவு, தூய்மையாயிருத்தல், என்பவற்றிற்கு எத்துணை முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை நாம் சிந்தித்துச் தெளிய வேண்டும்.

விஞ்ஞான அறிவு, பகுத்தறிவு, படிப் பறிவு என்பன முற்றிய தற்காலத்தில்; சமய ஆசாரங்களை ஏளனம் செய்கின்றனர்; சுத்தம், சுகாதார விதிகளை உதாசீனம் செய்கின்றனர். இரண்டும் கெட்ட நிலை இன்று உருவாகி உலக மக்களை ஆட்டிப்படைக்கின்றது. அதனால்

இடர்கள் பல, புதுப்புது நோய்கள் வடிவில், மனிதர்களை ஆட்டிப்படைக்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் தற்பொழுது உலகில் வேகமாகப் பரவிவருகின்ற கொரோனா நோய் ஆகும்.

தனித்திரு, விழித்திரு, பசித்திரு ஆகிய விரத விழுமியங்களில், அறிவியலும் ஆன்மீக மும் இணைந்திருப்பதை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடித்து நல்வாழ்வு வாழ்வோமாக.

## மன்னுபவம் தீர்க்கும் மருந்து உன்னுமுளது

கொரோனா என்ற கொடிய நோய் பெரும் பாதிப்புக்களை உலகிலே பல நாடுகளில் ஏற்படுத்தியபோதும், இலங்கையிலே அது தனது வெறியாட்டத்தைக் காட்டவோ, நிலைகொள்ளவோ முடியாமல் போய்விட்டது. அது எப்படி என்று கேட்கிறீர்களா? வேறொன்றுமில்லை. இலங்கைவாழ் மக்கள் இறைவனைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி சிக்கெனப் பிடித்ததனாலேயாகும்.

பல மதங்கள் கொண்ட நம் நாட்டிலே பாமர மக்களும், கிராமிய மக்களும் தத்தம் இறைவனோடு ஒன்றியிருந்து நினைப்பதிலும், கொண்டாடுவதிலும் மிகவும் அக்கறையுள்ளவர்களாவார்கள்.

அரசியலானது ஆன்மீகத்தைக் கொள்ளை கொள்வதனாலேயே நாட்டிலே பல பிரச்சினைகளும் முரண்பாடுகளும் தோன்றிவிடுகின்றன. பௌத்தமதம், இந்துமதம், இஸ்லாமிய மதம், கிறீஸ்தவ மதம் சார்ந்த கிராமவாசிகளிடத்தே அதீத பயபக்தியையும், பண்பாடுகளையும், விழுமியங்களையும், ஒழுக்கசீலங்களையும், விரத நோன்பு தவ மாண்பினையும் இறைவன் குடி கொள்ளுமாறு காண்கின்றோம். இந்நிலையில் நோய்கள் இறைவன் குடிகொள்ளுகின்ற இடத்தில் ஒருபோதும் அணுகுவதில்லை.

"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்"

சங்கரன் என்பதன் பொருள் "சுகத்தைச் செய்பவன்" என்பது ஆகும். யாருக்கு என்றால் இறைவனாகிய தன்னை உளமார வாயார வாழ்த்தியும் போற்றியும் பயபக்தியோடு வழிபாடாற்றுவோருக்கேயாம்!

அதன்பேறாக இலங்கைவாழ் மக்களில் பெரும்பாலான மக்கள் தத்தம் இறைவனோடு நெருங்கியிருப்பதனால் மருந்தாகிய இறைவன் அவரவர் உள்ளத்திலும் உடம்பிலும் மருந்தாக இருக்கின்றான். ஆதலால் வெளிநாட்டவர்களைத் போலக் கொரோனா இலங்கையை மோசமாகத் தாக்கவில்லை. உலகில் இது ஓர் அதிசயமே.

"உன்னுமுளது ஐயமிலது உணர்வாய் ஓவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து"

அதாவது இப்பிறவியால் உண்டாகும் அத்தனை நோய்களையும் தீர்க்கும் மருந்து உன்னிடத்தில் அதாவது எம்மிடத்தில் உள்ளது. அதுபற்றி நீ சந்தேகப்படவேண்டாம். ஆகவே ஓவாது உணர்வாயாக. அதை இடைவிடாது சிந்திப்பாயாக. மருந்து எனப்படுவது எல்லாம் வல்ல இறைவனேயாகும்.

இதன் பிரகாரம் இலங்கையில் கொரோனா எட்டவே நிற்கிறது. இம்முறை நல்லூரில் 50,000 பக்தர்கள் வழிபாடாற்றி முருகனைச் சிக்கெனப் பிடித்துள்ளார்கள். அங்கு கொரோனாவுக்கு இடமே இல்லை.

பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆசிரியர்கள், பிரதேச செயலர்கள், ஆலயப் பொறுப்பாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், மதகுருமார்கள், பக்தகோடிகள், மாணவர்கள், விவசாயிகள், பாமரர்கள் எல்லாவற்றிற்கும் மேலாக மருத்துவ குழாத்தினர், தாதிமார், உதவியாளர்கள், பணியாளர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் எனப் பலதரப்பட்ட சமூக ஆர்வலர்களால் கொரோனா இலங்கையில் பரவாமல் தடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலாக முப்படையினரின் அதீத செயற்பாடுகளும் கொரோனாவிலிருந்து நாட்டைக் காப்பாற்றியுள்ளது. இனம், மதம், மொழி, நிறம், பால் யாவற்றையும் கடந்து இலங்கையை ஒரு புண்ணிய பூமியாக்கப் பாடுபடுவோமாக!

*-தில்லை சிதம்பரவேணி (வள்ளி)-*

*வறுமையில் நிறைவு காண்பவனே மிகப்பெரிய பணக்காரன்.*

# சைவத்தமிழ் போற்றும் சான்றோர் வரிசையில்

# முத்துக்குமார கவிராயர் (1780 - 1852)

– **திரு மூ. சிவலிங்கம்** அவர்கள் –

ஈழத்தமிழகத்தில் யாழ் மாவட்டம் பல சீர்மிகு சிறப்புகளாலும் சைவமரபுடன் செந்தமிழும் அணிசெய்யும் தொன்மையாலும் எழில் மிகு புனிதம் போற்றும் பல திருவூர்களால் அன்றுமுதல் போற்றப்படுகிறது. யாழ் மாவட்டத்தின் மையமாக அமைந்த திருவூர் சுன்னாகம் என்னும் பேரூராகும். இச்சூழலின் பெரு முயற்சியை இவ்வூர் தினச்சந்தை அணி செய்கிறது.

சுன்னாகத்தில் இயற்கை அன்னையின் பேருளால் செம்மண்ணால் நிலவளம் உயர்ந்தது. வற்றாத நன்னீரூற்றால் நீர்வளம் பெருகியது. அயராது வாழ்வாதாரம் நாடித் தேடிய விவசாயப் பணியால் உணவுப் பொருள் வளம் வளர்ந்தது. இவ்வூர்மக்களின் விடாமுயற்சியால் எதுவித குறைவுமின்றி வாழும்நெறி வளர்ந்தது. தமது வாழ்வில் நிறைவாக வாழ்ந்ததால் மன நிறைவுக்காக சைவத்தை நன்கு பேணி வந்தனர். இதன் பேறாகச் செந்தமிழும் மேம்பட்டது.

அந்நாளிலிருந்தே பெருமைசார்ந்த குடும்பங்களிற்பலர் செந்தமிழையும் சைவத்தையும் அனுசரித்த பயனாகத் தகைமை சார்ந்த கல்விமான்கள் தோன்றினர். இக்கல்வி மற்றும் ஊரின் சிறப்பறிந்து இந்தியத் தமிழகத்திலிருந்து வந்தவரான வரதபண்டிதர் என்பவர் சுன்னாகத்தின் சிறப்பை அணி செய்தார். கல்விச் சிறப்பால் சைவமும் தமிழும் போற்றும் பல நூல்களை வெளியிட்டார். இவையாவும் இத்திருவூரின் அழியாத நன்கொடையாகப் போற்றப்படுகிறது.

இவ்வூர் மக்கள் தமது விவசாயப் பணிக்கு மேலான நேரத்தை விரயஞ் செய்யாது சமயப் பணியிலும் கல்விப் பணியிலும் இணைந்து நூல்களைத் தேடிக்கற்கவும், தாம் கற்றதை ஏனையோருக்கும் ஊட்டி அருஞ் சேவையாற்றினர். இம்மக்கள் தமது விவசாயப் பணி மூலம் உடல் வளத்தையும், சமயநெறி மற்றும் கல்வியறிவால் உள வளத்தையும் பெருக்கினர். இதன் பேறாக இத்திருவூரில் கசடறக் கற்ற பல கல்விமான்களும் ஆன்மிக நெறியாளர்களும் காலத்துக்குக் காலம் தோன்றினர். இத்திருவூரும் பிரகாசித்தது.

சுன்னாகத்தின் சிறப்பை உலகறியச் செய்வதன் பேரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த புலவர் வரிசை தொடர்ந்தது. நாகநாத பிள்ளை இவரின் மகன் சந்திரசேகரம்பிள்ளை இவரின் மகன் சுப்பிரமணியம்பிள்ளை இவரின் மகன் அம்பலவாணர்பிள்ளை சிறப்புப் பெற்றனர். இவ்வாறு வாழையடி வாழையாக வந்த நாலாவது புலவரான அம்பலவாணர்பிள்ளையின் மூத்த மகன் முத்துக்குமார். அடுத்தவர் சின்னத்தம்பிப்பிள்ளை இருவரும் புலமை பெற்றனர். (இரண்டாவது மகன் சின்னத்தம்பிப் பிள்ளையின் மகன் அம்பலவாணர் பிள்ளை இவரின் மகனே குமாரசுவாமிப் புலவர். இவரைப் பற்றிய தகவல்களைப் பின்னர் அறிவோம்.)

பாரம்பரிய புலவர் மரபில் வழிவந்த (நாலாவது) அம்பலவாணர் பிள்ளையின் மூத்தமகன் முத்துக்குமார் 1780இல் அவதரித்தார். இவர் கருவிலேயே உருவான கவிதை மரபினால் இளமையிலேயே கவிபாடுவதில் சிறப்படைந்தார். இதனால் இவர் முத்துக்குமார கவிராயரென அழைக்கப்பெற்றார். அக்காலப் புலவர்கள் மத்தியில் இருபாலை சேனாதிராய முதலியாரும் முத்துக்குமார கவிராயரும் மட்டுமே கவிராயர் என்னும் சிறப்புடையவர்கள் என்பதை பிற்காலத்தில் தமிழறிந்த பேராசான் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

**மாணவர்களால் பெருமையடைந்தவர்**

சுன்னாகத்தின் பெருமையை நிலைநாட்ட அவதரித்த முத்துக்குமார கவிராயர் தமது கல்விச் சிறப்பினால் பல மாணவர்களை வசீகரித்தார். இதனால் கவிராயரைப் பல மாணவர்கள் நாடினர். இவ்வாறு நாடி வந்தோரில் சிறுப்பிட்டியைச் சேர்ந்த வைத்திலிங்கம் என்பவர் ஏழாலையில் இல்லறத்தில் இணைந்து வசித்தவர். தமது மகன் தாமோதரம்பிள்ளை சிறப்பான தமிழை நன்கு கற்றறியும் வண்ணம் கவிராயரிடம் ஒப்படைத்தார். தாமோதரம்பிள்ளையின் மதிநுட்பமும் கவிராயரின் போதனையும் இவரைப் பன்னிரண்டு வயதில் சகல துறைகளிலும் பாண்டித்தியம்பெற வைத்தது.

அதியுயர் கல்விமானான குருவிடம் நற்கல்விகற்று இளமையிலேயே பாண்டித்தியம் பெற்றதால் (சிறுப்பிட்டி) சி.வை. தாமோதரம்பிள்ளை பிற்காலத்தில் நன்கு சிறப்படைந்தார். தம்மை உயர்த்திய குருவிடம் பெருமதிப்பு வைத்திருந்தார். தாம் எழுதும் நூல்களில் கவிராயரை முன்னிறுத்தி அவர்மீது பாடல்கள் பாடியே தமது நூலைத் தொடங்குவார். இவ்வாறு தாம் பாடிய இலக்கண விளக்க நூலின் பதிப்பில் பாடிய பாடலை அறிவோம்.

*திங்கள் தங்கிய செஞ்சடைமுடியினன் திருத்தாள்*
*பங்க யங்கயி லாயநா தனைமுனிப் பழிச்சிச்*
*சங்க மங்களத் தமிழ்முத்துக்குமாரன் தன் மலர்ப்பா*
*தங்கள் வங்கமாத் தமிழ்க்கடல் இடைபடிகுவனே*

மேலும் தாமோதரனார் குருபக்தியுடன் குறிப்பிடுகையில் தமிழ் கடலிலும் பெரியது. இதனைக் கடந்து கரைசேர்வதில் தமது குருவின் பாதமாகிய ஓடம் உதவியதென்றும் மலர்ப்பாதம் என்னும் குருபாதம் துணை செய்தது என்றும் இந்துநாகரிகத்தின் பண்டைய பண்பினால் முத்துக்கவிராயரைத் தமது சிந்தையில் வைத்துப் புகழ்ந்தார்.

**கவிராயரின் இறை வணக்கங்கள்**

கவிராயர் இயல்பாகவே சைவசமய ஊற்றினால் வாழ்ந்தே செந்தமிழையும் ஆதரித்தவர். இவர் செந்தமிழ்க் கடலில் மூழ்கிப் பல சிறப்புக்களையும் கவிநயங்களையும் தேடி அனுபவித்தாலும் தமது சமயநெறியையும் சிக்கெனப் பற்றும் நியதி கொண்டவர். இதனால் தமது திருவூரிலுள்ள சந்திரசேகரப் பிள்ளையார் மயிலணி நரசிங்கமூர்த்தி, சுன்னாகம் ஐயனார் போன்ற திருத்தலங்களுக்குச் சென்று வழிபட்டவர். இத்திருத்தலங்களில் உள்ளன்போடு துதித்து இறைவன்மீது வணக்கமாகவும் வேண்டுதலாகவும் கவிதையால் அர்ச்சித்தவர். இவரின் பாடல்கள் பலவாறு யாவருக்கும் வழிகாட்டவும் தவறவில்லை.

*திருப்பிக் கொடுக்கப்படாத கடன்கள் மன்னிக்கப்படாத பாவங்கள்.*

இவர் தமதூர்த் திருத்தலங்களுக்கும் மேலாக சிதம்பரநடராசர் மாவைக்கந்தப் பெருமான் நல்லைக்குமரப் பெருமான் போன்ற தெய்வங்கள் மீதும் பல பாடல்கள் மூலம் வழிபடும் நியதியையும் கைக்கொண்டார்.

சிவநெறிப்படி தமது கிராமத்திலுள்ள சந்திரசேகரப்பிள்ளையார் மீது இடையறாத பக்தி பூண்டு தனிப்பாடல்களால் வணங்கியபோது "ஒரு கோட்டானை நாளும் வணங்குவேனே" என்றுபாடும் நியதி பூண்டவர். மேலும் விநாயகரின் பெருமைகள் பற்றியும் பாடினார். தம்பி முருகப் பெருமானுக்கு வள்ளியைத் திருமணஞ் செய்ததை மேலும் முருகனை வியந்து வெள்ளை விடையேறும் பெருமானின் மைந்தன் என்றும் புகழ்ந்தார். இப்பாடலையும் நோக்குவோம்.

*வாட்டானை யன்னமை தீட்டா விழிமிளிர் மான்மகளைத்*
*தாட்டானை யானுக்கு வேட்டானை யன்பர்தஞ் சஞ்சலங்கள்*
*மீட்டானை யென்கவி கேட்டானைச் சுன்னையின் மேவுநரை*
*மாட்டா னருளொரு கோட்டானை நாளும் வணங்குவனே.*

கவிராயரின் காலத்தில் ஆங்கிலேயர் அரசபணிக்காக வலுக்கட்டாயமாகக் குடிமக்களை ஏவினர். இதனால் குடிமக்கள் பெரிதும் துன்பப்பட்டனர். இதனைக் கருத்திற் கொண்ட கவிராயர் தமது குலதெய்வமான விநாயகப்பெருமானிடம் தமது தனிப்பாடல் மூலம் முறையிட்டார்.

### சிதம்பர நடராசர்

தமிழகமும் யாழ்ப்பாணமும் தூரத்தால் குறைவானது. இடையில் கடல் குறுக்கிட்டாலும் தில்லை நடராசப் பெருமானின் சிதம்பர தரிசனத்தை இடையறாது கண்டு வந்த எம்மவர் எம்பெருமானுக்குக் காணிக்கை செலுத்தியும் ஆண்டு தோறும் பயபக்தியுடன் சென்று வழிபட்டும் வந்தனர். மேலும் தில்லை நடராசப் பெருமானின் சிதம்பர ஆலயத்துக்கு அன்றிலிருந்தே தமது நிலபுலன்களை அன்பளிப்புச் செய்துமிருந்தனர். மேலும் பல்வேறு திருப்பணிகளையுஞ் செய்தனர். ஆனால் கவிராயரோ தமது பக்தி மேலீட்டால் நடராசப் பெருமான் மீது மூன்று ஆசிரிய விருத்தங்களைப் பாடி மகிழ்ந்தார்.

### மாவிட்டபுரம் கந்தப்பெருமான்

மாவிட்டபுரம் கந்தசுவாமியாருக்கு யாழ் மாவட்டத்தின் வடபால் வாழ்ந்த பக்தர்கள் அபிஷேகங்கள், விழாக்கள், காவடியாட்டம், இசைபாடுதல் போன்றவற்றில் ஈடுபடுவதுடன் பெருவிழாக்காலங்களில் விரதமிருந்தும் வழிபட்டு இன்புறுவர். இவ்வாறு நடைபெற்ற பெருவிழாவொன்றிற் கலந்து கொண்டு வழிபடச்சென்ற கவிராயரை அவரின் அன்பர்கள் சிலர் வேண்டியதன் பேரில் கவிராயர் பாடிய அருஞ்சுவையுள்ள பாடலையும் நோக்குவோம். இப்பாடலின் முதலடியைச் சேனாதிராய முதலியார் பாடினார்.

கோவிற் கடவைக் குருபரனா ருற்சவத்தைச்
சேவித்து நிற்பார் தெருத்தோறும் - காவிச்செல்
காவடியைக் கண்டிருப்பார் காண்பரோ கூற்றுவனார்
தாவடி ஏழுஞ் சுமையைத் தான்.

*ஒருவன் மற்றவர்களோடு கொஞ்சம் பேசவேண்டும், ஆனால் தன்னோடு அதிகம் பேசவேண்டும்.*

மேலும் ஆலயத்தின் சிறப்புகள், பெருவிழாக்கால விசேட ஊர்திகள் வலம் வரும் விழாச்சிறப்புக்கள் யாவற்றையும் பாடியுள்ளார். முன்னொரு காலத்தில் வேதாரணியத்தில் ஆலயத்திருக்கதவு வேதங்களால் மூடப்பட்டிருந்தபோது அவ்வாலயதரிசனத்துக்காகச் சென்ற அப்பருஞ் சம்பந்தரும் கதவு திறக்கவும் மூடவும் பாடி யாவரும் வழிபட வைத்தனர். அதேபோல இவ்விழாக்களின் சிறப்பை யாவரும் நன்கு விளங்கவும் மேன்மை கொள் சைவநீதி துலங்கவும் மாவிட்டபுரத்தில் இரு கவிராயர்களும் ஒன்று கூடினர். பொதுமக்களின் வேண்டுதலையடுத்து முதலடியைப்பாட ஏனைய வரிகளைக் கவிராயரே பாடி நிறைவு செய்தார். இதனை யாவரும் மெச்சினர். மேலும் கவிராயர் மாவைக்கந்தனின் பல அற்புதங்களையும் பாடியுள்ளார்.

**நல்லூர் முருகன் மீது பாடியவை**

நல்லைக்குமரனின் பெருவிழாக்காலத்தில் ஒரு கார்த்திகைத் திருவிழாவின்போது சேனாதிராய முதலியார் முதலிற் பாடி முடித்தார். தொடர்ந்து கவிராயர் கட்டளைக் கலித்துறைப் பாடலும் இரட்டை யாசிரிய விருத்தமும் பாடித் துதித்தார்.

**மயிலணி நரசிங்கமூர்த்தி**

சுன்னாகம் மயிலணி நரசிங்கமூர்த்தியிடம் தமக்கு நல்வாழ்வு வேண்டிச் சில பாடல்களைப் பாடி இன்புற்றார். இதனால் சிறப்பான வாழ்க்கையை அனுபவித்தார். கவிராயர் தமது சமய பக்தி காரணமாக சுன்னாகத்தில் முற்காலத்தில் அமைந்த ஐயப்பன் சுவாமிகளின் திருத்தலப் பெருமைகளனைத்தையும் ஒன்றாக்கி நூற்றைம்பது வருடங்களுக்கு முன்பே ஆலயத்துக்கான ஊஞ்சற் பாடலை யாத்துள்ளார். இப்பாடலில் ஐயப்பனின் அருட்பொலிவும் அற்புதங்களும் அடியார்கள்மீது காண்பிக்கும் கருணையும் அடியார்களின் வேண்டுதலை ஏற்று வஞ்சனை, நோய், வறுமை, பிறவித்துன்பம் யாவற்றையும் நீக்கி நல்வாழ்வு நல்கும் எம்பெருமானின் அருட்பொலிவை வியந்து பாடியுள்ளார். மேலும் இவ்வாலயத்தின்மீது பல தோத்திரப் பாடல் களையும் பாடியுள்ளார். யாவும் சமய பக்தியும் செந்தமிழ்ச்சுவையும் பொருட்செறிவும் மிகுந்தேயுள்ளன.

**தனிப்பாடல்கள்**

கவிராயர் தமது திறமையால் நூல்களை எழுதிநேரத்தைப் போக்காமல் பல தனிப் பாடல்களைப் பாடினார். அன்று கவிராயர் பாடியபாடலில் மல்லாகம், மாதகல், சுன்னாகம், ஈவினை, துன்னாலை, சில்லாலை, கொடிகாமம் ஆகிய ஊர்களின் பெயர்களைத் தமது பாடலில் சேர்த்து மறைந்திருந்த பொருள்களை உணரவைத்தார்.

மல்லாக மாதகலான் மருகன் சுன்னாகத்தான்
மகன்பா வாணர்
சொல்லால் சீர் ஈவினையான் துன்னாலை யானத்தான்
சுரும்ப ரோதிச்

*மனம்தான் ஒருவனை நரகத்திற்கோ சொர்க்கத்திற்கோ கொண்டு செல்கிறது.*

*சில்லாலை யிருள்வென்ற குறக்கொடிகா மத்தானைச்*
*சிகண்டி மாவூர்*
*வல்லானை மாவிட்டபுரநகரத் திடைப்பவனி*
*வரக்கண்டேனே.*

இங்கே முருகன் எழுந்தருளியுள்ளான். அவர் மல்ஆகம்மாது அகலான் மருகன் எனவே வலிய மார்பில் திருமகள் அமர்ந் துள்ள திருமாலின் மருகன் சுன்னாகத்தான் என்பவர் வெள்ளியங்கரியின் சிவன் சீர் ஈவினையான் என்றால் செல்வத்தைக் கொடுக் கும் செயலுடையவன் துன்னாலையானைத் தான் என்பது மன்மதனுக்கு அத்தான். சில் லால் ஐ இருள்வென்ற என்பது தகட்டணியால் வியக்கப்படும் இருளையும் வென்ற என்ப தாகும். கொடிகாமத்தான் என்பது குறவர் மட மகளாகிய வள்ளியம்மையார்மீது அளவு கடந்த அன்புடையவன் என்பதாகும். அக் காலத்துக் கிறிஸ்தவ மதகுருவானவர்கள் சைவசமயத்தைக் கண்டனஞ் செய்து தம்மைப் பெருமைப்படுத்தினர். அச்சமயம் கவிராயர் கிறிஸ்தவர்களின் மத ஒழுக்கங்களினால் தெரியப்படும் தவறுகளை வெளிப்படுத்தி "ஞானப் பெண்ணே!" என விழித்து ஞானக் கும்மி என்னும் பாடலைப் பாடினார். மேலும் யேசு மத பரிகாசம் ஆகியவற்றைப் பாடினார்.

சிவ வழிபாடாக நடராசர் பதிகம், ஐயனார் ஊஞ்சல் போன்ற பல பாடல்களை யும் பாடினார். கவிராயர் முத்தகச் செய்யுள் பாடுவதிலும் வல்லவர். செந்தமிழின்பஞ் சேர்க் கும் கப்பற்பாட்டையும் பாடினார். பிற்காலத்தில் கவிராயர் பாடிய முத்தான பாடல்கள் சிதைந்து விடாமல் அவரின் பிற் சந்ததியினர் தேடிவைத்தனர். கவிராயரின் மூன்றாவது சந்ததியினரான குமாரசுவாமிப் புலவர் யாவற் றையும் திரட்டி "முத்தகப் பஞ்ச விஞ்சதி" என்னும் நூலாக 1907 இல் வெளியிட்டார். கவிராயர் மறைந்த நூற்றாண்டு விழாவில் குமாரசுவாமிப் புலவரின் மகன் முத்துக்குமார சுவாமி கவிராயரின் நூல்களைச் சேர்த்து "பிரபந்தத்திரட்டு" என்னும் தலைப்பில் 1952 இல் வெளியிட்டார். இந்தநூலில் கவிராயரின் பாடல் நயம், செந்தமிழின் ஊற்றான பாடல் களின் சிறப்பு யாவும் யாவருக்கும் பயன்தர வல்லதாகும். மேலும் இத்திரட்டு நூலில் கவிராயரின் பாடலின் மடக்கலங்காரம் நாமாந் தரிகை, சங்கியாதை, வியுற்கிராந்தை முதலிய அரிய அணிகள் பொதிந்துள்ளமை சிறப்பின் அருமருந்தாகவே அமைந்துள்ளது.

கவிராயரின் பாடற்சுவையறிந்த பொன்னார் நாட்டில் கவிச்சுவை ததும்பப் பாடிய பாவாணர் வரிசையிற் சிறக்கத் தமிழ் வளர்த்த செம்மல்கள் வரிசையில் முத்துக் குமார கவிராசசேகரமும் ஒருவராவார். "முத்துக் குமார கவிராயன் பாடலென்முதருஞ் செல்வத் திற்கு வாய்த்த பொன்மண்டலமீழநன் மண் டலமே" என ஈழமண்டலச் சதகம் போற்றும் பெருமை கவிராயரின் சிறப்பாகும்.

---

**இந்த உலகில் இன்ப துன்பங்களுக்கு உட்படாதவன் இறைவன் மட்டுமே. இறைவனைச் சார்ந்தவர்களுக்கும் இன்ப துன்பங்களுக்கு உட்படாதவர்களாக வாழ முடியும்; வாழ்கிறார்கள். பக்தர்களுக்கு சோதனைகளும் வேதனைகளும் உண்டு. ஆனால் அவற்றுக்கிடையில் கடவுளின் கிருபையைக் காணும் வாய்ப்பும் அவர்களுக்கு நிச்சயமாக இருக்கும். நம் மனதில் எந்த மாசும் இல்லாமல் இருந்தால் வாழ்வில் எந்தத் துன்பம் வந்தாலும் தெய்வம் ஓடோடி வந்து நம்மைக் காப்பாற்றும்.**

*உழைப்புதான் ஒரு மனிதனை மற்றொரு மனிதனைவிட முந்தச் செய்கிறது.*

# ஆழிமிசைக் கல்மிதப்பில் அமர்ந்த பிரான்

*– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –*

சண்டேஸ்வர நாயனார் புராண வரலாற்று முடிவிலே சேக்கிழார் சுவாமிகள் "திருத்தொண்டத்தொகை பாடித் தந்துள்ள சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் துதிக்கின்றார். ஏனெனில் அதுவே திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரியபுராணம் பாடுவதற்கு அத்திபாரமாக அமைந்தது.

பெரிய பாறாங்கல்லுடன் சேர்த்துக் கட்டிக் கடலிலே தள்ளப்பட்ட நாவுக்கரசர் பற்றிப் பெரியபுராணம் பேசுகிறது.

திரு நின்ற சருக்கத்திலே "திருநின்ற செம்மையே செம்மையாய்க் கொண்ட திருநாவுக் கரையன் தன் அடியார்க்கும் அடியேன்" என்கிறார் சுந்தரர். நாவரசருடன் இச்சருக்கத்தில் வேறு ஏழு அடியவர்கள் பற்றிப் பேசப்படுகிறது.

"ஆழியில் கல் மிதப்பில் அமர்ந்த பிரான்" பற்றிய புராணத்தில் சேக்கிழாரடிகள்.

*"திருநாவுக்கரசுவளர் திருத்தொண்டின் நெறி வாழ*
*வரு ஞானத்தவமுனிவர் வாகீசர் வாய்மை திகழ்*
*பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்*
*ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணாமை உணராதேன்"*

என்கின்றார்.

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரில் சைவ வேளாண்குலம் வாழ உழவுத் தொழில் புரியும் செந்தமிழ்ச் செல்வர் வாழ்வாங்கு வாழ்ந்து வந்தனர். இவர்களின் தலை சிறந்த பெருஞ் செல்வராய சிவநெறியாளன் புகழனார், அவ்வூரில் அதே குலம் கோத்திரத்துதித்த சிவநெறியாளராய மாதினியார் எனும் மங்கை நல்லாளை வதுவை பூண்டு திலகவதியெனும் பெண் மகவையும் திருநாவுக்கரசு என்னும் புத்திரனையும் பெற்றனர். நாவரசரின் பிள்ளைத் திருநாமம் மருள்நீக்கியார் என்பதாகும். இதன் பொருள் மயக்கத்தை நீக்குபவர் என்பதாகும். அதாவது மனதுள் மறைந்து கிடக்கும் மும்மலங்களையும் வலிகெடச் செய்பவர் என்பதாம்.

திருமுனைப்பாடி நாட்டு மன்னனின் படைத் தளபதியாக இருந்தவர் கலிப்பகையார் போரில் ஆண் சிங்கம். சிவபெருமானிடம் அளவிடற்கரிய பக்தி பூண்டவர். நேர்மை தவறாத படைவீரர். அவர் புகழனார் பெற்றெடுத்த குலக்கொடியாகிய திலகவதியம்மையாரைத் திருமணம் செய்ய விரும்பினார். திடீரென ஆரம்பமான போரில் படை நடத்திச் சென்றவர் வீரமரணம் எய்தினார். இவர் போர்முனைக்குச் சென்றபோது நோயுற்றிருந்த புகழனார் இறக்க மனையாளாம் மாதினியாரும் உயிர் துறந்தார்.

கலிப்பகையார் இறந்த செய்திகேட்ட திலகவதியார் கலங்கினார். பதறினார், துடித்தார். தாமும் உயிர்விட எண்ணியவர் சிறுவனாயுள்ள தம்பியாரின் பாதுகாப்புக்காக உயிர் துறக்கும்

*பூமிக்கு உணவளி. அது உனக்கு உணவளிக்கும்.*

எண்ணத்தைக் கைவிட்டு "நிலைபெறுமாறு". என்ற பதிகப்பிரகாரம் வீரட்டானேஸ்வரருக்கு திருத்தொண்டு (அலகிடுதல், மெழுகிடுதல் ஆகியவை) செய்து வந்தார். இதனிடையே தம்பி நிலையாமையை உணர்ந்தார். சிவனது நல்லருள் கிடையாமையால் "பாடலிபுத்திரம்" சென்று அங்குள்ள சமண சமயமே உண்மை வீட்டு நெறி அளிப்பதென அதிலிணைந்தார். அவரையே தங்கள் சமயத் தலைவராக்கித் "தருமசேனர்" என உயரிய விருதும் வழங்கினர் சமணர்.

இவையறிந்து வருந்திய திலகவதியார் இறைவனிடம் தம்பியாரைச் சமண சமயத்திலிருந்து மீட்டுத்தருமாறு வேண்டினார். இறைவனும் "அவர் கனவில் தோன்றிச் சூலைநோய் கொடுத்து மீட்டுத் தருவேன்" என்றருளி மறைந்தருளினார். அவரருளியபடி தருமசேனர் சூலைநோயின் கொடுமை தாங்காது அவதியுற்றார். சமணர் எவ்வளவோ மருந்து மந்திரங்கள் செய்தும் நீங்காமையால் கைவிட்டுப் புறந்தள்ளினர்.

இந்நிலையில் தன்னை வந்தழைத்துச் செல்லுமாறு தமக்கையாரிடம் தூதனுப்பினார். சமணப்பள்ளிக்குத் தான் வரமுடியாதென திலகவதியார் கூற, அவர் சகோதரியாரிடம் துணையுடன் வர, அவரை வரவேற்று விபூதி கொடுத்துத் தரிக்கச் செய்து கோவிலுக்குக் கூட்டிச் சென்று திருவதிகை வீரட்டானரைத் தொழுது அருள் பெற்று நோய் நீங்கக் "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்று பதிகம் பாடிச் சூலைநோய் நீங்கப் பெற்றார். அது கேட்ட இறைவர் மகிழ்ந்து "நீ அரிய பதிகம் பாடினாய் ஆதலால் உனக்கு 'நாவுக்கரசு' என்று பெயர் வழங்குவதாக" என்று அருள் செய்தார். இதுகேட்டு மகிழ்ந்த நாவரசர் கோவில்தோறும் உழவாரப்பணி செய்ய ஆரம்பித்தார். அது சரியைத் தொண்டாகும்.

இதன்மூலம் சைவ சமயத்தையும் சிவநெறியையும் வளர்க்கும் சமயகுரவராய திருநாவுக்கரசர்மீது பொறாமைகொண்ட சமணர் பல்லவ வேந்தனிடம் போய் இல்லாததும் பொல்லாததுமாக இட்டுக்கட்டி அவனுக்குக் கோபமூட்டித் திருநாவுக்கரசனைத் தண்டிக்கும் படி வலியுறுத்தினர். வேந்தனும் சேவகரை அனுப்பி அவரையழைத்து விசாரணையின்றியே நீற்றறையில் அடைத்தான். அவர் இறை அருளால் "மாசில் வீணையும்" என்னும் திருப்பதிகம் பாட ஈசனது இணையடி நிழல் தென்றலும் பொய்கையும்போலக் குளிர்மை பெற்றது.

சமணர் ஏழாவது நாள் அறைக்கதவு திறந்து பார்த்தபோது தீங்கு எதுவுமின்றி இருப்பது கண்டு தம்மிடம் கற்ற மந்திர வலிமையே என்று வேந்தனை நம்ப வைத்து மேலும் வலிமைகூடிய தண்டனைகளை வழங்குமாறு வேண்டினர். மன்னவன் முதலில் நஞ்சூண் உண்ணக் கொடுத்தான். அது "ஆலமுண்ட நீலகண்டனின்" அடியவருக்கு அமுதமாயிற்று. பின்பு மதம் கொண்ட யானையை ஏவி நாவரசரைக் கொலை செய்ய முனைந்தனர். யானை நாவுக்கரசர் எதிரே வந்தபோது "அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்சவருவதுமில்லை என்றுரைத்து "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்சுடர்" என்று தொடங்கும் பதிகத்தைப் பாட அருள்வெறி கொண்ட மதயானை நாவரசுவை வணங்கியெழுந்து தம்மை ஏவிய பாகன்களை மிதித்துக் கொன்றுவிட்டு நின்றது.

இதுகண்டு மேலும் பேரச்சம் கொண்ட சமணர் எவராலும் அசைக்கமுடியாத பாறாங்கல்லில் கிடத்திக் கயிற்றினால் வரிந்து கட்டித் தள்ளிச் சென்று கடலில் விட்டனர். இதனால் நாவுக்கரசர் "ஆழிமிசைக் கன்மிதப்பில் அமர்ந்தபிரான்" ஆகினார். கடலில் இருந்து கரைசேர அவர் "சொற்றுணை வேதியன்"

*புத்தகங்களின் தோற்றம் உள்ளத்திலிருந்து கவலைகளைப் போக்குகிறது.*

எனத் தொடங்கும் நமசிவாயத் திருப்பதிகத்தைப் பாடியருளினார். பாடியதும் குப்பம் என்னுமிடத்தில் அவர் கரையேறினார். நாவரசரின் ஆற்றலையும் அதற்காதாரமாகிய சைவ சமய சிவநெறி மகிமையையும் உணர்ந்த சமண வேந்தன் மன்னிக்கவேண்டிச் சைவன் ஆகினான். நமசிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரத்தின் மகிமையை மேலும் வலியுறுத்தும் பேரவாவினால் சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தில் கூறுகின்றார்.

*"சொற்றுணை வேதியன் என்னுந் தாய்மொழி*
*நற்றமிழ் மாலையா நமச்சிவாய என்று*
*அற்றமுன் காக்கும் அஞ்செழுத்தை அன்பொடு*
*பற்றிய உணர்வினார் பதிகம் பாடினார்"*

(பெரியபுராணம் 1391)

இதன்பின்பு நாவுக்கரசர் பல சிவ தலங்களையும் திருப்பதிகம் பாடி வழிபாடாற்றி இறுதியாகத் திருத்தூங்கானை மாடம் சென்று அங்கு இறைவரை வணங்கி "சமணசமய தொடர்புடைய உடலுடன் வாழ்வதற்கு விரும்பேன். நான் உயிர்வாழ உமது "அடையாள முத்திரையும் சூலத்தையும் இடபத்தினையும் சிவ சின்னமாக எனது தோளில் பதித்து விடுக" என்று வேண்டுதல் செய்தார். உடனே எவருமறியாது சிவபூதம் வந்து நாவரசரின் தோளில் சூலமும் காளையுமாகிய சிவ சின்னங்களைப் பொறித்துச் சென்றது. எவ்வாறாயினும் 4ஆம், 5ஆம், 6ஆம் திருமுறைகளில் ஏறக்குறைய 4000 பதிகங்கள் பாட முதற் காரணியாக அமைந்தவர் சகோதரியாராகிய திலகவதியாராவார் என்றாலது மிகையாகாது.

பின்பு தாண்டக வேந்தர் பாலறாவாயரைச் சந்திக்கிறார். இருவரும் சேர்ந்தும் தனித் தனியாகவும் பல தலங்களையும் தரிசித்துப் பதிகங்கள் பாடி வழிபாடாற்றி வந்தனர். இவற்றிலே திருமறைக்காடு எனப்படும் வேதாரணியத்தில் வேதங்களால் பூட்டப்பெற்ற முன் கதவு திறக்கப்படாமையால் அருகில் பாதை திறந்து உள்நுழைந்து வழிபட்டு வந்துளர். உரியமுறையில் திறந்து பிரதான வாசல் வழியாகவே சென்றே வழிபட வேண்டும் என்ற உறுதியுடன் நாவரசர் திறக்கவும் பிள்ளையார் மூடவும் பாடுவதெனத் தீர்மானித்து நாவரசு "பண்ணினேர் மொழி" என்று தொடங்கிப் பாட அவ்விசையில் மயங்கிய இறைவன் பத்துப் பதிக முடிவிலும் கதவு திறவாமை கண்டு கவலை கொண்ட நாவரசர் "எண்ணீர் இரக்கம் ஒன்றிலீர்" என்றுபாட மணிக்கதவு திறக்க உள்ளே சென்று இறைவனை வணங்கி வெளி வந்து யாவரும் வழிபட வசதியாகக் கதவு திறக்கவும் மூடவுமாகப் பாலறாவாயர் "சதுரம் மறைதான்" என்று பாடிய முதல் பாடலிலே கதவு மூடவும் திறக்கவுமாயது.

நாவரசு முதல் பாடலிலே கதவு திறக்கவில்லையென கவலை அடைந்துள ளமையை உணர்ந்த இறைவன் அவரது கனவிலே தோன்றி வெண்நீற்றுப் பொலிவுடன் "திருவாய்மூருக்கு வா" என்றருளிச் சொல்ல, அவர் செல்ல இறைவன் மறைந்தார். இது கண்ட நாவரசர் ஒரு பாடலில் கதவு திறக்காத எனக்கு மறைந்தாலும் ஞானசம்பந்தருக்கும் மறையலாமா? எனப் பாட, மகிழ்ந்த இறைவன் இருவருக்கும் காட்சி தந்தருளினார்.

மேலும் பல தலங்களைத் தரிசித்துத் திருப்பதிகங்கள் பாடி வழிபாடாற்றி உழவாரத் தொண்டுகள் புரிந்து வந்த வாகீசப் பெருமானது முன்னை வினை கைகூடி வரக் கைலையம்

*பணத்தைத் தவிர மற்றவை யாவும் உன்னைத் திருப்திப்படுத்தும்.*

பதியானை மானிட தேகத்துடன் தரிசிக்க விரும்பி நடந்தார். கால்கள் சோர்ந்து போகக் கைகளையூன்றி நடக்கலானார். கைகளும் துவண்டுவிடத் தேகத்தால் உருண்டு சென்றார். அதுவும் முடியாதுபோகவே துவண்டு மயங்கிக் கிடந்தார். இதன்போது முனிவராக வந்த இறைவன் நாவரசருக்குச் சிறிது பேசும் உணர்வூட்டி "பொதிசோறு கொடுத்து உண்ணச் செய்து "ஏன் இவ்வாறு செய்கிறீர்" என வினவ, அவர் "கைலைநாதனை ஊனுடலோடு தரிசிக்கப் புறப்பட்டேன்" என்றார். இதுகேட்ட முனிவர் "இது வீண் முயற்சி ஒருபோதும் கைகூடமாட்டாது. ஆகவே இதனைக் கைவிடுவதே நல்லது" என்றார்.

நாவரசர் "இறைவன் வீற்றிருக்கும் கோலத்தைக் கண்டன்றி மீளேன்" என்றார். அவ்வளவில் முனிவராக வந்த இறைவர் மறைந்து அசரீரியாக "நாவரசே எழுந்திரு" என்றார். "நீ இப் பொய்கையில் முழுகின் திருவையாற்றில் எழுந்திருப்பாய்; அங்கு நாம் கைலையில் வீற்றிருக்கும் திருக்கோலக் காட்சியைக் காணப்பிப்போம்" என்றார். இறைவனது பணிப்புரைக்கு அமைய மூழ்கியெழுந்த நாவரசருக்கு அவர் காணுமாறு திருக்கைலாயக் கோலத்தைக் காட்டியருளினார். அக் கோலம் கண்டு மகிழ்ந்த நாவரசர் "மாதர் பிறைக் கண்ணியானை" என்ற பதிகத்தைப் பாடித் துதித்தார். பதிகத்தில் "களிறு வருவன கண்டேன்" என்கிறார். களிறு விநாயக வடிவம். ஆகவே விநாயகப் பெருமானை முன்நிறுத்தியே கைலைக் காட்சியைக் காண்கிறார். மேலும் அப்பதிகத்தில் "கண்டறியாதன கண்டேன்" என்கிறார். கண்டு அறியாதன கண்டேன் என்கிறார் நாவரசர். முன்பு ஒருபோதும் கண்டு கொள்ள முடியாத தோற்றப்பொலிவு இன்று கண்டேன் என்கிறார். அவ்வளவு அற்புதமான காட்சி ஒன்றை அப்பரடிகள் கண்டு இன்புற்றார். அதுவே கைலைக்காட்சி. பின்பு பல கோவில்களையும் தரிசித்துப் பதிகங்கள் பாடி உழவாரத் தொண்டு புரியும்போது பொன் ஆசை இல்லாதவரெனக் காட்டுவான் நோக்கில் இறைவர் குப்பையுள் தெரியும்படியாக வெள்ளி, பொன், தங்கக் கட்டிகளைப் போட்டு வைத்தார். அவை எவற்றையும் நோக்காத நாவரசர் குப்பையோடு குப்பையாக அவற்றையும் கொட்டி விட்டார்.

பின்பு அவர் பெண்ணாசையற்றவர் என்பதையும் உலகோர் அறியும்படி காட்டியருள விரும்பிய எம்பெருமானார் இந்திர சபையில் நடனமாடும் அரம்பை, ஊர்வசி, திலோத்தமை ஆகிய வானத்து மகளிரைப் பூமிக்கு வரவழைத்து ஆடிப்பாட விட்டார். மகளிரும் மிக நளினமாக நாவரசர் முன் பாடி ஆடினர். எவ்வகை நளினம் காட்டி ஆடிப் பாடியபோதிலும் அவர் மனது பேதலிக்கவில்லை. அதனால் மகளிரை நோக்கி "உங்களால் எனக்காவது ஏதுமில்லை. திருவாரூர் அம்மானுக்கு ஆளாகிவிட்டேன். எனவே நீவிர் வீணாக அலையாதீர்" என்றார்.

இதனிடை அப்பூதியடிகளைக் காணச் செல்லும் வழியெங்கும் தமது பெயரால் தண்ணீர்ப் பந்தர், மடம், படிப்பகம், யாகசாலை, பாகசாலை, கேணியாகியன அமைந்திருப்பது கண்டு ஆச்சரியமடைந்தவர் இது யாருடைய செயல்கள் என்று அருகே நின்றவர்களிடம் கேட்டார். அயலவர் இவை யாவும் அப்பூதியடிகளின் செயல்கள் என்றனர். அதுகேட்டு அவரைத் தரிசிக்க விரும்பிய திருநாவுக்கரசர் அவரது வீட்டுக்குச் சென்றார். அப்பூதியடிகள் தமது ஆண்பிள்ளைகட்கு மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு என்றும் பெயர் சூட்டியிருந்தார். அதுகண்ட நாவரசர் கோவில்களில் சரியைத் தொண்டு புரிந்து புல் செருக்கும் உழவாரப்படையனுக்கு ஏன் இவ்வளவு

பெருமை? எனக்கேட்டார். அதுகேட்ட அப்பூதி யடிகள் கோபித்தெழ, "அதுகண்டு புன்முறு வலித்த திருநாவுக்கரசு, நானே நாவுக்கரசர்" என்றார். அப்பூதியடிகள் பணிந்து விருந்து உண்ண வேண்டினார். ஏற்றுக்கொண்ட நாவரசு நீராடி அனுட்டானம் முடித்து வர நீரநிலை அடைந்தார். இதனிடையே வாழையிலை கொண்டுவரச் சென்ற மூத்த மகனை அரவு தீண்ட இலையைக் கொடுத்து இறந்தான் அவன். இதுகண்டு கலங்கிய அடிகள் மரண வீட்டில் விருந்துண்ணாரே என்று பிணத்தை மறைத்தனர். இதனை உணர்ந்த நாவரசு பிணத்தைத் தருவித்து இறையருள் வேண்டி "ஒன்று கொலாம்" என்னும் பதிகம் பாடி உயிர்பெறச் செய்து விருந்துண்டு மகிழ்வித் துச் சென்றார்.

பின்பு திருநெய்த்தானம் முதலான தலங்களைத் தரிசித்துத் திருப்பூந்துருத்தியை அடைந்து அங்குள்ள மடத்தில் தங்கினார். இதன்போது பாண்டிய நாட்டில் சமணரை வெற்றி கொண்ட ஞானசம்பந்தர் அடியார்கள் புடைசூழப் பல்லக்கில் பவனி வந்தார். இது கண்டதும் மடத்தில் தங்கியிருந்த நாவுக்கரசு தாமும் பல்லக்கைச் சுமக்கலானார். அவர் திருப்பூரில் இருப்பதையறிந்து சம்பந்தர் அவ ரைக் கண்டு கலந்துரையாட எண்ணியவர் ஊரெல்லையடைந்ததும் "அப்பரடிகள் எங்குள்ளார்" எனக் கேட்டதும், "அடியேன் இங்கு தங்கள் பல்லக்குத் தாங்கும் பாக்கியம் கிடைக்கப்பெற்றுள்ளேன்" என்றார். இது கேட்ட ஞானக் குழந்தை பல்லக்கிலிருந்து குதித் தோடி வந்து கட்டித் தழுவி வணங்கினர். இருவரும் கோவிலினுட் சென்று பதிகம் பாடி வழிபாடாற்றி வெளிவந்தபின் ஞானசம்பந்தர் வடநாட்டுத் தலங்கட்கும் நாவரசு மதுரை யையுமடைந்தனர். அங்கு மன்னன் மனைவி மந்திரியாகியவர்களால் சிறப்பிக்கப் பெற்றார். எண்பத்தொரு அகவை மண்ணகத்தில் வாழ் வாங்கு வாழ்ந்து உழவாரத் தொண்டு புரிந்து சரியை நெறி நின்ற சமயகுரவருள் மூத்தவ ராய திருநாவுக்கரச நாயனார் வைகாசி மாத மூல நட்சத்திரத்தில் கைலையங்கிரி வாசனுடன் இரண்டறக் கலந்தார். இதுவே அப்பர் சுவாமி களின் குருபூசைத் தினமாகும். இது எங்கும் கொண்டாடப்படுகின்றது.

"ஓம் நமசிவாய வாழ்க"

---

ஒருவன் இறக்கும் தறுவாயில் என்ன நினைக்கிறானோ அதுவே அவனது மறுபிறவியை நிர்ணயம் செய்கிறது. ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் எதையெல்லாம் நினைத்தானோ அது நல்லதாக இருக்க வேண்டும். தமது வாழ்நாளில் கடவுளை முறையாக வழிபட்டவர்களுக்குத்தான் மரணத்தறுவாயில் கடவுளின் நினைவும் தரிசனமும் கிடைக்கிறது. மற்றவர்களுக்கு அல்ல. எனவே வாழ்நாளில் தெய்வத்தைப் பற்றிய நினைவு நம் உள்ளத்தில் கோயில் கொண்டிருந்தால் மட்டுமே, இறக்கும் சமயத்திலும் கடவுளின் நினைவு நமக்கு வரும். இல்லாவிட்டால் வராது. அந்திம காலத்தில் கடவுளின் நினைவு வரவேண்டும் என்பதற்காகவே வாழ்நாளில் கடவுளின் நினைவு பயிற்சி செய்யப்படுகிறது. அந்திம காலத்தில் ஈசுவரனுடைய ஞாபகம் வருவதற்கு உரிய வழியை ஒவ்வொருவரும் தேடிக்கொள்ள வேண்டும். அந்த வழி என்னவென்றால் இறைவனிடம் பக்தி செலுத்தி வாழ்வதேயாகும்.

*மனத்தூய்மையே நேர்மை. மற்றவையெல்லாம் வெறும் கூச்சல்.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| திரு ஞானச்சந்திரன் குடும்பம் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்) | யாழ்ப்பாணம் | 100000. 00 |
| திருமதி S. சிவபாக்கியம் | அவுஸ்திரேலியா | 32600. 00 |
| T. சண்முகவரதன் | அவுஸ்திரேலியா | 15000. 00 |
| வியாவில் ஐயனார் தேவஸ்தானம் | காரைநகர் | 3மூடை அரிசி |
| சண்முகம் சிவஞானம் | காரைநகர் (அநுராதபுரம்) | 100k பருப்பு, 10மூடை அரிசி |
| திரு சபாபதிப்பிள்ளை | அவுஸ்திரேலியா | 13000. 00 |
| முருகதாஸ் ஜனகீசன் | நோர்வே | 25000. 00 |
| சதீசன் பிரவீனா | சுன்னாகம் | 4மூடை அரிசி |
| கனகலிங்கம் சரஸ்வதி | இணுவில் | 30000. 00 |
| சரவணமுத்து பாலசுப்பிரமணியம் | சுவிஸ் | மரக்கறி, 1புட்டி பருப்பு, 12மூடை அரிசி |
| S. பாலதேவி (சிற்றி வெதுப்பகம் மூலம்) | கனடா | 15000. 00 |
| தியாகலிங்கம் திருக்குமார் | லண்டன் | 50000. 00 |
| க. ஆனந்தராசா | கரவெட்டி | 50000. 00 |
| வைரமாளிகை | யாழ்ப்பாணம் | 5மூடை அரிசி |
| E.S.P. நாகரெட்ணம் (கஜமுகன் ஹாட்வெயர்) | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| T. பாலேந்திரா | லண்டன் | 35000. 00 |
| திரு/திருமதி அருந்ததி | லண்டன் | 6மூடை அரிசி |
| திருமதி இ. பத்மநாதன் | தும்பளை | 10000. 00 |
| பரமநாதன் ரவிசங்கர் | நல்லூர் | 50000. 00 |
| P. சுப்பிரமணியம் | வல்வெட்டி | 10000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 100L தயிர், 3மூடை அரிசி |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| K. சிவஞானசூரியர் | கொழும்பு-6 | 13000. 00 |
| ஜனகன் சிந்துஜா | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| வீரசிங்கம் பத்மசீலன் | அச்சுவேலி | 10000. 00 |
| திரு மயூரநாதன் | லண்டன் | 6மூடை அரிசி |
| தயாபரன் தர்சினி | அவுஸ்திரேலியா | மரக்கறி, 25k பருப்பு, 4புட்டி அரிசி |
| ஸ்ரீஸ்கந்தராசா நினைவாக (யுனப்ஸ் நிறுவன நண்பர்கள்) | உடுப்பிட்டி | 10000. 00 |
| து. ரஞ்சிதமலர் (சபா ரேடேர்ஸ்) | அச்சுவேலி | 10k பருப்பு, 1மூடை அரிசி |
| பா. செல்வகுமார் | சாவகச்சேரி | 20000. 00 |
| த. தவேந்திரராஜா மூலம் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | கோப்பாய் | 10000. 00 |
| ஆ. நவரத்தினசாமி | நாகர்கோவில் | 30000. 00 |

*தன்னில் தானே மகிழ்பவனை தீமையான ஆயுதங்கள் தொடுவதில்லை.*

| | | |
|---|---|---|
| இ. பிரதீப் | குப்பிளான் | 15000. 00 |
| நேசரத்தினம் ஜெயக்குமார் | லண்டன் | 20000. 00 |
| ம. ஜெகசோதி | சுன்னாம் | 1மூடை அரிசி |
| ரவிக்குமார் தர்மினி | சாவகச்சேரி | 20000. 00 |
| சுப்பிரமணியம் குடும்பம்<br>தனயன் குடும்பம்<br>கிருபா குடும்பம்<br>ரோகினி குடும்பம்<br>நந்தினி குடும்பம்<br>அன்னலெட்சுமி குடும்பம்<br>குமுதினி குடும்பம் | மல்லாகம் (கனடா) | மரக்கறிவகை, 4புட்டி பருப்பு, 25மூடை அரிசி |
| வேல்முருகன் அரிசி ஆலை | தொல்புரம் | 25k அரிசி |
| தர்சன் | தொல்புரம் | 25k அரிசி |
| வன்னியன் சுவையூற்று வாணிபம் | சுழிபுரம் | 1புட்டி உருளைக்கிழங்கு, 1k பூடு, 2k புளி, 5L எண்ணெய், 25k அரிசி |
| நா. சுந்தரலிங்கம் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| நா. பரமானந்தமூர்த்தி | கனடா | 30000. 00 |
| பொ. தவநேசன் | அச்செழு | மரக்கறி, 4மூடை அரிசி |
| மணியம் பில்டிங் | புத்தூர் | 1மூடை அரிசி |
| பா. சிவதர்சன் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| க. சிவசோதி | கோண்டாவில் | 1மூடை அரிசி |
| ந. சிவதாசன் | அச்செழு (அவுஸ்திரேலியா) | 50000. 00 |
| இ. சொக்கலிங்கம் ஆசிரியர் | நாவற்குழி | 12000. 00 |
| ஜெ. சிவநந்தினி | லண்டன் | 5மூடை அரிசி 5000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | 10000. 00 |
| அழகராசா சம்மாட்டி | நாகர்கோவில் | 15000. 00 |
| ந. இலட்சுமி, T. அப்புத்துரை | வல்வெட்டி | 4புட்டி அரிசி, 10000. 00 |
| வே. ராமச்சந்திரன் | கனடா | 20000. 00 |
| நி. ஆதீஸ் | நெல்லியடி | 1மூடை அரிசி |
| B.R. ரஞ்சன் (லயன் கழகம்) | யாழ்ப்பாணம் | 80k அரிசி |
| திருமதி தம்பிராசா | திருநெல்வேலி | 10 தேங்காய், 5மூடை அரிசி |
| அ. சண்முகராஜா | லண்டன் | 30000. 00 |
| கிருபாகரன் ஞானசத்தியன் | அச்சுவேலி (U.K) | 50000. 00 |
| ஸ்ரீதேவி அரிசி ஆலை | அச்சுவேலி | 2மூடை அரிசி |
| S. மிகிந்தலா | கரவெட்டி | 1000. 00 |
| அமேசா ஐங்கரதாசன் | கனடா | 10000. 00 |

(தொடரும்...

# இலங்கைச் சைவர் வாழ்வில் கந்தபுராணமும் குக (சைவ) சித்தாந்தமும்

– திரு கௌ. சித்தாந்தன் அவர்கள் –

ஒரு நாட்டில் உள்ள மதங்களை, வரலாற்றினதும் ஐதீகத்தினதும் அடிப்படையில் தோன்றிய மதங்கள் என்றும் புகுந்த மதங்கள் என்றும் பாகுபாடு செய்து நோக்குவதுண்டு. இதன்படி இலங்கைச் சைவ சமயத்தைத் தோன்றிய மதம் என்றுதான் கூறவேண்டும். இலங்கையின் நான்கு திக்குகளிலும் உள்ள சிவாலயங்களின் தொன்மையினைக் கருத்தில் கொண்டு இந்த நாட்டைச் "சிவபூமி" என்றார் திருமூலர். இலங்கையின் வடமேற்கு பகுதியில் உள்ள சிலாபம் நகருக்கு அணித்தாகவுள்ள முன்னைநாதர் கோயில் இராமாயண காலத்துடனும் தொடர்புபட்டது. மகாதுவட்டாவினாலும் கேதுவினாலும் இலங்கையின் தொன்மைக் குடிகளான நாகர்களினாலும் வழிபடப்பெற்ற மன்னார் திருக்கேதீச்சரம் ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஞானசம்பந்தராலும் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சுந்தரராலும் பாடப்பெற்றது. கிழக்கு மாகாணத்தில் உள்ளதும் இதிகாச புராண காலத் தொன்மையுடையதுமான திருக்கோணேச் சரத்தை ஞானசம்பந்தர் பாடியுள்ளார். இப்படி மகிமைபெற்ற சிவாலயங்கள் மலிந்த இலங்கையில் எவ்வாறு புராண நன்னாயகமான கந்தபுராணமும், குக சைவசித்தாந்தமும் என்ற தத்துவமும் நிலை கொண்டன என்பதைச் சுருக்கமாக நோக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் தமது "ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம்" (1966) எனும் தொகுப்பு நூலில் யாழ்ப்பாணத் தமிழ்வேந்தர் காலம் என்று "1216 - 1621" எனும் காலப்பகுதியினைக் குறிப்பிடுவர். கதிர்காமக் கந்தனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட "கதிரமலைப் பள்ளு" என்ற இலக்கியம் அக்காலத்தைச் சேர்ந்ததாகும். இதன் காப்புச் செய்யுள், "கார்சேருஞ் சோலைக் கதிரையில் வேலாயுதன் மேற்....." என்று தொடங்கு கின்றது. இப் பள்ளின் நாற்று நடுதல் எனும் பகுதியில்,

*அண்டர் பணியத் தவமும் பயனும்*
*அருளி வினைக ளறுப்பவன்*
*அருள்வி ளங்கிய கரிமு கற்கிளைய*
*அறு முகன் குகன் குருபரன்*
*எண்ட லம்புகழ் கதிரைக் கிறைவன்*
*என்றும் நினைப்பார்க் குரியவன்*
*இருட்டு வஞ்சகத் திருடருக் கொளித்*
*திருப்பவ னெமைப் புரப்பவன்*
*கொண்டல் வண்ணனுக் குரிய மருகன்*
*குமர னமர குஞ்சரி*
*கொழுநன் மாவலி கங்கை வயலிற்*
*கூடி யாடிப் பாடியே. (96)*

என்று கந்தப் பெருமான் புகழ் பேசப்படுகிறது. "பரராசசேகரம்" எனும் வைத்திய நூலின் பாயிரத்திலும்,

ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் என்னும் யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தைச் சேர்ந்ததான

*சூரனைத் துணைவரைச் சுற்றுஞ் சேனையைக்*
*கூரிய வேலினிற் குறைத்து வானவர்*
*வாரண மங்கையை வதுவை செய்திடும்*
*சீரிய வேள் பதஞ் சிந்தை செய்குவாம்.*

என்றும் கந்தப்பெருமான் பொதுவாகவும்,

*அமிழ்துறள் தமிழ்மொழி யகத்தியற் குணர்த்திய*
*கவுரிதன் புதல்வன் கார்த்தி கேயன்*
*கதிரைநன் னகர்முதற் பதிபல மேவி*
*அடியவர் வேண்டியாங் கருள்புரி வள்ளல்*
*அவனடி யுகள மென்றும்*
*பரவிப் பணிகுதூஉம் பதம் பெறற் பொருட்டே. (2)*

என்று கதிர்காமக் கந்தன் சிறப்பாகவும் துதிக்கப்படுகின்றார். இதே நேரம் அக்காலத்திலே தோன்றிய தக்கிணகைலாச புராணம், திருக்கரசைப் புராணம், கோணேசர் கல்வெட்டு, கைலாயமாலை எனும் இலக்கியங்கள் சிவ வழிபாடு பற்றியனவாகக் காணப்படுகின்றன. இப்படியாக சைவசமய சூழலில் எமது மக்கள் வாழ்ந்த காலத்திலேதான் கத்தோலிக்க சமயத்தவராகிய போர்த்துக்கேயரால் எமது சமயத்தின் மீதான ஆக்கிரமிப்பு, அழிப்பு நடவடிக்கைகள் ஏற்பட்டுத் தொடரப்பட்டன. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஆண்ட காலம் கி.பி. 1621 - 1658 ஆகும். இவர்கள் காலத்திலே எமது சமயத்திற்கும் பண்பாடு கலாசாரத்துக்கும் பேராபத்து ஏற்பட்டது. வெளிப்படையாக எமது சமய நடவடிக்கைகளை கைக்கொள்ள முடியவில்லை. எமது வணக்கத் தலங்கள் இடித் தழிக்கப்பட்டன. அக்காலத்திலேதான் நமது திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர் தமிழகத்துக்குத் தப்பி ஓடுகிறார். ஆனால் கதிர்காமத்தலம் போர்த்துக்கேயரின் தாக்குதலுக்கு இலக்காகவில்லை. இதற்கு கதிரை வேற்பெருமான் மீதான அவர்களது அச்சமும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இந்த நாட்டின் தொன்மைமிகு முருகத்தலமான கதிர் காமத்தில் உறையும் கந்தப்பெருமானை இந்த நாட்டவர் தமது சொந்தப் பெருமானாக வணங்கும் உரிமையுடையவர்கள். இலங்கையின் ஆதிக்குடிகளான வேடுவர்கள் கதிர்காமக் கந்தனைத் தமது மைத்துனராகவே உரிமை கொண்டாடி வணங்குவர். அத்துடன் இலங்கையின் இன்று வரையுள்ள தமிழ்ச் சைவரில் பலரும் கதிர்காமக்கந்தன் வழி அடியவரே.

இலங்கையின் சைவ்சமய வரலாற்றுச் செல்நெறி இப்படியிருக்க, தமிழகத்திலே சோழர்களின் பொற்காலம் மறைந்துபோக இந்து சமயத்திற்குப் பல இடர்பாடுகள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. தேவாரங்களிலேயே சேயோன்தன்மை பெற்றிருந்த கந்தப்பெருமான் சைவ பக்தரால் முதன்மைகொடுத்து, முன் னிலைப்படுத்தி வழிபடப்படுகின்றார். வைணவ

சமயத்திலும் மாயோனின் மருகன் என்றபடி சிறப்புப் பெறுகின்றார்.

பதினான்காம் நூற்றாண்டில் கந்தப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட "கந்தபுராணம்" சிவாசாரியாரான கச்சியப்பரால் பாடப்படுகிறது. இந்நூல் சைவசித்தாந்தச் சுரங்கமாகவும் விளங்கு கின்றது. வட இந்தியாவிலே கி.மு. ஆறாம் நூற்றாண்டில் புறச்சமயங்களை வெற்றி கொள்ளப் புராணங்கள் பெருமளவு பங் களிப்புச் செய்தமைபோலவே தமிழ் நாட் டிலும் சைவசமய விருத்திக்குப் புராணங்கள் பெரும் பங்களிப்பு செய்கின்றன. இலங்கை யிலும் கிறிஸ்தவ மதமாற்றத்தைப் பெரிதும் தடுத்து சைவ சமயத்தை வளர்ப்பதிலே புராணபடன கல்விக்குப் பெரும் பங்குண்டு. இவற்றுள் தலையாயது கந்தபுராணபடனக் கல்வி ஆகும்.

ஈழத்தின் முதற் சமயகுரவர் என்று போற்றப்படும் ஆறுமுகநாவலர் அவர்களும் இரண்டாம் சமய குரவர் என்று போற்றப் படும் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களும் அவர் வழிவந்த பலரும் கந்தப் பெருமான் அடியவர்களே. ஆறுமுகநாவலர் அவர்களும் அதிகாலையிலே திருமுருகாற் றுப்படையைப் படித்தே தமது காரியங்களைத் தொடங்குவாராம். அவரின் தந்தையார் பெயரே "கந்தப்பிள்ளை" என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆறுமுகநாவலர் அவர் களுக்குப் பெருங்காப்பியமாகத் தெரிவது கந்தபுராணமே. "கந்தபுராணத்தில் இல்லா தது எந்தப் புராணத்திலும் இல்லை" என்பது பழமொழி. கந்தபுராணத்தின் தன்னிகர் இல்லாத் தலைவன் கந்தன். கந்தபுராணம் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களையும் நல்குவது. எனவே நமது ஆறுமுகநாவலர் அவர்கள் "ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள" யாவரும் படித்தறிவதற்காக முதலில் கந்தபுராண மூலத்தைப் பதிப்பித்து, அதன் பின் அதனை வசனத்திலே எழுதினார். நாவலர் காலத் திலும் அவருக்குப் பின்னரும் கந்தபுராண ஆறு காண்டங்களின் 10345 பாடல்களுக்கும் பொருள் விளக்கம் எழுதப்பட்டது என்றால் அவற்றுக்குக் காரணம் ஆறுமுகநாவலரின் கந்தபுராண வசனமே.

போர்த்துக்கேயரின் சமய எதிர்ப்பு நடவடிக்கைகள்தான் ஈழத்துச் சைவர்களை திரிசூல வழிபாட்டை மேற்கொள்ள வைத்த தும் கந்தபுராணத்தைப் பாராயண நூலாகக் கொள்ள வைத்ததுமாகும். நாவலர் கந்தபுரா ணத்தை அச்சிடமுன்பு யாழ்ப்பாணத்திலே பலர் ஏடுகளில் அதனைப் பிரதிபண்ணிப் பூசையறையில் வைத்து வணங்கியும் படித் தும் வந்திருக்கிறார்கள். இன்றும் பல சைவாலயங்களில் மாத்திரமன்றி, மடங்களி லும், வீடுகளிலும் கந்தபுராணம் பாராயண நூலாக விளங்குகின்றது. தற்காலத்தில் ஆலயங்களிலே கந்தபுராணம் அவசரப்பட்டு வாசிக்கப்படுகின்றது. வாசிக்கிற வேகத்தை விட பொருள் சொல்லும் வேகம் அதிக மாகக் காணப்படுகிறது. புராணபடனத்தைக் கேட்போர் கேட்டுக் கிரகிப்பதற்கும் சந்தர்ப் பம் இல்லை. இக்காலத்தில் புராணப்படிப்பு மிகவும் பயன்குறைந்ததொன்றாகவும் கடமைக் காகப் படிக்கப்படுவதாகவும் காணப்படுகின் றது. முற்காலத்தில் இவ்வாறில்லை என் பதனை வெளிவந்த நூல்கள் வாயிலாக அறியக்கூடியதாக இருக்கின்றது. அக் காலத்திலே நுணுக்கமாகவும் விரிவாகவும் பொருள் கூறப்பட்டமையால் அதனைப் "பயன் சொல்லுதல்" என்று கூறினார்கள். இதனை அவரவர் எழுதிய உரை நூலிலே காணக்கூடியதாக இருக்கின்றது.

*அன்பினால் வழிபாடு செய்கிறவனுக்கு ஆலய கதவுகள் தானே திறக்கும்.*

இவ்வகையில், யாழ்ப்பாணத்திலே உடுப்பிட்டி அ. சிவசம்புப்புலவர், வல்வை ச. வயித்தியலிங்கம்பிள்ளை, தும்பைநகர் ச. சுப்பிரமணியசாஸ்திரிகள், நவிண்டில் சு. சிவாநந்த தேசிகர், ஏழாலை ஐ. பொன்னையா (அருளானந்தசிவம்), வித்துவான் ந. சுப்பையாபிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சுழிபுரம் யோகி கார்த்திகேசு, "சந்திரதீபம்" ஆசிரியர் வை. நல்லையா, பிள்ளைக்கவி வ. சிவராஜசிங்கம், "பௌராணிக வித்தகர்" செல்லையா சிவபாதம், "புராணவித்தகர்" முத்தையா இராசேந்திரம், "புராண வித்தகர்" மு. தியாகராசா போன்றோரால் கந்தபுராணத்திற்கு எழுதப்பட்ட உரைவிளக்கக் குறிப்புக்கள் தக்க சான்றெனலாம்.

இக் கந்தபுராணபடனக் கல்வி அந்தக் காலத்திலே யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்க்கையைச் செழுமைப்படுத்துவதில் முக்கிய பங்கினை ஆற்றி வந்திருக்கிறது. பக்தி, எளிமை, தூய்மை, அஞ்சாமை, விருந்தோம்பல், செய்நன்றி மறவாமை, அழகியல் உணர்வு முதலான உயர்பண்புகளுடன் வாழ்ந்து மேனிலைபெறக் கந்தபுராணம் காரணமாக இருந்தது. அதாவது யாழ்ப்பாணத்துக் கலாசாரம் "கந்தபுராணக் கலாசாரம்" (1959) என்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நூல் எழுதக்கூடிய அளவிற்கு யாழ்ப்பாணத்துச் சைவர்களின் வாழ்வியலில் கந்தபுராணம் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தியது.

"கந்தபுராணம் கலாசாரமானது" (முல்லை மாவட்ட கல்லிருப்பு கண்ணகியம்மன் வயிரவர் ஆலய மஹா கும்பாபிஷேக மலர், 2019) என்ற ஒரு கட்டுரையினை பேராசிரியர் வ. மகேஸ்வரன் எழுதியுள்ளார். இதனைப் போன்றே "கந்தபுராணம்", "குகசைவ சித்தாந்தம்" எனும் தத்துவம் தோன்றவும் காரணமாக அமைந்தது. யாழ்ப்பாண அகராதி, சுப்பிரமணிய பராக்கிரமம், சைவசித்தாந்தச் சுருக்கம், சைவசந்திரிகை என்பவற்றின் ஆசிரியரான மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளை (1844 - 1947) அவர்களே குகசைவசித்தாந்தம் என்பதை அறிமுகப்படுத்தி, வழக்கிற்குக் கொண்டு வந்தார் என்று அறிகிறோம்.

பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களைப் பற்றிப் பேசும் சைவசித்தாந்தம் ஒரு பெரும் தத்துவமாகும். ஞானசம்பந்தருக்கும் முற்பட்ட காலத்தைச் (கி.பி. 6ஆம் நூற்.) சேர்ந்தவரான திருமூலருடைய திருமந்திரத்திலேதான் சைவசித்தாந்தம் பற்றிய பல கருத்துக்களை முதன் முதலில் விரிவாகக் காண்கிறோம்.

*"பதிபசுபாசம் எனப்பகர் மூன்றில்*
*பதியினைப்போல் பசுபாசம் அனாதி*
*பதியினைச் சென்று அணுகாப் பசுபாசம்*
*பதிஅணுகில் பசுபாசம் நிலாவே"*

(திருமந்.115)

எனும் பாடல் இதற்குச் சான்றாகும்.

சைவசித்தாந்த தத்துவம் 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மெய்கண்டதேவரது சிவஞானபோதத்துடன் கோட்பாட்டு வடிவம் பெற்று வளர்ச்சி கண்டதொன்று. ஞானநெறியில் உயர்ந்து நின்ற மணிவாசகப் பெருமானுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தர்க்கங்கள்தான் சைவசித்தாந்தம் விரைவாகவும் பெருந் தத்துவமாகவும் தோன்றக் காரணம்

என்று கூறப்படுகிறது. "மார்க்சியசித்தாந்தம் மனிதனைப் பற்றிப் பேசுகிறது; சைவசித்தாந் தமோ அனைத்து உயிர்களைப் பற்றியும் பேசு கிறது" என்று சைவப்பெரியார் சு. சிவபாத சுந்தரம் அவர்கள் சேர். பொன். இராமநாதன் அவர்களுக்குக் கூறியபின்தான் இராமநாதன் அவர்களுக்கும் சைவசித்தாந்தத்தில் பற்று அதிகரித்ததாகக் கூறப்படுகின்றது. எனவே சைவ சமயத்திற்குக் கவசமாகவும் விளங்கும் சைவசித்தாந்தத்தை சமய வாழ்வியலுடன் கலக்கச் செய்வதற்கான ஒரு முயற்சி "சித் தாந்த சைவம்" எனின் அதன் இன்னொரு வகையான முயற்சி "குகசைவசித்தாந்தம்" என்று கூறவேண்டும். இலங்கையில் உள்ள சைவர்களிற் பெரும்பான்மையானவர்கள் முருக வழிபாட்டுடன் தொடர்புடையவர்கள் என்றபடி யால் அவர்கள் இந்த வழிபாட்டில் உறுதியாக நின்று உய்திபெறக் கூடிய தத்துவமாகவும் குகசைவசித்தாந்தத்தைக் குறிப்பிடலாம்.

இது கலியுக காலம். எந்த நேரத்திலும் நினைத்துப் பார்க்க முடியாத - தீர்வுகாண முடியாத எந்தப் பிரச்சினையும் சித்தாந்தம் கூறும் கன்மம் காரணமாக ஏற்படலாம். இதற்கு, "வேலுண்டு வினையில்லை; மயிலுண்டு பய மில்லை" எனும் கலியுகவரதனாம் கந்தப்பெரு மானின் வழிபாடே உடனடியாகவும் நீண்ட காலத்திற்கும் பயனளிக்கக்கூடியது என்று காட்டுவது குகசைவசித்தாந்தம் என்று கூறத் தோன்றுகின்றது.

இந்து சமயத்திலே உள்ள சாக்தம், காணபத்யம், வைணவம், கௌமாரம், சௌ ரம் எனும் மதப் பிரிவுகள் சைவத்துள் அடக் கம் என்பது சைவர்களின் நம்பிக்கை. "சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவ சமயம்" என்று ஆறுமுகநாவலர் கூறியதும் குறிப்பிடத்தக்கது. "குகன்" எனும் கந்தப்பெரு மான் சிவபெருமானின் ஓர் அம்சம் எனலாம். "திருச்சிற்றம்பலம்" என்பது சைவர்கள் ஒவ் வொருவரும் தமது இருதயத்தில் வைத்துப் பாராயணத்தைத் தொடங்கும் ஒரு மந்திரச் சொல்லாகும். "குகன்" என்பதும் எமது இதய மாகிய குகையில் வீற்றிருப்பவன் எனும் பொருளினையே உடையது. "குகேசன்" என் பது கந்தப்பெருமானின் நாமங்களில் மிகவும் சக்தி வாய்ந்தது. "குகராணி" என்பது உமை யம்மையின் திருநாமங்களில் ஒன்று. ஆரம்ப காலங்களில் இலங்கையிலே கந்தபுராணத் திற்கு உரை எழுதியவர்கள் தொடக்கத்திலே "சிவமயம்" என்பதற்குப் பதிலாக "குகமயம்" என்பதனைத்தான் பயன்படுத்தினார்கள். எனவே "சிவனும் குகனும் ஒருவரே" என்பது எமது நம்பிக்கை. நவாலியூர்ச் சோமசுந்தரப்புலவர் இயற்றிய "கந்தபுராணக் கதைகளும் அவை கள் உணர்த்தும் உண்மைநூற் கருத்தும்" (1938) என்பது குகசைவசித்தாந்த தத்துவத் திற்கு மிகவும் வேண்டிய நூலாகும்.

கந்தபுராணத்திலே "காசிபன் உப தேசம்" மூலம் முப்பொருள் பற்றிய கருத்துக் கள் சொல்லப்படுகின்றன. அவனின் துணைவி யாகிய "மாயை" மூலம் கன்மம் பற்றிய கருத்துக்கள் கூறப்படுகின்றன. "சுப்ரஹ்மண் யன்" என்பது பிரமத்தின் நல்லியல்புகள் பெற்றவன் என்று பொருள்படுவதுபோல "கந் தன்" என்பது "பற்றுக்கோடாக நிற்பவன்" என்று பொருள்படுகின்றதாகும். இக் கந்தனே பரம்பொருள். சூரபன்மன் - ஆணவமலம்; சிங்க முகன்- கன்மமலம்; தாரகன்- மாயாமலம். கந்தப்பெருமானின் சக்திகளாகிய வள்ளி அம் மனும் தெய்வயானை அம்மனும் முறையே இச்சா சக்தியும் கிரியா சக்தியும் ஆவர். ஆழ்ந்து, அகன்று, நுண்ணியதான இயல் பினை உடைய வேலாயுதம் ஞானசக்தி.

கந்தப்பெருமானின் வேலாயுதத்தினால் தாரகன் யானை ஆகி ஐயனாருக்கு வாகனம்

*நேர் வழியில் அடைய முடியாததை ஒருநாளும் தவறான வழியில் அடைய முடியாது.*

ஆகின்றான். சிங்கமுகன் சிங்கமாகி அம்பிகைக்கு வாகனமானான். சூரபன்மன் சேவலும் மயிலுமாகி கந்தப்பெருமானுக்குக் கொடியும் வாகனமும் ஆனான்.

பிள்ளையார் சுழியானது நாத, விந்து என்பவற்றின் இணைவான ஓங்கார தத்துவம். மயில் தோகைவிரித்தாடுவது ஓங்காரத்தை உணர்த்துவதாகவும் கூறுவர்.

"ஓங்காரத்துள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்கார்" என்பர் அருணகிரியார். கந்தபுராணத்தில் சேவல் நாத தத்துவத்தையும் மயில் விந்து தத்துவத்தையும் உணர்த்தும் என்பர். கந்தபுராணம் சைவ சித்தாந்த சற்காரிய வாதத்திற்கும் உதாரணம் காட்டுகின்றது. "உள்ளது அழியாது: இல்லது தோன்றாது" என்பது சற்காரிய வாதத்தின் சுருக்கம். காரியம் உண்மையென்றால் அதற்கான காரணமும் உண்மையென்பது சற்காரிய வாத விளக்கம். சைவ சித்தாந்தத்தில் இறைவனுக்கு "சங்கரன்" என்று பெயர் கொடுக்கப்படுகின்றது. இதன் பொருள் "சுகம் செய்பவன்" என்பதாகும். சூரன் அழிக்கப்படவில்லை; அவனது இருளினும் கொடிய ஆணவத்தின் வலிமை முற்றாக அடக்கப்படுகிறது. அதற்குப் பின் அவனுக்குச் சுகம்தானே.

சைவசித்தாந்தத்திலே இறைவன் ஆன்மாக்களை மார்ச்சார நியாயப்படியும் (பூனை - குட்டி) மர்க்கட நியாயப்படியும் (குரங்கு - குட்டி) ஆட்கொள்வதாகக் கூறப்படுகின்றது. கந்தபுராணத்திலே வள்ளியம்மை திருமணத்தை "மார்ச்சாரசம்பந்தம்" எனவும் தேவயானை திருமணத்தை "மர்க்கடசம்பந்தம்" என்றும் கூறுவர். வள்ளி வேட்டுவரில் இருந்து விலகி வந்தமையை ஐம்புல வேடரில் இருந்து விலகி வந்ததாகவே விளக்கமளிப்பர்.

எனவே குகசைவசித்தாந்தம் சைவ சித்தாந்தத்திற்கு எந்தவகையிலும் மாறுபாடானதல்ல. சைவசித்தாந்தமாகிய உயரிய தத்துவத்தை இலகுவாகப் புரிந்து நடப்பதற்கானதொரு அரிய சிந்தனை என்று கூறலாம். குகசைவசித்தாந்தத்தை நன்குணர்ந்து நடந்து மேன்மைபெறக் கந்தபுராணத்தை உரிய மூல நூல், உரைநூல், வசனநூல் வழியாகக் கற்கவேண்டும்.

*"ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்*
*பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்*
*ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்*
*போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருளவல்லான்"*

(கந். உற்பத்திக்காண்டம், திருவிளையாட்டுப் படலம், 19., பூவண்ணன் உரை)

"கந்தனுண்டு கவலையில்லை; குகனுண்டு குறையில்லை"

விதியின்மேல் பழியைப் போட்டுவிட்டு, எதற்கும் ஒரு காலம், நேரம் வரவேண்டும் என்ற தவறான நம்பிக்கையுடன் இருப்பதில் சிலர் திருப்தி பெற்று விடுகிறார்கள். உண்மைதான். ஆன்மிக முன்னேற்றம் காலத்தைப் பொறுத்ததுதான்; ஆன்மிக அனுபூதி என்பது எப்போது வரும், எந்த நேரத்தில் வரும் என்பதை யாராலும் சொல்லமுடியாது. ஆனால் அதற்காக எல்லாம் நேரப்படி நடக்கும், எதற்கும் அதிஷ்டம் வேண்டும் என்றிருப்பது கோழைத்தனம். இதுபோன்ற கோழைத்தனம் வாழ்வை எதிர்நோக்காமல் தப்பி ஓடுவது மட்டுமல்ல, இதனால் ஆன்மிக முன்னேற்றமும் வெகுவாக தடைப்படுகிறது.

*பிறரை விமர்சிக்கும் ஒருவன் தன் குறைகளை வெளிப்படுத்துகிறான்.*

(தொடர் -36)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

ஆன்மா என்பது ஜீவாத்மா என்று சொல்லப்படுகிறது. ஜீவாத்மா என்பது பரமாத்மா வின் ஓர் அங்கம்தான். ஜீவாத்மா என்பதும் பரமாத்மா என்பதும் வேறு வேறானவை அல்ல. பரமாத்மாதான் இறைவனும் ஆகும். ஜீவாத்மா மனித உடலுக்குள் கட்டுப்பட்டு இருந்தாலும், பரமாத்மாவின் ஓர் அங்கமே மனித வடிவம் எடுத்திருப்பதாகக்கொள்ள வேண்டும்.

இறைவனின் அங்கமான ஜீவாத்மா இறைவனின் வடிவமான பரமாத்மாவுடன் தொடர்புகொள்ளும் நிலையைப் பெறுகின்ற போது கர்ம பலன்களை தன்னிடமிருந்து நீக்கிக்கொள்ளுகின்ற ஆற்றலையும் அது பெற்றுவிடுகிறது.

மார்க்கண்டேயன் தன்னுடைய வழி பாட்டின்மூலம் இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலையினைப் பெற்றுவிடுகிறான். அந்த நிலையில் அவனுள் உறையும் ஜீவாத்மா வேறு பரமாத்மா வேறு என்கிற நிலை இல்லா மல் போய்விடுகிறது. அதாவது இறைவனோடு கலக்கும் நிலையை ஜீவாத்மா பெறுகின்ற போது கர்ம பந்தங்கள் அதனிடமிருந்து விலகி விடுகின்றன.

சாவித்திரி கதையும் கர்மபந்தம் நெருங்கமுடியாமல் ஆகிவிடுகின்ற நிலையைத் தான் எடுத்துக் காட்டுகிறது. சாவித்திரி தன் னுடைய கற்பின் வலிமையால் கர்மபந்தத்தை வென்று கணவனின் உயிரை மீட்டு விடுகிறாள். அவளுடைய கற்பு விதவையாக வாழவேண் டிய கர்மபந்தத்திலிருந்து அவளுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்துவிடுகிறது. இந்தக் கதை யில் ஒருவன் அல்லது ஒருத்தி தன்னுடைய நல்ல நடத்தைகள்மூலம் கர்ம பந்தத்திலிருந்து தன்னை விலக்கிக் கொண்டுவிட முடியும் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

இந்து மதத்தின் ஏனைய கோட்பாடு களை வைத்துப் பார்க்கும்போது கர்மபலனைப் பற்றி தேவைக்கதிகமாக அழுத்தம் கொடுத்துப் பேசுவதில் அர்த்தமில்லை என்றே தோன்று கிறது.

முற்பிறப்பின் பாவங்களுக்கு இப் பிறப்பில் பதில் சொல்ல வேண்டும் என்பது நியாயமான வாதமாக இருக்கலாம். ஆனால் இப்பிறப்பில் தனக்குத் தெரியாத, தான் உணரமுடியாத ஒன்றுக்காக தண்டனை அனு பவிக்க வேண்டும் எனச் சொல்வது சரியான வாதமாகாது.

தவறு செய்கிறவன் திருந்துகின்ற போது அவனுக்கு மன்னிப்பை இறைவன் வழங்குகிறான் என்பதுதான் பொருத்தமான நியாயமாக இருக்க முடியும். அதைத்தான் மார்க்கண்டேயனுக்கும் சாவித்திரிக்கும் இறை வன் வழங்குகிறான்.

இந்த நியாயம் ஒருவனுக்கு கிடைக் காமல் போகுமானால், தன்னைச் சுற்றி உள்ள உலகத்தில் தீயவர்கள் மகிழ்ச்சியாக வாழ்வதையும், நல்லவர்கள் தீராத துன்பங் களை அனுபவிப்பதையும் பார்க்கின்றபோது, நல்லவனாக வாழ்ந்து துன்பங்களை அனுபவிப் பதைவிட தீயவனாக வாழ்ந்து சுகங்களை

*வறுமை இனிய பண்புக்குச் சோதனைக் கருவி.*

அனுபவிக்கலாம் என்கிற எண்ணம் மனிதனுக்குத் தோன்றுவது தவிர்க்கமுடியாதது ஆகி விடும்.

தான் உணரக்கூடிய இந்தப் பிறப்பைப் பற்றித்தான் அவன் எண்ணுவானே தவிர, அடுத்து வரவிருக்கும் பிறப்பால் எப்படி இருக்கப்போகின்றோம் என்பதைப் பற்றிக் கவலைப் படவே மாட்டான். தவிர இன்றைய துன்பங்களுக்கு முற்பிறப்பில் தான் செய்த தீவினைகளே காரணம் என்கிற முடிவுக்கு வரும்போது, துன்பங்களைப் போக்கிக்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்ற உத்வேகமும் அவனுக்குக் குறைந்துவிடும்.

உண்மையில் இந்துமதம் கர்மபந்தங்களிலிருந்து விடுபடுகின்ற வழிகளையும் சொல்லிக் கொடுக்கிறது. இறைவனுடன் உள்ளம் ஐக்கியப்படும்போது கர்மபந்தங்களை அறுத்தெறியும் சக்தி நமக்கு கிடைப்பதாகவே கருத வேண்டும்.

மனித ஆற்றல் எல்லையற்றது. அதை எந்த அளவுக்கு வேண்டுமானாலும் வளர்த்துக் கொள்ள முடியும். முற்பிறப்பின் பாவங்களுக்கு இப்பிறப்பில் கட்டுப்பட்டு நம்மை நாமே முழுமையாக அழித்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. பார்க்கப்போனால் அழிவு என்கிற ஒன்று இருப்பதற்கு வழியே இல்லை.

இயற்கை ஆக்கிக்கொண்டே இருக்கிறது. இறை சக்தியின் வெளிப்பாடுதான் இயற்கை. இயற்கை அழிக்கவில்லை என்பது உண்மையானால் பூகம்பங்களும் புயல்களும் ஏன் ஏற்படுகின்றன என்கிற கேள்வி எழலாம். இயற்கையின் செயற்பாட்டின் மாற்றம் ஒரு கட்டம். மாற்றத்தின்போது சில தோன்றுகின்றன, சில அழிகின்றன.

இயற்கையின் விளைவாக மனிதன் பிறக்கிறான். பிறந்த மனிதன் இறக்கிறான். இது அழிவா? இல்லை; ஆத்மா அழிவதில்லை.

வெள்ளம் வரும்போது கரைகள் சேதமடைகின்றன. அது வெறும் சேதம் மட்டும் தானா? கரைகளில் வண்டல் படிகிறது. வளம் கொடுக்கிறது. அழிவிலிருந்து உற்பத்தி ஆரம்பம் ஆகிறது.

செடிகள் முளைக்கின்றன. பயிர்கள் வளர்கின்றன. காய் கனிகளும் தானியங்களும் நமக்குக் கிடைக்கின்றன. பின்னர் இந்தத் தாவரங்கள் காய்ந்து, உக்கி மண்ணோடு மண்ணாக கலந்து விடுகின்றன. விதைகளில் இருந்து மீண்டும் செடிகள் தோன்றுகின்றன. இது ஒரு சக்கரம். ஆரம்பமும் முடிவும் இல்லாத சக்கரம்.

பரமாத்மாவிலிருந்து பிரிந்துவரும் ஜீவாத்மா மீண்டும் பரமாத்மாவிடம் ஐக்கியம் அடைகிறது. இதுவும் ஒரு சக்கரம்தான். தோற்றம் என்பதும் அழிவு என்பதும் வெறும் மயக்கமே. இறைவன் எதையும் அழிப்பதில்லை. உண்ட உணவு சமிபாடடையும்போதுதான் சக்தியாகிறது. அந்தச் சக்தியைப் பயன்படுத்தி மனிதன் உணவை உற்பத்தி செய்கிறான். உணவை அழித்து சக்தியாக்கியவன் மறுபடியும் அந்தச் சக்தியைப் பயன்படுத்தி உணவை உற்பத்தி செய்கிறான்.

கடல்நீர் ஆவியாகிறது. பின்னர் மழை முகிலாகக் கருக்கொள்ளுகிறது. மழை பொழிகிறது. மழைநீர் நதியாகக் கடலில் கலக்கிறது. மீண்டும் கடல் நீர்.....

எது ஆரம்பம்? எது முடிவு?

எல்லாமே ஒரு சக்கரம்தான்.

ஆண் - பெண் படைப்பே மற்றும் ஒரு உதாரணம். ஆண் - பெண் இணைப்பில் குழந்தைகள் தோன்றுகின்றன. அவை மறுபடியும் ஆணாகவும் பெண்ணாகவும் பிறக்கின்றன. மனித இனவிருத்தியும் ஒரு சக்கரம்போல் சுழன்றுகொண்டே இருக்கிறது. ஆன்மா பிறப்பெடுப்பதும் சுழற்சியின் ஒரு அங்கம்தான்.

*உற்சாகம் உள்ளவனை எந்த எதிர்ப்பாலும் தடைசெய்துவிட முடியாது.*

ஆகவே முற்பிறப்பின் கர்ம வினைகளை இப் பிறப்பில் நீக்கி மாற்றம் காண்பதும் சாத்தியமே. ஆன்மாவைத் தூய்மைப்படுத்த இறைவனை நாடினால் அவன் அதற்குத் துணையாக இருப்பான். கர்ம பந்தங்களிலிருந்து நாம் விடுபட விரும்பினால் இறைவன் நமக்குத் துணை இருந்து அந்த பந்தங்களிலிருந்து விடுதலை அளிப்பான் என்பதையே சாவித்திரி, மார்க்கண்டேயன் கதைகள் உணர்த்துகின்றன.

இந்தப் பிறவி நமக்கு எப்படி வேண்டுமானாலும் அமைந்திருக்கலாம். அதில் பல துன்பங்களையும் சோதனைகளையும் நாம் சந்திக்கவேண்டி நேரிடலாம். நமக்கு விதித்தது அவ்வளவுதான் என்று நாம் சோர்வடையத் தேவையில்லை. ஆண்டவன் படி அளப்பான் என்று நம்ப வேண்டும்.

ஆண்டவன் நமக்கு அளித்துள்ள ஆற்றலை வீணாக்க மாட்டோம் என்கிற முனைப்பு வேண்டும். துன்பங்கள் எதுவரினும் ஈடுகொடுக்கும் மனத்துணிவு வேண்டும். நம்மால் முடியும் என்கிற நம்பிக்கை வேண்டும். "விதி நம்மை வஞ்சித்து விட்டது என்கிற எண்ணம் கூடவே கூடாது".

கர்ம பந்தத்தின் விளைவாக ஏற்படுவது விதி என்றான். இப்பிறப்பில் நாம் பெற்றுள்ள மதியைப் பயன்படுத்தி அந்த விதியை வெல்லும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

இந்து மதத் தத்துவ ஞானங்களைக் கரைத்துக் குடித்தவர் டாக்டர் இராதாகிருஷ்ணன். பல்வேறு தத்துவ ஞானங்களையும் அலசி ஆராய்ந்தவர். விதிக்கும் மதிக்கும் உள்ள தொடர்பினை அருமையான உதாரணத்தின் மூலம் எடுத்து விளக்கியிருக்கிறார்.

சீட்டு விளையாடுகின்றபோது என்ன சீட்டுக்கள் நமக்குக் கிடைக்கும் என்பது நமக்கே தெரியாது. சீட்டுக்கள் விழுவது விதி. விழுந்த சீட்டுக்களைப் பயன்படுத்தி கெட்டிக்காரத்தனமாக விளையாடுவது மதி. மோசமான சீட்டுக்கள் விழுந்தாலும், புத்திசாலித்தனமாக விளையாடி வென்று விடுபவர்களும் உண்டு. நல்ல சீட்டுக்கள் விழுந்தாலும் தவறாக விளையாடி தோற்றுப்போகின்றவர்களும் உண்டு. இதுவே விதிக்கும் மதிக்கும் உள்ள தொடர்பு. இதைவிட அருமையாக விதிக்கும் மதிக்கும் உள்ள தொடர்பினை விளக்கிவிட முடியாது.

இறைவன் நமக்கு அளித்துள்ள அறிவையும் ஆற்றலையும் நாம் அலட்சியப் படுத்தி விதியின் சக்திக்கு பலியாகவேண்டிய அவசியம் இல்லை. இந்த உண்மையினை நாம் புரிந்துகொண்டால் கர்ம பலன்களைப் பற்றிய கவலையில் காலத்தை வீணாக்க வேண்டிய அவசியம் இருக்காது. இன்னும் சொல்லவேண்டுமானால் கர்மபலனில் நாம் வைக்கின்ற நம்பிக்கை, இந்த வாழ்க்கையை நாம் எப்படி நடத்தவேண்டும் என்பதற்கு எச்சரிக்கையாக அமைய வேண்டும். இந்த வாழ்க்கையை நமக்கும் மற்றவர்களுக்கும் பலனுள்ள வகையில் வாழ்கின்ற வழியைக் காண வேண்டும்.

இந்து மதத்தின் சிறப்பான அம்சமே வாழ்க்கையை சம நோக்குடன் பார்ப்பதற்கு வழிகாட்டியிருப்பதுதான். வாழ்க்கையில் நடக்கின்ற காரியங்களை அப்படியே ஏற்று நம்முடைய திறமையாலும் முயற்சியாலும் சாதிக்கக்கூடியவற்றை சாதித்துக்கொண்டே செல்ல வேண்டும்.

வாழ்க்கையின் நிலையாமையைப் பற்றிப் புரிந்து கொண்டு நாம் தெளிவுடன் இருந்தாலும், ஒவ்வொரு மனிதனும் இந்த உலகத்தில் வாழ்கின்றபோது தன்னுடைய அடிச்சுவடுகளை விட்டுவிட்டே மறைகிறான். எல்லோரின் அடிச்சுவடுகளும் மற்றவர்களின் கவனத்துக்கு வருவதாக அமைந்து விடுவதில்லை.

*கலங்கமற்ற மனது மிகச் சிறந்த அறிவாற்றலைவிட மேலானது.*

காலத்தின் பாதையில் சிலரின் அடிச் சுவடு களே அழியாமல் நிலைத்து விடுகின்றன. அப்படிப்பட்ட அடிச்சுவடுகளை விட்டுச் செல்லு கின்ற விதத்தில் நம்முடைய வாழ்க்கையினை யும் நாம் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஆன்மிக நிலையில் மிக உயர்ந்த நிலையில் வாழ்ந்த பெரியவர்கள் பலர் இருந் திருக்கிறார்கள். புத்தர், இராமகிருஷ்ணர், விவே கானந்தர், அப்பர், மாணிக்கவாசகர், ரமணர், வள்ளலார். நமது நாட்டில் யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், மயில்வாகனம் சுவாமி கள் என்று பெயர்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

இவர்களுடைய ஆன்மாவும் ஓர் உணர்வுக்குள் பிறப்பெடுத்து வாழ்ந்ததால் குறிப்பிட்ட பெயர்களை இவர்கள் பெற்றார்கள். இவர்களின் ஆன்ம சாதனை வரலாற்றில் அழியாத இடத்தை இவர்களுக்குக் கொடுக் கிறது.

ஆன்மிக உலகத்தில் மட்டுமின்றி ஏனைய துறைகளில் சாதனை புரிந்த பெரு மக்களும் காலத்தின் மாறாத அடிச்சுவடு களை விட்டுச் சென்று இருக்கிறார்கள்.

ஒன்றை நாம் மறந்து விடக்கூடாது. அவர்களின் ஆன்மாக்களுக்கென்று தனிப் பெயர்கள் இல்லாவிடினும் அந்த ஆன்மா ஏற்றுக்கொண்ட உடலை ஒரு பெயர் சொல்லித் தான் அழைக்கிறோம். அந்தப் பெயர்தான் வரலாற்றில் இடம்பெறுகிறது.

ஆகவே, தத்துவங்கள் எப்படி இருப் பினும் நாம் வாழ்கின்ற காலத்தில் என்ன சாதித்தோம் என்பதைப் பொறுத்தே நம்முடைய பெயர் நிலைபெறுகிறது. அதனால் நாம் வாழ் கின்ற காலத்தில் நம்முடைய வாழ்க்கையைச் செம்மையாகவும், சாதனைகள் மிக்கதாகவும், பயனுடையதாகவும் ஆக்கிக் கொள்ளுவதில் தான் நாம் எடுத்துள்ள இந்தப் பிறவியின் வெற்றியே இருக்கிறது. (தொடரும்...

## தடைகளை நீக்குவதற்கே ஆன்மீகம்

இயற்கையின் மாறுபாட்டிற்கு நற்செயல்களும் தீய செயல்களும் நேர்க்காரணங்கள் அல்ல. நீரின் போக்கிலுள்ள தடையை விவசாயி நீக்கும்போது அது தன் சொந்த இயல்பாலேயே பாய்வதுபோல், செயல்களும் இயற்கையின் பரிணாமத்திற்கான தடைகளை நீக்குகின்றன.

வயல்களுக்குப் பாய வேண்டிய நீர் ஏற்கனவே வாய்க்காலில் இருக்கிறது. மடைகளால் தடுக்கப்பட்டுள்ளது, அவ்வளவுதான். விவசாயி இந்த மடைகளைத் திறந்ததும், புவியீர்ப்பு விசையால் நீர் தானாகப் பாய்ந்து செல்கிறது.

அதுபோல் எல்லா முன்னேற்றமும் ஆற்றல்களும் ஒவ்வொரு மனிதனிடமும் ஏற்கனவே உள்ளன. நிறைநிலை, மனிதனின் இயல்பிலேயே உள்ளது. அது தன் போக்கில் வெளிப்படுவது தடுக்கப்படுகிறது அவ்வளவுதான். யாராவது அந்தத் தடைகளை நீக்கினால் இயற்கை முன்னே பாய்கிறது. அவன் தன்னிடம் ஏற்கனவே உள்ள ஆற்றல்களை அடையப் பெறுகிறான்.

தீயவர் என்று நாம் கருதுபவர்கள் தடை நீக்கப்பட்டு இயற்கை பாய்ந்தவுடன் மகான் களாகி விடுகின்றனர். நிறைநிலையை நோக்கி இயற்கையே நம்மை இட்டுச் செல்கிறது. உரிய காலத்தில் அது எல்லோரையும் அங்கு கொண்டு சேர்க்கும். ஆன்மீகத்தில் முன்னேறுவதற்கான முயற்சிகளும் பேராட்டங்களும் எல்லாம் தடைகளை நீக்குவதற்காகவே.

தடைகள் நீங்கினால் மட்டுமே போதும், நமது பிறப்புரிமையாகிய நமது இயல்பாகிய நிறைநிலையின் வாசல்கள் திறக்கின்றன.

*பெற்றுக்கொள்பவன் அல்ல, கொடுப்பவனே பேறு பெற்றவன்.*

# கதிர்காம யாத்திரை -எனது அனுபவம்- (தொடர்ச்சி...

-செல்வி சி. நிலா அவர்கள்-

உகந்தை மலை முருக தரிசனத்தை முடித்து முருகன் கருணையை மனதில் எண்ணியபடி பேருந்தில் ஏறிய அனைவரும் மறுநாள் அதிகாலை 5 மணி அளவில் செல்லக் கதிர்காமத்தைச் சென்றடைந்தோம். காலைக் கடன்களை முடித்துவிட்டு நீராடுவதற்காக மாணிக்க கங்கையில் இறங்கினோம். அற்புதமான உணர்வொன்று எமக்குள் ஏற்பட்டது. சில்லென்ற காற்று, வாகனத்தில் வந்த களைப்புக்கு நீரில் இறங்கியதும் ஓர் ஆனந்தம். விடிகாலையில் சலசலத்து ஓடும் கங்கையில் விழுந்து மூழ்கி எழும்போது



உண்டாகிய மன எழுச்சிக்கு மாற்றீடாக ஒன்றையும் சொல்லமுடியாது. எல்லோரும் கங்கையில் இறங்கியதும் எம்மை மறந்து நீராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தோம். எம்மோடு வந்தவர்களில் ஒருசிலர் நேர்த்திக்கடனுக்காக தலைமுடியை கதிர்காமக் கந்தனுக்கு அளித்து மொட்டைபோடுவதில் ஈடுபட்டார்கள். பெண்கள் ஒரு சிலர் தங்களது முடியில் சிறு பகுதியை அதற்கென கரையோரம் இருந்த தொழிலாளர்களிடம் சொல்லி வெட்டிவிட்டு நீராடினார்கள். எமை மறந்து நீராட்டத்தில் ஈடுபட்டுகொண்டிருந்தவேளை 7 மணிக்கு பிள்ளையாரின் பூசை என்பதை நினைவுறுத்தி அனைவரும் ஆலயத்துக்கு வரும்படி

துன்பத்தை சந்திக்கத் தெரிந்தவனுக்கு வாழ்க்கையில் தோல்வியே இல்லை.




கூறிவிட்டு ஆண்கள் அனைவரும் ஆலயத்தை நாடிச் சென்றார்கள். நாமும் அவசர அவசரமாக செல்லப் பிள்ளையார் ஆலயத்தைச் சென்றடைந்தோம்.



கல்வி என்பது வளமையில் ஒரு ஆபரணம், வறுமையில் ஒரு புகலிடம்.

ஆலயத்தில் பூசை வழிபாடு ஆரம்பமாயிற்று. பூசை வழிபாட்டின் இறுதியில் எமது ஆலயங்களில் பஞ்சபுராணம் ஓதுவதைப் போன்று அங்கேயும் ஒரு செயற்பாடு. பூசைக்கு உதவியாக இருந்த ஒருவர் பூசை வழிபாட்டுக்கு நின்றிருந்த அனைவரின் கைகளிலும் ஒரு பிரசுரத்தைத் தந்தார். அதில் விநாயகரைப் போற்றி "கணபதி ஓம் கணபதி ஓம்" எனும் பாடல் ஒரு பக்கம் தமிழிலும் மறுபக்கம் சிங்களத்திலும் பிரசுரிக்கப்பட்டு இருந்தது. ஏன் இதை எம் கையில் தருகின்றார்கள் என்ற வினா எம் மனதில் எழுந்தாலும் நடைபெறப் போவதை ஆவலுடன் எதிர்பார்த்தபடி பூசை வழிபாட்டில் ஈடுபட்டோம். பூசகர் எமக்குரிய அர்ச்சனை செய்வதற்கு முன்பு பிரசுரத்தில் அச்சிடப்பட்டிருந்த விநாயகர் துதியை தமிழ், சிங்களம் என்ற பேதமின்றி ஒலிபெருக்கியில் பாட அனைவரும் சேர்ந்து பாடியது இங்கே நாம் செய்யும் கூட்டுவழிபாடுபோல் இருந்தது. சுமார் ஒரு பதினைந்து நிமிடத்திற்கு மேல் அப் பிரார்த்தனை இடம்பெற்றது. இவ்விடயத்தில் என் மனதில் எழுந்த எண்ணப்பதிவை வாசகர்களாகிய உங்களோடு பகிர்ந்துகொள்வதில் தவறில்லை என எண்ணுகிறேன்.

நம் இடங்களில் நடைபெறும் ஆலய பூசை வழிபாடுகளின்போது பஞ்சபுராணம் ஓதுவதற்குப் பதில் தேவாரமும், புராணமும் பாடி அந்நிகழ்வை முடித்துக்கொள்கின்றோம். தேவார முதலிகளால் கொண்டுவரப்பட்ட பஞ்சபுராண நிகழ்வானது குறுகி வரும் காலத்தில் ஆலயங்களில் அந்நிகழ்வு இடம்பெறாமல் போய்விடுமோ என்ற ஆதங்கம்தான் எனக்கு இவ்விடயத்தை சீர்தூக்கிப் பார்க்க வைத்தது. அங்கே இறை சிந்தனையை வளர்க்கிறார்கள். முற்றுமுழுதாக தமிழர் வாழும் பிரதேசங்களில் எமக்குரிய வழிபாட்டுச் செயல்களைக் குறைத்துக்கொண்டு போவது எமது சமூகத்துக்கு நல்லதல்ல. வழிபாட்டுக்குக்கூட நேரத்தை ஒதுக்கமுடியாத நிலை எமக்கு. இவ்விடயத்தில் பெரும்பான்மை மக்கள் வாழும் பிரதேசத்தில் அவர்களோடு எம்மையும் ஈடுபடவைத்த வழிபாடானது போற்றுதற்குரியது. வழிபாடு



அஞ்சாமையைவிட நேர்மையாக இருத்தலே அழகானது.

முடிந்தபின் பூசகர் அனைவருக்கும் விபூதி, பிரசாதம் வழங்கினார்கள். நாமும் எமக்குரிய அர்ச்சனைப் பொருட்களைப் பெற்று ஆலய வளாகத்தில் வீற்றிருந்தோம். எமக்குச் சமீபமாக பபாசுவாமி அவர்களும் ஐயாவும், கவிமணி ஆனந்தராசா மற்றும் கணேசமூர்த்தி ஐயாவும்



இருந்து உரையாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஐயா நாம் ஒவ்வொரு முறை இங்கே வந்து வழிபட்டு இவ்விடத்தில் அமரும்பொழுதெல்லாம் விநாயகப் பெருமான் ஏதோ ஒரு விதத்தில் எமது களைப்பைப் போக்கும் வகையில் பிரசாதம் தந்து அனுப்புவது வழமையான செயற்பாடு. இன்றும் நாம் வந்திருக்கின்றோம். என்ன தரப் போகின்றாரோ பார்க்கலாம் என்று கூறி சிறிது நேரம் அமைதியாக இருந்தார். அப்போது நாம் அனைவரும் ஆச்சரியப்படும் படியான நிகழ்வு ஒன்று நடந்தேறியது.

ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த ஒரு அன்பர், பார்த்தால் இராணுவத்தில் பெரிய பதவியில் இருப்பவர் என்றுதான் எண்ணத்தோன்றியது. தமது பூசை வழிபாட்டை நிறைவு செய்து ஒரு பெரிய தாம்பாளத்தில் பிள்ளையாருக்குரிய நிவேதனப் பொருட்கள், கடலை, அவல், பொங்கல், பழ வகைகளை ஏந்திவந்து, "இது உங்களுக்குத்தான்" என்று கூறி ஐயாவிடம் பணிவுடன் கொடுத்தார். உண்மையில் எமது கண்முன் நடந்த விடயம். ஐயாவும் ஒன்றும் சொல்லவில்லை. எல்லோருக்கும் பகிர்ந்துகொடு என்று கூறியதுடன், நான் தனித்து வரும்பொழுதெல்லாம் சிறிதாகத் தருபவர் உங்களை எல்லாம் கூட்டிவந்ததைப் பார்த்ததும் பெரிய தட்டில் தந்திருக்கின்றார். எல்லாம் அவன் கருணை என்று சொல்லி விநாயகரை வணங்கி 5 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கதிரகாமத்தை நோக்கி எமது பிரயாணம் ஆரம்பமாயிற்று. காலை 9 மணி அளவில் நாம் தங்குவதற்கு ஒழுங்கு செய்யப் பட்டிருந்த இந்து யாத்திரிக விடுதியை அடைந்தோம். (தொடரும்...

எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யக்கூடாது.

# சங்கடம் தீர்க்கும் வேலவா

தொண்டைமானாறும் - வலிய
வேல் வெண்டையம் ஆடும்
பன்னிரு திருக்கரம் பார்த்திருக்க
பசியாலும் பசியமர நிழல் பால்வார்க்கும்.

எந்நிதியும் தரும் படைக்கலத்தால்
எம் துயர் தீரும் வினையகலும்
சந்நிதியில் கால்படவே சிந்தனைமாறும்
சிரம் குவித்து நீராடும் தேகம்.

உன்னையல்லால் வேறொருகதி
எங்களுக்கில்லை செல்வச்சந்நிதியென்று
உதடுகள் விரிய அல்லைகளில்லை
ஆர்ப்பரிக்கும் எல்லைகளில்லை.

படை கொண்டவா மெல்லிடை கொண்டவா
மடை திறந்த அன்னத்திடை கொண்டவா
சடைமுடித்த தேவனின் செல்வமே
சங்கடம் தீர்த்திட வேணுமே.

உற்சவ காலத்தில் மகிழ்ந்திருப்பாய்
ஒவ்வொரு கணமும் நிறைந்திருப்பாய்
இருப்பாய் என்றும் தமிழன் மனதில்
நெருப்பாய் என் முருகா.

– திரு க. யோகேஸ் –

பதிவு இல: QD/78/NEWS/2020

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

